www.alhasanath.lk

Design: Sinan

# அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

மலர்: 40 இதழ்: 12 டிசம்பர் 2014 ஸபர் 1436



## பொய்யை அடித்தளமாகக் கொண்ட சமூக வலைத்தளச் செயற்பாடுகள்

## மூன்றாவது இன்திபாழாவுக்கான அழைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISLAMIC MONTHLY இஸ்லாமிய இலட்சியக் குரல் 60/-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم


அல்குர்ஆன் விளக்கம் 4-6

## பார்வை கெட்டு விட்டால்...

மௌலவி எம்.எச்.எச்.எம். முனீர்

அல்ஹதீஸ் விளக்கம் 07-09

## பொய்யை அடித்தளமாகக் கொண்ட சமூக வலைத்தளச் செயற்பாடுகளும் அண்ணலாரின் எச்சரிக்கையும்

அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)

தஃவா களம் 10-12

## பயங்கரவாதம் தொடர்பில் பண்பட்டவர்களின் பார்வை

டாக்டர் கே.வி.எஸ். ஹபீப் முஹம்மத்

13-15 மஸ்ஜிதுல் அக்ஸா

பாகிஸ்தானில் மாபெரும் இஜ்திமா 19







17-18 ஷஹாதத்துல் ஹக்

அந்நிஸா

20-23 குடும்பவியல்

24-25 பில்கீஸ் பின்த் ஷராஹீல் [அலைஹஸ்ஸலாம்]

நூல் அறிமுகம்

உணர்வுகளைத் தாண்டி... 49-50

பாடசாலைப் பயிற்சிகளில் தரமத்தமா? 32-33

அல்லாஹ்வின் அருட்கொடைகள் 34-36

படைப்பாளனின் அற்புதம் 38-39

முஸ்லிம் நாடுகளில் கோயில்கள் நிர்மாணிப்பதற்கு அனுமதிக்கப்படுமா? 51-52

சிறுகதை 53-55


"(நபியே!) தமது பார்வைகளை தாழ்த்திக் கொள்ளுமாறும் தமது கற்பைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கு கூறுவீராக! இது அவர்களுக்கு பரிசுத்தமானது. அவர்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவன்."

(ஸூரதுந் நூர்: 30)


மலர்: 40 இதழ்: 12

2014 டிசம்பர் | ஸபர்: 1436

ISSN: 1391 - 460X

வெளியீடு:
இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி



தொடர்புகளுக்கு:
அல்ஹஸனாத்
77, தெமடகொட வீதி,
கொழும்பு-09, இலங்கை
தொலைபேசி :(011) 2689324,
தொலைநகல் :(011) 2686030
மின்னஞ்சல்: alhasanath@gmail.com
இணையதளம்: www.alhasanath.lk



பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.



விலை விபரம்:

**உள்நாடு:** தனிப் பிரதி: ரூபா 60.00 | வருட சந்தா: ரூபா 1050.00 | ஆறு மாதம்: ரூபா 525.00

**வெளிநாடு:** இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர், மலேசியா: 2550.00 |
மத்திய கிழக்கு நாடுகள்: 2600.00 | அவுஸ்திரேலியா, ஜப்பான், தென் கொரியா: 3300.00 |
இங்கிலாந்து, நியூசிலாந்து: 4000.00 | ஐக்கிய அமெரிக்கா, கனடா: 4700.00





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GOLDEN COLLEGE NOW @ Kandy | Thihariya | Vavuniya

Now GOLDEN COLLEGE @Thihariya

No:126, Kandy Rd, Thihariya
Madani Hajiar Building

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான பாடநெறிகள்

**Real Access Program**

இப்பாடநெறியின் மூலம் 5 தகைமைகளைப் பெறலாம்

- Diploma in Somputer studies
- Diploma in Graphic designing
- Diploma in Web designing
- Diploma in Hardware
- Diploma in English

3 மாதம் Weekly 05 Days 8:30 to 4:30

ஆங்கிலம் மற்றும் கணனிக் கல்வியை அடிப்படையில் இருந்து கற்கும் விதமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறியாகும்

பாடநெறி ஆரம்பம் Batch 01 Jan - 01 Batch 02 Jan - 15

02 சர்வதேச ISOதரச் சான்றிதழ்கள் உட்பட 07 DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும்

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் கதைக்க வைக்கும் ஒரே பாடநெறி

02 மாத முழுநேர -வதிவிட / வதிவிடமற்ற கணனி பயிற்சியுடன் கூடிய ஆங்கில பாடநெறி

தினமும் 03 மணித்தியாலத்துக்கு அதிகமான பேச்சுப் பயிற்சி

**Diploma in ENGLISH With IT**

IT· MS-OFFICE HARDWARE COMP-ACCOUNTING

-WITH GRAMMAR-
| Reading | Writing |
| Listening | Speaking |

பாடநெறி ஆரம்பம்
41st Batch Dec - 08
42nd Batch Jan - 08

Weekly 06 Days 9:00 to 4:00

பாடநெறி முடிவில் சர்வதேச ISO தரச் சான்றிதழ் உட்பட 03 Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்

**DIPLOMA IN SPOKEN ENGLISH**
WITH GRAMMAR

உங்களை ஆங்கிலத்தில் கதைக்க வைக்கும் விசேட பயிற்சிகளுடன் கூடிய

ஆங்கில பாடநெறி

Reading | Writing | Listening | Speaking

Week Day Batch
03 Months -
Monday to Thursday
(9:00am - 12:30pm)
(1:00pm - 4:00pm)

Week End Batch
04 Months -
Saturday OR Sunday
(9:00am - 2:00pm)

பாடநெறி ஆரம்பம் Batch 01 Jan - 01 Batch 02 Jan - 15

அடிப்படையிலிருந்து ஆங்கிலம் கற்பதற்கு ஏற்றவிதத்தில் வடிவமைக்கப்பட்ட பாடநெறி

ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான தங்குமிட வசதி - Hostel Available


**GOLDEN COLLEGE**

548, Peradeniya Road,Kandy.

Kandy 0777 222 529
VAVUNIYA 0777 222 527
THIHARIYA 0777 222 528




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேரினவாதத்தை எதிர்கொள்ள முஸ்லிம்கள் தயாரா?

இலங்கை அரசியலை பேரினவாத கருத்தியலே வழிநடத்தி வந்துள்ளது.

1915 சிங்கள- முஸ்லிம் இனக் கலவரத்தின் பின்னர், அரசு சிங்கள தலைவர்கள் சிலரை சிறையிட்டது. இவர்களை விடுவிப்பதற்காக சீமை சென்று போராடினார் சேர். பொன். இராமநாதன். இவர்தான் 1912இல் அமைக்கப்பட்ட சட்டசபையில் இலங்கை கல்விமான்களின் ஏக பிரதிநிதியாகத் திகழ்ந்தவர்.

1919இல் இலங்கையின் சட்ட யாப்பு திருத்தத்திற்காகப் போராட 'இலங்கை தேசிய காங்கிரஸ்' நிறுவப்பட்டது. இதன் தலைவராக இவரது சகோதரர் பொன். அருணாசலம் இருந்தார். இதில் சிங்கள, தமிழ் தலைவர்கள் இணைந்தே போராடினர்.

1920 இல் நடந்த தேர்தலில் 14 சிங்களவர்களும் 4 தமிழர்களுமே சட்ட சபைக்கு தெரிவாகினர். இதனால் மனமுடைந்த தமிழ்த் தலைமைகள் 'இலங்கைத் தமிழர் லீக்' ஐ உருவாக்கி, பிரத்தியேகமான வேண்டுகோள்களை விடுத்தனர்.

1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்த பின், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைத்தது. அதில் ஜே.ஆர். ஜயவர்தனவும் ஓர் அங்கத்தவராயிருந்தார். இவர் 1944 ஆம் ஆண்டிலேயே சிங்கள மொழி அரச கரும மொழியாக ஆக்கப்படல் வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார்.

1956 இல் ஐ.தே.க வின் அங்கத்தவராயிருந்த எஸ்.டப்ளியு.ஆர்.டி. பண்டாரநாயக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கி ஆட்சியைக் கைப்பற்றினார். "சிங்கள மொழியை 24 மணி நேரத்துக்குள் தேசிய மொழியாக ஆக்குவேன்" என்ற கோஷமே அவரைப் பிரதமராக்கியது. தமிழுக்கும் உரிய இடம் தருவதாக அவர் வாக்களித்தார். தமிழ் தலைமைகள் பொங்கியெழுந்தன. தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவரான ஜி.ஜி. பொன்னம்பலம் 50-50 கோரிக்கையை முன்வைத்தார். எஸ்.ஜே.வி. செல்வ நாயகம் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்து தமிழ் மக்களுக்கென சமஷ்டி ஆட்சியொன்றைக் கோரினார். பிரதமர் எஸ்.டப்ளியு.ஆர்.டி. பண்டார நாயக்கவுடன் ஒப்பந்தம் ஒன்றுகூட செய்யப்பட்ட நிலையில், பேரினவாத சக்திகள் பிரதமரின் வீட்டை முற்றுகையிட்டன. இறுதியில் அவ்வொப்பந்தத்தைக் கிழித்தெறிய பிரதமர் நிர்ப்பந்திக்கப்பட்டார். ஒரு பிக்குவாலேயே சுடப்பட்டு, அவர் 1959இல் உயிர் நீத்தார்.

பின்னர் ஆட்சிபீடமேறிய அவரது பாரியார் சிறீமா அம்மையார் 1972 இல் தனிச் சிங்கள அரசியல் யாப்பைக் கொண்டு வந்தார் என்ற குற்றச்சாட்டும் உண்டு.

1977இல் பிரதமரான ஜே.ஆர். ஜயவர்தன 'உலகமயமாக்கல்' எனும் கொள்கையின் கீழ் திறந்த பொருளாதாரத்தை அமுல்படுத்தினார். பேரினவாதிகள் இவரது கொள்கையை எதிர்த்தபோது "பிக்குகள் பன்சலைக்குள் இருந்து பௌத்த மதத்தை வளருங்கள்; நாங்கள் அரசியலைப் பார்த்துக் கொள்கிறோம்" எனக் கூறிவிட்டார். இவரே நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஏற்படுத்தி, தானே ஜனாதிபதியாக ஆட்சி புரிந்தவர்.

தமது அந்தஸ்தை படிப்படியாக இழந்து வந்த தமிழ் மக்கள் தனி நாடு கோரி ஆயுதப் போராட்டத்தில் குதித்தார்கள். இறுதியில் அவர்களை வென்று, பேரினவாதிகள் மத்தியில் நீங்கா இடம் பிடித்துக் கொண்டார் இன்றைய ஜனாதிபதி. புலிகளுக்கெதிரான ஆயுதப் போராட்டத்தை வழிநடத்துவதில் உரமூட்டிய பேரினவாதச் சக்திகள் யுத்த வெற்றியின் பின் முஸ்லிம்களுக்கு எதிராகத் திரும்பின. அவற்றின் மற்றுமொரு சக்தியாக பொது பல சேனா அமைப்பு தோற்றம் பெற்றது. அவ்வமைப்புக்கு அரசின் ஆதரவும் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், ஹெல உறுமய அரசிலிருந்து வெளிநடப்புச் செய்துள்ளது.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை, அதன் தலைவர்கள் இரு பெரும் கட்சிகளிலும் அங்கம் வகித்து, சமூகத்துக்காக அல்லது தனி நபர்களுக்காக அற்ப சலுகைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே செயல்பட்டனர். அஷ்ரஃப் அவர்களின் வருகை முஸ்லிம் காங்கிரஸ் எனும் தனிக் கட்சியைத் தோற்றுவித்தது. சிங்கள-தமிழ் போராட்டத்தின் போதுகூட, முஸ்லிம் சமூகம் நடுநிலை பேணி, பாரிய இழப்புகளை அடைந்தது. எனினும், முஸ்லிம்களுக்கென ஒரு 'பொதுக் கொள்கை' உருவாகவில்லை. இன்றுவரை இந்நிலையே நீடிக்கின்றது. பௌத்த தேசியவாதத்தின் குரல் இன்று இரு பக்கத்திலிருந்தும் ஓங்கி ஒலிக்கும்போது முஸ்லிம்களோ மௌனம் காக்க வேண்டிய சூழலே உருவாகியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கான விடியலை வகுத்தளிக்கவே முன்வந்ததெனினும், வாக்குகளுக்காக அது தேசிய நீரோட்டத்தில் கரைந்து செல்கிறது.

இன்று வரை முஸ்லிம்களுக்கென ஒரு தீர்வை, இஸ்லாத்தின் கொள்கைகளை முன்வைத்து முன்மொழிய எவரும் முன்வராத நிலையில் சமூகம், தொடர்ந்தும் இரு கட்சி வாதங்களையும் தமக்குள்ளேயே மோதவிட்டு, தனக்கென ஒரு நிலைப்பாடில்லாத நிலையிலுள்ளது.

அல்லாஹுத் தஆலா ஒரு சமூகத்தை உயர்த்தக் கருதினால் அவர்கள் மத்தியில் இருந்து ஒரு சிறந்த தலைவரை ஏற்படுத்துகிறான். அவரைத்தான் இன்னும் எமது சமூகம் எதிர்பார்த்து நிற்கிறது.

*"(மனிதர்களே!) உங்களில் விசுவாசம் கொண்டு, நற்கருமங்களையும் செய்கிறார்களே அத்தகையவர்களுக்கு அவர்களுக்கு முன் சென்றவர்களை அதிபதிகளாக்கிய பிரகாரமே, இவர்களையும் நிச்சயமாக பூமிக்கு அதிபதிகளாக ஆக்கி வைப்பதாகவும் அவன் அவர்களுக்கு பொருந்திக் கொண்ட மார்க்கத்தில் அவர்களை நிச்சயமாக உறுதிப்படுத்தி வைப்பதாகவும் அவர்களுடைய பயத்திற்குப் பிறகு அமைதியைக் கொண்டு நிச்சயமாக மாற்றிவிடுவதாகவும் அல்லாஹ் வாக்களித்துள்ளான்..."* *(24: 55)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*"(நபியே!) தமது பார்வைகளை தாழ்த்திக் கொள்ளுமாறும் தமது கற்பைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கு கூறுவீராக! இது அவர்களுக்கு பரிசுத்தமானது. அவர்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவன்."*

*(ஸூரதுந் நூர்: 30)*

# பார்வை கெட்டு விட்டால்...

மௌலவி எம்.எச்.எம். முனீர், அதிபர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி, புத்தளம்

அல்குர்ஆனின் 24வது அத்தியாயமாகிய ஸூரதுந் நூரின் 30வது இவ்வசனம் தூய சமூக அமைப்பை நிலைநாட்டுவதையே இலக்காகக் கொண்ட முஸ்லிம் சமூகத்தின் இலட்சியவாத நகர்வில் ஏற்படும் பாரிய ஆபத்துக்கள் குறித்து எச்சரித்து, மனிதர்களை நெறிப்படுத்துகிறது.

ஒரு தனி மனிதன் அல்லது சமூகம் தனது பன்முக இருப்புக்களை உறுதி செய்து, பலப்படுத்தி இனிமை, மகிழ்ச்சி, அமைதி, ஆனந்தத்துடன் வாழ விரும்புகிறது. இவற்றுக்கு பலத்தையும் உறுதித்தன்மையையும் வழங்குவதே அதனது ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய வாழ்வாகும்.

மனிதனுக்கு ஏற்படும் தாகம், பசி, களைப்பு, தூக்கம் முதலான உடலியல் தேவைகளை விட வித்தியாசமானதும் சுயகௌரவம், கண்ணியம், உயர் கட்டுப்பாடுகளுடன் பரிமாறப்படும் இயல்பூக்கமே பாலியல் தேவையாகும். இஸ்லாம் மனிதனை எவ்வளவு பெரிய ஆத்மிக உலகுக்குள் அழைத்துச் சென்றபோதும் அவனை உள்ளுணர்வுகளுடன் கூடிய விலங்கியல் தன்மையுடன் சிகரத்தில் வைத்து மதித்து மிக உயர்ந்ததொரு வாழ்வொழுங்குக்கு வழிகாட்டியுள்ளது.

மனிதர்கள் தமது எதிர்ப் பாலினரின் கவர்ச்சியால் ஏற்படும் உணர்வுகளை முறையாக கையாளத் தவறும்போது அல்லது முறையற்ற பால் கவர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. அல்லாஹ் மனிதர்களை அழகாக வடிவமைத்தான். அவனுக்கு பகுத்தறிவின் முதிர்ச்சிகளை ஏற்படுத்தினான். வெட்கம், நாணம் முதலான இயல்புத் தன்மைகளை ஏற்படுத்தினான். அதற்கப்பால் மனிதர்களின் வாழ்வு சிறப்பாக அமைய தனது தூதர்கள் மூலம் வழி காட்டினான். கால்நடைகளைப் போல் மனிதர்கள் வாழ்வதை அவன் ஒரு போதும் விரும்புவதில்லை.

எப்போது ஒரு மனிதன் தனது பாலியல் தேவைகளை சட்டவிரோதமாக நிறைவேற்ற முற்படுகின்றானோ அதனை வெறுக்கத்தக்க, மானக்கேடான விடயம் என அல்குர்ஆன் இருபத்தி நான்கு இடங்களில் கூறியுள்ளது.

*"வெளிப்படையானதும் இரகசியமானதுமான வெட்கக்கேடான விடயங்களை எனது இரட்சகன் ஹராமாக்கியுள்ளான் என நபியே கூறுவீராக!"*

*(அஃராப்: 33)*

இம்மானக்கேடான விடயத்திற்கு தூண்டுதலாக அமையக்கூடிய பிழையான, தவறான பார்வைகள் குறித்தே நாம் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொண்ட அல்குர்ஆன் வசனம் பேசுகின்றது.

"(நபியே!) தமது பார்வைகளை தாழ்த்திக் கொள்ளுமாறும் தமது கற்பைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கு கூறுவீராக! இது அவர்களுக்கு பரிசுத்தமானது. அவர்கள் செய்வதை அல்லாஹ்

**குறுக்கிடும் அசிங்கங்களிலும் முயன்று காணும் அசிங்கங்களிலும் பார்வைகளைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய இளைய சந்ததியினரைக் கொண்டதாக முஸ்லிம் சமூகம் இருக்க வேண்டும். பிழையானவற்றிலிருந்து தமது பார்வைகளைப் பாதுகாத்துக் கொண்டவர்கள் பல்வேறுபட்ட அருட் பாக்கியங்களைப் பெற்றுக் கொள்வார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கறிந்தவன்." (அந்நூர்: 30)

மிக உயர்ந்த மகத்தான சிந்தனையை விளங்கி அதனைப் பூரணமாக விசுவாசித்தவர்கள் தமது நம்பிக்கையால் கூர்மைபெற்று அது சார்ந்த செயல்திறன் மிக்கவர்களாக, அதன் பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக்காக்கின்ற வர்களாக இருக்க வேண்டியவர்கள். எனவே, நீங்கள் பாலியல் வேட்கையைத் தூண்டக்கூடிய உங்களுக்கு தடுக்கப்பட்டவற்றைப் பார்க்க வேண்டாம். அவ்வாறான சூழல் குறுக்கிடும்போது பார்வையைத் தாழ்த்திக் கொள் ளுங்கள்; வெட்க உணர்வுகளுடன் உங்களது பார்வையைப் பாதுகாத்துக் கொள்ளும் வலிமையைப் பெற்றுக் கொள் ளுங்கள்.

முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஷுஐப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

"ஓர் ஆண் அடுத்த ஆணின் மறை உறுப்பையோ ஒரு பெண் மற்றொரு பெண்ணின் மறை உறுப்பையோ பார்க்க வேண்டாம்." (முஸ்லிம்)

வெட்கமும் நாணமும் அற்றவர்களே அடுத்தவர்களின் இரகசியங்களை, மறையுறுப்புக்களை பார்க்க முற்படு வார்கள். தன் பால் சார்ந்தவர்களின் மறையுறுப்புக்களை பார்க்கக் கூடாது என்பது போலவே எதிர்ப்பால் பார்வை களும் தடுக்கப்பட்டவையாகும். அவ்வாறே தமது மறை யுறுப்புக்களை வெளிக்காட்ட முற்படுவதும் மிருகத்தன மான செயலாகும்.

ஜரீர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக் கின்றார்கள்: (அந்நிய பெண்கள் மீது) திடீரென பார்வைப் படுவது பற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் கேட்டேன். அதற்கு "உமது பார்வையத் திருப்பிக் கொள்வீராக" எனப் பதில் கூறினார்கள். (முஸ்லிம்)

அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கி றார்கள். "உயிர் வாழும் அல்லது மரணித்த மனிதனின் தொடையப் பார்க்க வேண்டாம்." (அபூதாவூத்,இப்னுமாஜா)

இவ்வாறு மிகக் பலமாக பார்வையைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு அல்குர்ஆனும் சுன்னாவும் வலியுறுத்து கின்றன.

வரலாறு நெடுகிலும், தனி மனிதர்களும் மனிதக் குழுக்களும் இவ்வாறான முறைகேடான செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளபோதிலும் தற்கால வாழ்க்கை முறை யில் என்றுமில்லாதவாறு மனிதர்களிடமுள்ள தீய குணங் களில் ஒன்றுதான் அசிங்கங்களை, நிர்வாணக் காட்சிக ளைப் பார்ப்பதும் பரிமாறிக் கொள்வதுமாகும். இன்று இது சர்வ சாதாரணமாக எவ்வித வெட்கம், ரோஷமு மின்றி இளைஞர், யுவதிகளுக்கு மத்தியில் பல்கிப் பெருகி வருவதை அவதானிக்க முடிகிறது. இது ஒரு சர்வ அழிவுக்கே வழிவகுக்கும். குறுக்கிடும் அசிங்கங்களிலும் முயன்று காணும் அசிங்கங்களிலும் பார்வைகளைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய இளைய சந்ததியினரைக் கொண்டதாக முஸ்லிம் சமூகம் இருக்க வேண்டும். பிழையானவற்றி லிருந்து தமது பார்வைகளைப் பாதுகாத்துக் கொண்டவர்கள் பல்வேறுபட்ட அருட் பாக்கியங்களைப் பெற்றுக் கொள்வார்கள். இமாம் ஸுயூத்தி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் தடுக்கப்பட்டவற்றிலிருந்து பார்வையைத் தாழ்த்திக் கொள்வதனால் ஏற்படும் நல்ல விடயங்களை பின்வருமாறு விபரிக்கின்றார்கள்:

1. ஓர் அடியான் இம்மை, மறுமை வாழ்வின் சுபிட் சத்தை அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமே பெற்றுக் கொள்கின்றான். பார்வையைத் தாழ்த்திக் கொள்வோர் அவ்வாறான கட்டளைகளுள் ஒன்றைப் பின் பற்றியவர்களாவர்.

2. பார்வையைத் தாழ்த்துவது ஒரு மனிதனை அழிவுக் குள்ளாக்கும் காரணியைத் தடுத்து விடுகிறது.

3. உள்ளத்தை அல்லாஹ்வோடு இணையச் செய்து இறை நேசத்தைப் பாராட்டும் நிலையை ஏற்படுத்தி விடுகிறது. பிழையான பார்வை அல்லாஹ்வுக்கும் அடியானுக்கு மிடையில் வெறுமையை ஏற்படுத்தி விடும்.

4. பிழையான பார்வை அடியானைப் பலவீனப்படுத்தி கவலையுறச் செய்வது போல் பார்வையைத் தாழ்த்திக் கொள்வது உள்ளத்தைப் பலப்படுத்தி மகிழ்ச்சியுறச் செய்கிறது.

5. பார்வையைத் தாழ்த்துபவன் அல்லாஹ்வின் ஒளியை, பிரகாசத்தை தனக்குள் அனுபவிக்கும் நிலையைப் பெறு வான். அல்லாஹ்வின் ஒளி ஓர் அடியானின் உள்ளத்தில்

**பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளும் உள்ளங்கள் துணிவை, சலனமற்ற உறுதிப்பாட்டை, பலத்தைப் பெற்றுக் கொள்ளும். கண்களும் உள்ளமும் ஒன்றுக்கொன்று தூண்டல் கருவிகளாக இருக்கின்றன. ஒன்று சீராகி விட்டால் மற்றையது சீராகிவிடும், ஒன்று கெட்டால் மற்றையதும் கெட்டுவிடும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிரும்போது அவன் அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுபவனாகவும் தடுக்கப்பட்டவற்றைத் தவிர்ந்து கொள்பவனாகவும் அனைத்து நல்லவற்றை நிறைவேற்றும் தன்மையைப் பெற்றவனாகவும் ஆகின்றான்.

6. பார்வையைத் தாழ்த்துபவன் உண்மையான திட்சண்யத்தின் அனந்தரக்காரனாகி விடுகின்றான். இதுபற்றி அறிஞர் கர்மாணி (றஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகையில் ஒருவனின் வெளித் தோற்றம் சுன்னாவைப் பின்பற்றுவதாகவும், அவனது அந்தரங்கம் தொடர்ச்சியான இறைத் தொடர்புள்ளதாகவும் இருக்க வேண்டும் என்கின்றார். தடுக்கப்பட்டவற்றிலிருந்து தனது பார்வையைத் தாழ்த்திக் கொள்பவனாகவும் இச்சைகளிலிருந்து தன்னைத் தடுத்துக் கொள்பவனாகவும் ஹராமான உணவுகளை உட்கொள்ளாதவனாகவும் வாழ்வை ஆக்கிக் கொள்பவன் தீட்சண்யத்தை இழக்க மாட்டான்.

ஓர் அடியான் அவன் செய்யும் நல்லவற்றுக்கு ஏற்ப கூலி கொடுக்கப்படுவான். ஆனால், அல்லாஹ்வுக்காக தடுக்கப்பட்ட ஒன்றை விட்டுவிட்டால் அதற்கு ஈடாக, மாற்றீடாக அதை விடச் சிறந்ததை அல்லாஹ் வழங்குகின்றான். யார் பார்வையைத் தாழ்த்திக் கொள்கின்றாரோ அவனுக்கு அல்லாஹ் ஆழ்ந்த விளக்கத்தில், கல்வியில், அறிவில், ஈமானில் திட்சண்யக் கதவுகளைத் திறந்து விடுவான்.

7. பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளும் உள்ளங்கள் துணிவை, சலனமற்ற உறுதிப்பாட்டை, பலத்தைப் பெற்றுக் கொள்ளும்.

8. ஷைத்தான் உள்ளத்துக்குள் நுழைவதை விட்டும் தடுக்கப்பட்டு விடுவான். கெட்ட பார்வைகளினூடாவே ஷைத்தான் உள்ளத்துக்குள் நுழைகின்றான்.

9. நல்ல விடயங்களை சிந்திப்பதற்கும் ஈடுபாடு காட்டுவதற்கும் உள்ளத்துக்கு இடம் கிடைத்து விடுகிறது.

10. கண்களும் உள்ளமும் ஒன்றுக்கொன்று தூண்டல் கருவிகளாக இருக்கின்றன. ஒன்று சீராகி விட்டால் மற்றையது சீராகிவிடும். ஒன்று கெட்டால் மற்றையதும் கெட்டுவிடும்.

ஈமான் கொண்ட ஆண்களையும் பெண்களையும் நோக்கி அல்லாஹ் இட்ட கட்டளை இவை. இப்பண்பாட்டு ஒழுக்க விழுமியம் சார்ந்த இவ் விவகாரம் எமது சகல பரந்துபட்ட தளங்களிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை கவனத்தில் கொள்வோமாக. எமது சிறார்கள், இளைஞர், யுவதிகளையும் ஏனையோரையும் அல்குர்ஆன் மற்றும் தொழுகை மூலம் மானக் கேடான விடயங்களிலிருந்து பாதுகாப்பதற்கான வேலைத் திட்டங்களை சிந்திப்போமாக! ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யை அடித்தளமாகக் கொண்ட சமூக வலைத்தளச் செயற்பாடுகளும் அண்ணலாரின் எச்சரிக்கையும்

**அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி), விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி, புத்தளம்

**நாவு இருக்கிறது எதனையும் பேசலாம்! பேனா இருக்கிறது எதனையும் எழுதலாம்! சமூக வலைத்தள அறிவு இருக்கிறது எதனையும் பதியலாம்! என அசட்டுத் துணிவுடன் தொழிற்படுகின்றவர்கள் மறுமை விசாரணைக்குப் பயந்து கொள்வார்களா?!**

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"ஒரு மனிதன் தான் செவிமடுத்ததை எல்லாம் (ஊர்ஜிதப்படுத்தாமல்) பேசுவ தானது அவன் பொய்யன் என்பதற்கு போதுமானதாகும்."

(ஸஹீஹு முஸ்லிம்)

இஸ்லாம் வன்மையாகக் கண்டித்து, தடை செய்துள்ள படுமோசமான பண்பாடே பொய்யுரைத்தலாகும். பொய்யுரைத்தல் நயவஞ்சகத்தனமாகும். அதாவது உள்ளத்தில் ஊற்றெடுத்த கருத்து நிலைகளுக்கு அப்பால் நின்று வேறொன்றை நாவினால் மொழிதல் அப்பழுக்கற்ற நயவஞ்சகத்தனமேயாகும். மறு உலகில் நரகப் பெரு நெருப்பில் இறை நிராகரிப்பாளர்களை விட முனாபிகீன்கள் அடித்தளத்தில் இருப்பார்கள் என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

"நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரகப் பெரு நெருப்பின் அடித்தளத்தில் இருப்பார்கள். அவர்களுக்கென்று ஓர் உதவியாளரை நீர் காணமாட்டீர்."

(அந்நிஸா: 145)

ஒருவரை பொய்யர் என நாம் அளவீடு செய்வதற்குரிய அடிப்படையான அளவுகோல் அவர் அடிப்படை ஆதாரங்கள் எதுவுமின்றி தனக்குக் கிடைத்த தகவல்களையெல்லாம் பரிவர்த்தனை செய்வதாகும். சமூகத் தளத்தில் தனது பிரதிமையை (Image) தொடர்ந்தும் பராமரித்து வருவதற்காவே இவ்வாறு அவர் பொய்யுரைக்கின்றார். தன்னால் பரப்பப்படுகின்ற தகவல் சமூகச் சூழலில் எல்லோருக்கும் முதலில் சென்றடைய வேண்டும்; தன்னை பலரும் சிலாகித்துப் பேச வேண்டும் என்பதே இவரது நோக்கமாகும். தன்னிடம் வந்து சேர்ந்துள்ள தகவல்களின் நம்பகத்தன்மையை உறுதிசெய்து கொள்கின்ற விழுமியம் இவரிடம் அறவே இருக்க மாட்டாது. இத்தகைய பண்பு நிலையை அல்குர்ஆன் வன்மையாகக் கண்டிப்பதோடு, அதனை ஒரு பாவமாக அறிமுகம் செய்கின்றது.

"இறை விசுவாசிகளே! ஒரு பாவி உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால் அந்தச் செய்தியின் நம்பகத்தன்மை தொடர்பில் தெளிவைப் பெற்றுக் கொள்ளுங்கள்...

(ஸூரா அல்ஹுஜுராத்: 06)

முஸ்லிம் சமுதாயத்தின் அமைதியும் நிம்மதியும் பாதுகாப்பும் ஆரோக்கியமான தகவல் பரிவர்த்தனையைச் சார்ந்துள்ளன. சமூக உறுப்பினர்களுக் கிடையே நிகழுகின்ற தகவல் பரிமாற்றம் பொய்யையும் அவதூறையும் அடித்தளமாகக் கொண்டு நிகழுமேயானால் அங்கு பாதுகாப்பை நாம் எதிர்பார்க்க முடியாது. இத்தகைய தகவல் பரிமாற்றத்தின் மூலம் உள்ளங்களுக்கிடையே விரிசல் ஏற்படுகின்றது; சகோதரத்துவம் தகர்த்தழிக்கப்படுகின்றது; வீண் சந்தேகங்களும் ஊகங்களும் அதிகரிக்கின்றன. புறமும் கோளும் குறித்த சமூகத்தில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதன் மூலம் சமூகப் பிளவும் பிரிவினையும் உருவாகின்றன. குறித்த சமூகம் ஆரோக்கியத்தை இழந்து விடுகின்றது.

இக்கால சூழலில் ஒரு தனிமனிதன் தனக்கு பரிச்சயமான ஊடக சாதனம் மூலம் தான் வாழுகின்ற சமூகச் சூழலில் பாரியதொரு தாக்கத்தை விளைவிக்க முடியும். ஏனெனில், இன்று ஊடகங்களின் ஆட்சிப் பிரதேசத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம். எமது வாழ்வின் எல்லாத் துறைகளிலும் அதனது பாதிப்புக்களை நாம் நன்றாக அவதானிக்க முடிகின்றது. ஒரு தனி மனிதனின் சிந்தனைப் பாங்கை, மனப் பாங்கை மற்றும் அவனது நடத்தையை வடிவமைப்பதில் அதனது வகிபாகம் அலாதியானது. இன்று அச்சு ஊடகங்களை விட இலத்திரனியல் ஊடகங்களால் ஏற்படுகின்ற தாக்கங்கள் பாரியதாகும். குறிப்பாக சமூக வலைத்தளங்கள் (Social Media) மனித மேம்பாட்டுக்கு உதவுவதை விட மனித வாழ்வில் எதிர்மறையான விளைவுகளை தோற்றுவிப்பதில் முன்னிலை வகிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

**யதார்த்தத்தில் சமூக வலைத்தளங்கள் நமது ஒழுக்க மாளிகையை துண்டு துண்டாக தகர்த்து வருகின்றன. அவை பொழுதுபோக்குத்தனத்தை சந்தைப்படுத்துகின்ற சாதனங்களாக மாறியுள்ளன. சமூக முன்னேற்றத்திற்கான முற்போக்கான கருத்துக்களை, ஆலோசனைகளை, சிந்தனைகளை, ஆக்கபூர்வமான விமர்சனங்களை விநியோகிக்க வேண்டிய இத்தகைய சமூக வலைத்தளங்கள் பொய்யை அடித்தளமாகக் கொண்டு தொழிற்படுகின்றன. ஒரு தனி மனிதனதும் ஒரு குடும்பத்தினதும் மற்றும் சமூக நிறுவனம் ஒன்றினதும் மானத்தில் கைவைக்க சிறிதளவும் தயங்குவதில்லை.**

உண்மையில் முகநூல் (Face book), twitter, Whatsapp,Telegram, முதலான சமூக வலைத் தளங்கள் மனிதனுக்கு அல்லாஹ் வழங்கிய அருள் வளங்களாகும். இவ்வருள் வளங்கள் சாபத்திற்குரியவை அல்ல. அவை பெறுமான மிக்கவை. இவை கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட துரிதமான தகவல் பரிமாற்றம் உலகில் இராட்சத மாற்றங்களுக்கு வழிவகுத்தன. உண்மையில் முஸ்லிம் சமூகம் கண்டுபிடிப்பின் சொந்தங்களாக இன்னும் தன்னை தரம் உயர்த்திக் கொள்ளவில்லை. இன்று வரை நுகர்வுச் சமூகமாகவே வாழ்ந்து வருகின்றது. சமூக வலைத் தளங்கள் எனும் அருள் வளத்திற்காக நாம் இறைவனுக்குச் செய்யும் கைமாறு என்ன? உண்மையில் மேற்படி சமூக வலைத் தளங்களை துஷ்பிரயோகம் செய்யாது அதனுடன் விழுமியம்சார் தொடர்புகளைப் பேணுவதே பொருத்தமான நன்றிக் கடனாகும்.

யதார்த்தத்தில் சமூக வலைத்தளங்கள் நமது ஒழுக்க மாளிகையை துண்டு துண்டாக தகர்த்து வருகின்றன. அவை பொழுதுபோக்குத் தனத்தை சந்தைப்படுத்துகின்ற சாதனங்களாக மாறியுள்ளன. சமூக முன்னேற்றத்திற்கான முற்போக்கான கருத்துக்களை, ஆலோசனைகளை, சிந்தனைகளை, ஆக்கபூர்வமான விமர்சனங்களை விநியோகிக்க வேண்டிய இத்தகைய சமூக வலைத்தளங்கள் பொய்யை அடித்தளமாகக் கொண்டு தொழிற்படுகின்றன. ஒரு தனி மனிதனதும் ஒரு குடும்பத்தினதும் மற்றும் சமூக நிறுவனம் ஒன்றினதும் மானத்தில் கைவைக்க சிறிதளவும் தயங்குவதில்லை.

சமூக வலைத்தளங்களை லாவகமாக பயன்படுத்தக் கூடிய தொழில்நுட்பத் திறன் படைத்த மனிதர்கள் விழுமியம்சார் ஊடக செயற்பாடு பற்றிய அறிவின்மையின் காரணமாக செய்திகளை புனைந்துரைத்து பதிவேற்றம் செய்கின்றனர். பொதுவாக ஊடகச் செயற்பாட்டை பார்த்தல், கேட்டல், பதிவு செய்தல் என்று வரையறை செய்யலாம்.

மேற்படி செயற்பாட்டின் நம்பகத்தன்மையை உறுதி செய்யாமல் ஒரு சிலர் சமூக வலைத்தளங்களில் தகவல்களை பரிமாற்றம் செய்வது பொய்யுரைத்தல் என்ற படுமோசமான பண்பை பிரதிபலிக்கின்றது. ஒரு தனி மனிதனின் ஆளுமையை இயன்றவரை காயப்படுத்தி அல்லது ஓர் இஸ்லாமிய அமைப்பினது தஃவாப் பணியை காட்டமாக விமர்சித்து அல்லது ஒரு சமூக நிறுவனத்தின் நிர்வாகச் செயற்பாட்டை கொச்சைப்படுத்தி அது குறித்த ஊகங்களையும் அவதூறுகளையும் பரப்புவதில் இத்தகைய மனிதர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. இது இஸ்லாமிய ஷரீஆவின் நிலைக்களனில் கிரிமினல் குற்றம் என்பதை இவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. மார்க்கப் பணிக்காக தமது ஆயுட் காலத்தின் பெரும்பான்மையான பகுதிகளை அர்ப்பணித்து பாடுபட்டு உழைக்கின்ற ஆளுமைகளுக்கு எதிராக இந்த சமூக வலைத்தளங்கள் சுமந்து வருகின்ற அபத்தமும் ஆபாசமும் தூஷணமும் கலந்துள்ள விமர்சனங்களுக்காக அல்லாஹ்விடம் உள்ள நீதிமன்றில் குற்றவாளிகளாக நிறுத்தப்படுவார்கள் என்பதை இவர்கள் உணர மாட்டார்களா?

பார்க்காததை பார்த்ததாக, கேட்காததை கேட்டதாக மிகைப்படுத்தி பதிவு செய்தல் அண்டப் புளுகு மட்டுமல்ல, அது ஒரு நயவஞ்சகத்தனம். நபி (ஸல்லல்லலாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"ஒரு மனிதர் தனது இரு கண்களும் காணாததை அவற்றைக் கண்டதாகத் காண்பிப்பது மா பெரிய புனைந்துரைப்பாகும்." (ஸஹீஹுல் புகாரி)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

"நயவஞ்சகனின் அடையாளம் மூன்றாகும்: பேசினால் பொய்யுரைப்பான், வாக்குறுதி அளித்தால் மாறு செய்வான், நம்பினால் மோசடி செய்வான்." (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹு முஸ்லிம்)

பொய்யுரைத்தலும் அவதூறும் வீண்பழி சுமத்தலும் சந்தேகங்களைக் கிளறி விடுதலும் மேற்படி வலைத் தளங்களில் ஈடுபாடு காட்டுகின்றவர்களுக்கு பொழுது போக்காக தெரியலாம். ஆனால், அல்லாஹ்வின் பார்வையில் இவை பாரதூரமான குற்றங்களாகும்.

*"அவதூறு கூறுதலை நீங்கள் சாமான்யமானதாகக் கருதுகிறீர்கள். (ஆனால்) அது அல்லாஹ்விடத்தில் பாரதூரமானதாகும்." (ஸூரா அந்நூர்: 15)*

ஒரு பொய்யை திரும்பத் திரும்ப மெருகூட்டி பரப்புகின்றபோது அது உண்மையானதாக மக்களால் உள்வாங்கப்படக் கூடிய சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. இதன் போது இவ்விழிவான செயற்பாடுகளை முன்னெடுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றவர்கள் தாங்கள் வெற்றிக் கம்பத்தை எட்டிப் பிடித்து விட்டதாக இறுமாப்படைகின்றனர். இவர்களை அல்லாஹ் தனது திருமறையில் பின்வருமாறு எச்சரிக்கின்றான்:

"இறைவிசுவாசிகளுக்கு மத்தியில் மானக்கேடான பாவம் பரவலாக வேண்டுமென்று விரும்புகின்றவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நோவினை தரும் வேதனை உண்டு..." *(அந்நூர்: 19)*

பொய்யும் புரட்டும் அவதூறும் நிரம்பி வழிகின்ற மேற்படி சமூக வலைத்தளங்களில் நறுமணம் கமழுவதில்லை. ஏனெனில், அவை ஒரு குப்பை மேடாக அல்லது கசாப்புக்கடையாகவே உருமாறி இருக்கின்றன. அங்கே துர்நாற்றம் வீசுகின்றது. பொய்யின் சொந்தபந்தங்களை விட்டும் வானவர்கள் கூட விலகி நிற்கின்றனர். "ஓர் அடியான் பொய்யுரைத்தால் அவன் கொண்டு வந்த பொய்யின் காரணமாக அவனை விட்டும் ஒரு வானவர் ஒரு மைல் தூரம் விலகி விடுகின்றார்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

மலக்குகளின் ஆசீர்வாதத்திற்கு உட்படாத பகுத்தறிவும் புலனறிவும் வளமானதாக அமைய முடியுமா? அல்லாஹ் மனிதனுக்கு வழங்கிய அறிவு பெறுவதற்குரிய சாதனங்களாகிய பகுத்தறிவும் புலனறிவும் அவனால் அவனது நீதிமன்றில் நிச்சயமாக விசாரணைக்கு உட்படுத்தப்படும்.

"(நபியே!) நீர் அறிவில்லாத விடயத்தை பின்தொடராதீர். நிச்சயமாக செவிப்புலன், பார்வைப் புலன், உள்ளம் உள்ளிட்ட அனைத்தும் விசாரணைக்கு உட்படுத்தப்படும்." *(ஸூரா அல்இஸ்ரா: 36)*

மேற்படி திருமறை வசனம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை விழித்துப் பேசுகின்றது. அதாவது நபியவர்களின் செயற்பாடுகள் அனைத்தும் அறிவின் வெளிச்சத்தில் முன்னெடுக்கப்படுதல் வேண்டும் என்பது அல்லாஹ்வின் தீர்ப்பாகும். அறியாமையை மற்றும் பொய்யை அடித்தளமாகக் கொண்டு தகவலைப் பெறுவதும் அதனை விநியோகம் செய்வதும் ஹராமாகும். இவ்வாறான ஈனத்தனமான ஊடக முன்னெடுப்புக்கு பின்புலத்தில் இருந்த புலனறிவும் பகுத்தறிவும் நிச்சயமாக விசாரணைக்கு உட்படுத்தப்படும். எனவே, நாவு இருக்கிறது எதனையும் பேசலாம்! பேனா இருக்கிறது எதனையும் எழுதலாம்! சமூக வலைத்தள அறிவு இருக்கிறது எதனையும் பதியலாம்! என அசட்டுத் துணிவுடன் தொழிற்படுகின்றவர்கள் மறுமை விசாரணைக்குப் பயந்து கொள்வார்களா?!

உலகளாவிய ரீதியில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட எழுச்சிகளின் பின்புலத்தில் சமூக வலைத் தளங்களே இருந்துள்ளன. அரபு வசந்தம் 'முக நூல் புரட்சி' என்றே அழைக்கப்படுகின்றது. அவ்வாறே இன்றைய உலகில்

**அநியாயமிழைக்கப்பட்ட மனிதர்களது கரங்களுக்கு புதியதொரு கனரக ஆயுதம் கிடைத்து விடுகின்றது. அதுவே பிரார்த்தனையாகும். தம்மீது அவதூறுகளை அள்ளி வீசி புரளிகளை கிளப்பிவிட்டவர்களுக்கு எதிராக அவர்கள் கேட்கும் துஆ இறைவனிடத்தில் அங்கீகாரம் பெறும். அதனால் ஏற்படும் விளைவுகளை இந்த அநியாயக்காரர்கள் அனுபவிக்க வேண்டி வரும்.**

மனித வாழ்க்கையை இலகுபடுத்துகின்ற சாதனங்களாக சமூக வலைத்தளங்களே உள்ளன. அறிவியல் புரட்சிக்கு வழிவகுக்கின்ற ஊடகங்களாகவும் இவை காணப்படுகின்றன. ஆனால், எமது இளைய தலைமுறையினர் இந்த சமூக வலைத்தளங்களை அநேகமாக எதிர்மறையான விவகாரங்களுக்காகவே பயன்படுத்துகின்றனர். சமூக வலைத்தளங்களில் உலா வருகின்ற இளசுகள் தனியானதோர் உலகில் வாழுகின்றனர். இவ்வுலகில் அவர்களின் இயங்கு திசையை தீர்மானிப்பவை இறையச்சமோ விழுமியமோ அல்ல. மாறாக, மனோ இச்சையே இவர்களை வழிநடத்துகின்றது. சிலபோது சமூக விரோதச் செயல்களை சந்தைப்படுத்துவோர் இவர்களது திறன்களை விலைக்கு வாங்கிக் கொள்கின்றனர். இவர்கள் அவர்களது பகடைக் காய்களாக மாறிவிடுகின்றனர்.

உண்மையில் தங்களது ஊடகச் செயற்பாடுகளுக்கான ஊட்டச் சத்தை அல்லாஹ் வழங்கி இருக்க, அவனது சட்ட வரம்புகளை மீறி சமூக வலைத் தளங்களைத் துஷ்பிரயோகம் செய்வோர் தங்களது நடவடிக்கைகளை ஒரு கணம் மீளாய்வு செய்ய வேண்டும். இவ்வாறு நம்பகத் தன்மை அற்ற தகவல் பரிமாற்றத்தினால் சகோதர முஸ்லிம்களின் உள்ளங்கள் புண்படுகின்றன. அவர்கள் அநியாயமிழைக்கப்பட்ட மனிதர்களாக மாறி விடுகின்றனர். அநியாயமிழைக்கப்பட்ட மனிதர்களது கரங்களுக்கு புதியதொரு கனரக ஆயுதம் கிடைத்து விடுகின்றது. அதுவே பிரார்த்தனையாகும். தம்மீது அவதூறுகளை அள்ளி வீசி புரளிகளை கிளப்பிவிட்டவர்களுக்கு எதிராக அவர்கள் கேட்கும் துஆ இறைவனிடத்தில் அங்கீகாரம் பெறும். அதனால் ஏற்படும் விளைவுகளை இந்த அநியாயக்காரர்கள் அனுபவிக்க வேண்டி வரும். (57ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அல்காயிதாவின் கிளையை இந்தியாவில் தொடங்க இருக்கின்றோம்" என்ற அறிவிப்பு அல்காயிதா அமைப்பினால் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து அது ஏற்படுத்திய அதிர்வலைகளுக்கு மத்தியில் இந்த அறிவிப்பு தொடர்பாக இந்திய முஸ்லிம்களின் நிலைப்பாட்டை பல்வேறு அமைப்புக்கள் எழுதியிருந்தன. அவற்றின் சாரம்சத்தை டாக்டர் கே.வி.எஸ். ஹபீப் முஹம்மத் அவர்கள் எழுதிய இக்கட்டுரை தருகின்றது. தி இந்து-தமிழ் சஞ்சிகையில் வெளியான இக்கட்டுரை பின்னர் சமரசத்திலும் பிரசுரிக்கப்பட்டது. முஸ்லிம்கள் பயங்கரவாதம் தொடர்பில் கொண்டிருக்க வேண்டிய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் வகையில் இக்கட்டுரை அமைந்திருப்பதால் இலங்கை வாசகர்களுடன் இக்கட்டுரையை நாம் பகிர்ந்து கொள்கிறோம்.

▸ டாக்டர் கே.வி.எஸ். ஹபீப் முஹம்மத்

# பயங்கரவாதம் தொடர்பில் பண்பட்டவர்களின் பார்வை

"அல்காயிதாவின் கிளையை இந்தியாவில் தொடங்க இருக்கின்றோம். பர்மா, பங்களாதேஷ், அஸ்ஸாம், குஜராத், அஹமதாபாத், காஷ்மீர் ஆகிய இடங்களில் அநீதிக்கும் அடக்கு முறைக்கும் உள்ளாக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு ஆதரவாகப் போராடப் போகிறோம். இஸ்லாமிய கிலாபத்தை நிறுவப்போகிறோம்" என அல்காயிதாவின் தலைவர் அய்மான் அல்ஜவாஹிரி தமது 55 நிமிட வீடியோ உரையில் குறிப்பிட்டுள்ளார்.

இது நாடெங்கிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் பாதுகாப்பு அமைச்சகம், உள்துறை அமைச்சகம், உளவுத்துறை ஆகியன இது குறித்து கவலையையும் அச்சத்தையும் தெரிவித்துள்ளன. அல்காயிதாவின் அறிக்கையினால் இவர்கள் எல்லோரையும் விட அதிக ஆத்திரமும் கவலையும் கொண்டுள்ளனர் முஸ்லிம் சமுதாயத்தினர்.

1980களில் சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானில் படையெடுத்தபோது அவர்களை விரட்டுவதற்காக அமெரிக்க உளவுத் துறையின் தார்மிக,

**எகிப்தில் இராணுவ சர்வாதிகாரிகள் கடந்த 80 ஆண்டு கால அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்துவிட்ட நிலையிலும் இஸ்லாமிய சகோதரத்துவ இயக்கம் ஜனநாயகப் பாதையிலேயே போராடி வந்தமை கவனிக்கத் தக்கது.**

பொருளாதார, ஆயுத உதவியோடு தொடங்கப்பட்ட இயக்கமே அல்காயிதா. ஒஸாமா பின்லேடன் அதன் தலைவராக இருந்தார். ரஷ்யர்களை ஆப்கான் மண்ணிலிருந்து விரட்டியடித்ததும் அல்காயிதாவிற்கும் அமெரிக்காவிற்கும் பகை மூண்டு ஒருவருக்கொருவர் எதிரிகளானார்கள். அல்காயிதா பயங்கரவாத வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு உலகின் பல்வேறு நாடுகளில் அமெரிக் காவிற்கெதிராகத் தாக்குதல்கள் நடத்தியது.

ஈராக்கில் பயங்கரவாதச் செயல்களை நிகழ்த்தி அங்குள்ள சிறுபான்மையினரையும் எதிரிகளையும் ஷீஆக்களையும் கிறிஸ்தவர்களையும் கொன்று குவித்து வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற அமைப்பினரும் இவர்களிடமிருந்து பிரிந்து சென்றவர்கள்தாம். இப்போது இவ்விரு அமைப்புகளுக்கிடையே கடும் பகை நிலவி வருகிறது. இஸ்லாமிய கிலாபத்தை அமைத்து விட்டோம் என்று உலக முஸ்லிம்களின் ஆதரவை குறிப்பாக, இளைஞர்களின் ஆதரவைப் பெற ஐ.எஸ்.ஐ.எஸ். முயல்கிறது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் வேகமான வளர்ச்சி அல்காயிதாவிற்குப் பீதியை ஏற்படுத்தியது. அல்காயிதா பின்னுக்குத் தள்ளப்பட்டு விடும் என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டது. எனவே, சரிந்து வரும் தங்களது செல்வாக்கை நிலைநிறுத்த அல்காயிதா இந்தப் புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. தங்களது அமைப்பிற்கு ஆட்களைத் திரட்டும் உத்தியாகவே இந்த அறிக்கை பார்க்கப்படுகிறது.

அல்காயிதா தனி மனிதர்களை உசுப்பி அதன் மூலம் பயங்கரவாதச் செயல்களை நிகழ்த்த முயற்சிக்கலாமே தவிர இந்தியாவில் ஓர் அமைப்பாக தடம்பதிக்க முடியாது. சர்வாதிகார, எதேச்சதிகார, மன்னராட்சி நடைபெறும் நாடுகளில் மக்களுக்கு ஆட்சியாளர்கள் மீது மிகுந்த வெறுப்பு ஏற்பட்டிருப்பதால் அந்த நாடுகளில் அல்காயிதாவிற்கு எளிதில் ஆட்கள் கிடைப்பார்கள். ஆனால், இந்தியா போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுவான ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம், வெளிப்ப டைத் தன்மை, பன்மைச் சமூக அமைப்பு கொண்ட நாடுகளில் பயங்கரவாதிகளுக்கு ஆதரவு கிட்டாது.

இந்திய முஸ்லிம்களும் பயங்கரவாத இயக்கங்கள் குறித்து தெளிவான பார்வையுடன் செயல்படுகின்றனர். பயங்கரவாதம் இஸ்லாமிய அறநெறிகளுக்கு முரணானது.

"எவனொருவன் ஓர் உயிரை அநியாயமாகக் கொலை செய்கிறானோ அவன் மனித இனத்தையே கொலை– என்கிறது அல்குர்ஆன். அத்துடன் போர் தர்மங்களையும் தெளிவாக வகுத்துள்ளது இஸ்லாம்.

"போர்முனையில் இல்லாதவர்களை (பொது மக்களை), முதியோர், குழந்தைகள், பெண்கள், மடங்களில் உள்ள துறவிகள் ஆகியோரைக் கொல்லாதீர்கள்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆனால் இவர்களோ பொது மக்கள் கூடுமிடங்களில் குண்டு வைப்பதையும், விமானங்களைக் கடத்துவதையும், பத்திரிகை நிருபர்களைக் கொலை செய்வதையும் வேடிக்கையாகக் கொண்டுள்ளனர். எனவே, இவர்கள் விளிம்பு நிலைக் குழுக்களாக செயல்படுகின்றனரே அன்றி மைய நீரோட்டத்தில் அவர்களால் இணைய முடிய வில்லை. பயங்கரவாதத்தில் ஈடுபடாத அமைப்புகளே பெரும்பான்மை முஸ்லிம்களால் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.

எகிப்தில் இராணுவ சர்வாதிகாரிகள் கடந்த 80 ஆண்டு கால அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்துவிட்ட நிலையிலும் இஸ்லாமிய சகோதரத்துவ இயக்கம் ஜன நாயகப் பாதையிலேயே போராடி வந்தமை கவனிக்கத் தக்கது. பயங்கரவாதம் ஒருபோதும் ஒரு சமூகத்தின் பிரச்சினையைத் தீர்த்து வைக்காது. மேலும் சிக்கலாக்கி அந்தச் சமூகம் பழிப்பிற்கும் நெருக்கடிக்கும் உட்படுத் தப்படும். நோயைவிட மருந்து மோசமானது என்ற நிலையே உருவாகும். எனவே, அநீதிக்கெதிராக நீதியான வழிமுறைகளையே பின்பற்ற வேண்டும். அப்போதுதான் பிரச்சினைகள் தீரும். எனவே, அல்காயிதாவின் இந்த அறிவிப்பினால் முஸ்லிம்களுக்கும் பாதிப்புகளே அதிக மாகும்.

பயங்கரவாதம் இந்திய மண்ணில் கால்பதிக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே முஸ்லிம் தலைவர்களும் சமய அறிஞர்களும் முஸ்லிம் அமைப்புகளும் அதனை வன்மையாகக் கண்டித்தே வருகின்றனர். இதன் காரண மாகவே முஸ்லிம் இளைஞர்கள் பயங்கரவாத வலையில் வீழாது காப்பாற்றப்பட்டனர்.

அல்காயிதா தலைவர் அய்மான் அல்ஜவாஹிரியின் சமீபத்திய அறிக்கையையும் முஸ்லிம் தலைவர்கள் கடு மையாகவே எதிர்த்துள்ளனர். இந்தியாவிலுள்ள முக்கிய மான 12 அமைப்புகளின் கூட்டமைப்பாக விளங்கும் முஸ்லிம் மஜ்லிஸே முஷாவரத்தின் தலைவர் டாக்டர். ஜபருல் இஸ்லாம் கூறியிருப்பதாவது;

அல்காயிதா இந்திய முஸ்லிம்களை விட்டும் தள்ளி நிற்கவேண்டும். முஸ்லிம் சமூகம் தனது விவகாரத்தைத் தானே கவனித்துக் கொள்ளும் முழு ஆற்றல் படைத்தது. அல்காயிதாவின் அறிவிப்பு தெற்காசிய முஸ்லிம்களின் நலனுக்கு எதிரானதாகும். வெளிநாட்டிலுள்ள ஒரு பயங் கரவாத இயக்கம் அவர்களின் உள் விவகாரங்களில் தலை யிடத் தேவையில்லை. இந்திய முஸ்லிம்கள் இந்தியாவின் விசுவாசமான குடிமக்களாவர். அல்காயிதா இங்கு கால் வைக்க முயற்சித்தால் அதனை முஸ்லிம்கள் வன்மையாக எதிர்ப்பார்கள். இந்திய முஸ்லிம்கள் இந்திய அரசியல் சாசனத்தினாலும், இந்தியச் சட்டங்களினாலும் பாதுகாப் புப் பெற்றுள்ளனர். அவர்களுக்கு வெளி நாட்டிலுள்ள பயங்கரவாத அமைப்பினரின் போலியான உதவி தேவை யில்லை. அந்த அமைப்பு மத்திய கிழக்கில் பெரும் அழிவையும் நிலையற்ற தன்மையையும் தோற்றுவித்துள் ளது. இவர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கும் படியும் இவர்களின் சிந்தனையைப் பரப்புபவர்களைத் துரத்திய டிக்கும் படியும் இந்திய முஸ்லிம்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அமைப்பின் அப்துல் ஹபீஸ் பாருக்கி "அல்காயிதாவின் கொள்கை இந்திய முஸ் லிம்கள் மீது செல்வாக்குச் செலுத்த எந்த முகாந்திரமும் இல்லை" என்று கூறியுள்ளார். இந்தியாவின் மிகத் தொன்மை வாய்ந்ததும் முஸ்லிம்களின் செல்வாக்குப் பெற்றுள்ளது மான தேவ்பந்த் தாருல் உலூம் இஸ்லாமிய பல்கலைக் கழகம் அய்மான் அல்ஜவாஹிரியைக் கண்டித்துள்ளது.

அகில இந்திய மில்லி கவுன்சிலின் தலைவர் ஆ.அ.காலித் "அல்காயிதா எங்களின் நண்பர்களல்ல. அவர்கள் அப்பா விகளைக் கொல்கின்றனர். இஸ்லாத்தின் பெயரில் கொலை களைச் செய்து இஸ்லாத்தை இழிவுபடுத்துகின்றனர். அவர்கள்

**பயங்கரவாதம் ஒருபோதும் ஒரு சமூகத்தின் பிரச்சினையைத் தீர்த்து வைக்காது. மேலும் சிக்கலாக்கி அந்தச் சமூகம் பழிப்பிற்கும் நெருக்கடிக்கும் உட்படுத்தப்படும். நோயைவிட மருந்து மோசமானது என்ற நிலையே உருவாகும். எனவே, அநீதிக் கெதிராக நீதியான வழிமுறைகளையே பின்பற்ற வேண்டும். அப்போதுதான் பிரச்சினைகள் தீரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களின் எதிரிகள். எங்களுக்கு அவர்களின் அனுதாபம் தேவையில்லை" என்று கூறுகின்றார். "மதச்சார்பு இந்துக்களே எங்களின் நண்பர்கள். சிறுபான்மையினருக்கு எதிராக அநீதிகள் இழைக்கப் பட்டபோது எங்களுக்காகப் போராடியவர்கள் அவர்களே" என்கிறார் உருது எழுத்தாளர் ஹஸன் கமால். அல் காயிதா பற்றிய முஸ்லிம்களின் நிலைப்பாடு இதுவேயாகும்.

அல்காயிதாவின் நடவடிக்கை இந்தியாவில் ஊடுருவாமல் இருக்க உளவுத் துறையினர் விழிப்புணர்வுடன் செயல்பட்டு அசம்பாவிதம் நடைபெறா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் அப்பாவிகளை வேட்டையாடுவதனால் பயங்கரவாதிகளை ஒழிக்க முடியாது. அத்தோடு சிறுபான்மையினர், பழங்குடியினர், ஒடுக்கப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள் போன்ற பலவீனமான மக்களின் பிரச்சினைகளைக் கிடப்பில் போடாமல் உடனுக்குடன் தீர்வு காண்பதாலும் பயங்கரவாதச் செயல்களின்பால் அவர்கள் கவரப்படுவதைத் தடுக்க முடியும்.

உலக அளவில் அமெரிக்கா, ஐரோப்பியா தலைமையிலான ஏகாதிபத்திய சக்திகள் பொய்க் காரணங்களைக் கூறி ஒரு நாட்டின் இயற்கை வளங்களைக் கொள்ளையடிக்கவும் தலையாட்டி பொம்மை ஆட்சியாளர்களை உருவாக்கவும் அந்த நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவதையும் நிறுத்த வேண்டும். கொடுமையான ஆட்சியாளர்களை மாற்றும் பொறுப்பு அந்த நாட்டு மக்களிடமே விட்டுவிட வேண்டும். ஜனநாயகம் பேசிக் கொண்டே உலக சர்வாதிகாரிகளையும் மன்னர்களையும் காப்பாற்றும் இரட்டை நிலையைக் கைவிட வேண்டும். இவர்களது இந்த ஏகாதிபத்திய நடவடிக்கைகளினால் வெறுப்பும் விரக்தியும் கொண்ட இளைஞர்கள் பயங்கரவாதச் சிந்தனைகளுக்குப் பலியாகின்றனர். அரச பயங்கரவாதமும் குழு பயங்கரவாதமும் ஒரு விஷச்சக்கரமாகும். இந்தச் சக்கரம் உடைக்கப்படுவதன் மூலமே பயங்கரவாதத்தை ஒழிக்க முடியும்.

"பயங்கரவாதம் நோயுற்ற உள்ளத்தில் உருவாகிறது.

அநீதிகளால் உரமூட்டப்படுகிறது.

வெறுப்புகளால் நிலைத்து நிற்கின்றது." ■


புதுப் பொலிவுடன் இஸ்லாமிக் புக் ஹவுஸ்
அறிவுக் களஞ்சியத்தின் நுழைவாயில்
IBH
IBH Publication
ஒரே கூரையின் கீழ்
සිංහල English Arabic தமிழ் மொழிகளில்...

சஞ்சிகைகள்
• அல்ஹஸனாத்
• உண்மை உதயம்
• மீள்பார்வை
• அல் மதீனா
• எங்கள் தேசம்
• நவமணி
• பயணம்
• சத்தியக் குரல்

புனித அல்குர்ஆன்
அல் ஹதீஸ்
அகராதி
வரலாறு
உளவியல்
இலக்கியம்
திருமறைக்கள்
இலக்கணம்
கதை
கவிதை
சமையல்
இஸ்லாம்
பாடசாலை நூல்கள்
பாடசாலை உபகரணங்கள்
DVD
Audio Cassette

சஞ்சிகைகள்
• ප්‍රබෝධය
• The Trend
• அகரம்
• இஸ்லாமிய சிந்தனை
• முன்னோடி
• சர்வதேசப் பார்வை

தினமும் காலை 9.00 மணியிலிருந்து இரவு 9.00 மணிவரை உங்களுக்காகத் திறந்திருக்கும்...

வெளியீடு, மொத்த விற்பனைப் பகுதி: 0115 736098, 077 2518641
தபால் மூலம் நூல்களைப் பெற: 011 2684851
புனித அல்குர்ஆன் பிரதிகளை மொத்தமாகப் பெற: 0773171725
77, தெமட்டகொட வீதி, கொழும்பு - 9 Hotline: 0115 925 935

புதிய நூல்களின் தகவல்கள் அறிய
f<space>ibhbooks என Type செய்து
40404க்கு அனுப்புங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஸ்ஜிதுல் அக்ஸா மீதான தாக்குதல்களும் மூன்றாவது இன்திபாழாவுக்கான அழைப்பும்



> கிட்டிய வரலாற்றில் முதல் முறையாக மஸ்ஜிதுல் அக்ஸாவில் பலஸ்தீன முஸ்லிம்களுக்கு தொழுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இன்னும், ஜெரூஸலத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களுக்குள் யூதக் குடியேற்றவாசிகள் புகுந்து, மக்களின் சொத்துக்களை சூறையாடும் நிலையும் தொடர்கிறது.

முஹம்மத் ஸகி பவுஸ் (நளீமி)
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை,
E-mail: zackymfm@gmail.com

ஸியோனிஸ அரசின் பலமும் பலவீனமும் அரபுலகின் பலம், பலவீனத்திலேயே தங்கியுள்ளன. அதாவது, அரபுலகம் பலவீனப்படும் போதெல்லாம் ஸியோனிஸ அரசு பலம் பெறுகிறது. அரபுலகம் பலம் பெறும்போதெல்லாம் ஸியோனிஸ அரசு பலவீனமடைகிறது. இன்னும், பலஸ்தீனப் பிரச்சினையின் ஏற்ற இறக்கங்களும் அரபுலகின் பலத்திலும் பலவீனத்திலுமே தீர்மானிக்கப்படுகின்றன. அரபுலகம் பலம் பெறும்போது பலஸ்தீன் பலம் பெறுகிறது. அதே போல் பலவீனமடையும்போது பலஸ்தீனம் பலவீனமடைகிறது. அதேவேளை, இங்கு மற்றொரு உண்மையையும் புரிந்து கொள்வது அவசியமானது. எவ்வளவுதான் அரபுலகம் பலவீனமாகவும் ஸியோனிஸம் பலமாகவும் இருந்தாலும்கூட பலஸ்தீன மக்களின் ஆன்மிக, இராணுவ மற்றும் அரசியல் பரிமாணம் தேய்ந்து விடாமல் தொடர்ந்தும் நிலைத்திருக்கிறது என்பதே அந்த உண்மை.

இந்தப் பின்புலத்தில் எகிப்திய இராணுவப் புரட்சியின் பின்னரான அரபுலகின் அவல நிலையை ஸியோனிஸ அரசு மிகவும் நுணுக்கமான திட்டமிடலுடன் தனக்கு சார்பாக பயன்படுத்துகின்றமை வெளிப்படையானது. காஸா மீதான 50 நாள் யுத்தமும் அதன் ஒரு கட்டமே. தற்போது அதன் இரண்டாம் கட்டத்தை மேற்குக் கரையிலும் மற்றும் மஸ்ஜிதுல் அக்ஸா அமைந்துள்ள ஜெரூஸலம் பகுதியிலும் மேற்கொள்வதற்கான ஆரம்ப அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ளன. ஆனால், பலஸ்தீனர்கள் புதிய திட்டத்தையும் மிகைத்து விடுவார்கள் என்பதே அரசியல் களத்தை ஆழமாக நோக்கும்போது புலப்படுகிறது.

**மஸ்ஜிதுல் அக்ஸா மீதான அத்துமீறலின் பின்புலம்:**

காஸா மீதான யுத்தத்தில் ஸியோனிஸ அரச படைகள் தோல்வியடைந்ததன் பிற்பாடு நெதன்யாகு அரசின் எதிர்காலம் குறித்து பாரிய சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. சர்வதேசம் முழுவதும் மக்களின் பொது அபிப்பிராயம் நெதன்யாகுவின் அரசுக்கு எதிராகவே காணப்பட்டன.

எனவே, இஸ்ரேலிய மக்களுக்கு ஏதாவதொரு வெற்றியை காண்பித்தாலேயே அன்றி அடுத்த தேர்தலில் களமிறங்க முடியாத நிலைக்கு நெதன்யாகு நிர்ப்பந்திக்கப்பட்டார். மறுபுறத்தில், மேற்குக் கரையில் இஸ்ரேலிய அரசு மேற்கொண்டு வரும் அதிகரித்த குடியேற்றத் திட்டங்களுக்கு எதிரான சர்வதேச நகர்வுகள் நெதன்யாகுவை தனிமைப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதன் அகோர விளைவுகளை நெதன்யாகு தெளிவாகவே புரிந்து வைத்துள்ளார். ஆனால், அவரால் குடியேற்றத் திட்டங்களை நிறுத்த முடியாது. காரணம், நெதன்யாகுவின் அரசில் அங்கம் வகிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பல கட்சிகள் தீவிர யூத ஆக்கிரமிப்பு சிந்தனையை சுமந்துள்ளவை. குடியேற்றத் திட்டங்களை நிறுத்தினால் அரசிலிருந்து வெளியேறுவோம் என அக்கட்சிகள் எச்சரித்துள்ளன. தனது அரசின் பங்குதாரர்களின் அபிலாஷைகளைத் தீர்க்கும் நோக்குடன் பலஸ்தீன நிலத்தின் மீதும், மக்களின் மீதும் தொடர்ச்சியாக ஆக்கிரமிப்புச் செயன்முறையைப் பிரயோகிக்க வேண்டிய இக்கட்டான நிலையில் நெதன்யாகு அகப்பட்டுள்ளார்.

இந்தப் பின்னணியிலேயே கடந்த மாதம் முழுவதும் மஸ்ஜிதுல் அக்ஸா மீதான அத்துமீறல் இடம்பெற்று வருகிறது. "ஜெரூஸலத்தின் மீதான யூத இறைமையை மீட்டிப் பெறுவதே எனது இலக்கு" என நெதன்யாகு அறிக்கை விடுத்திருப்பதன் பின்புலமும் இதுதான்.

கிட்டிய வரலாற்றில் முதல் முறையாக மஸ்ஜிதுல் அக்ஸாவில் பலஸ்தீன முஸ்லிம்களுக்கு தொழுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இன்னும், ஜெரூஸலத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களுக்குள் யூதக் குடியேற்றவாசிகள் புகுந்து, மக்களின் சொத்துக்களை சூறையாடும் நிலையும் தொடர்கிறது. இஸ்லாத்தின் புனிதப் பிரதேசங்களின் மீதான இஸ்ரேலிய அரசின் அத்துமீறல்களுக்கு சர்வதேச அளவில் கண்டனங்கள் வந்த வண்ணமுள்ளன. ஆனால், அக்ஸா மீதான யூத தீவிரவாதிகளின் பாய்ச்சலை அரபு ஸியோனிஸ ஆட்சியாளாகள் கண்டும் காணாதது போல் நிற்கின்றனர். அதற்கும் அப்பால், இஸ்ரேலிய இராணுவப் பிரிவுகள் அக்ஸாவை சுற்றி வளைத்திருக்கும் தருணத்திலேயே ஐக்கிய அரபு இராச்சியம் பலஸ்தீனுக்காக குரல் கொடுக்கும் கலாநிதி ஷெய்க் கர்ழாவி தலைமையிலான 60 சிந்தனையாளர்களை தீவிரவாத பட்டியலில் இணைத்துள்ளது.

இத்தகைய இக்கட்டான நிலையில் மஸ்ஜிதுல் அக்ஸாவை நோக்கி முழு முஸ்லிம் உம்மத்தினதும் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி யூசுப் அல் கர்ழாவி பின்வரும் பிரகடனத்தையும் வெளியிட்டுள்ளார்:

மஸ்ஜிதுல் அக்ஸாவை 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே திறந்து விடும் இஸ்ரேலிய அரசின் தீர்மானமானது மனித விழுமியங்களுக்கு அப்பாற்பட்டது. எனவே, மஸ்ஜிதுல் அக்ஸாவைப் பாதுகாப்பதற்காக திரண்டு வருமாறு சர்வதேச அறிஞர்கள் ஒன்றியம் முஸ்லிம் உம்மத்திடம் வேண்டிக் கொள்கிறது. இவ் அத்துமீறலை சர்வதேசம் புரிந்து கொள்ளும் வகையில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துமாறும் வேண்டிக் கொள்கின்றது.

**பலஸ்தீனர்களின் புதிய போராட்ட வியூகங்கள்:**

கடந்த மாதம் முழுவதும் இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்டு வரும் அத்துமீறல்களை எதிர்கொள்வதற்கு மேற்குக் கரை மற்றும் அல்குத்ஸ் பிரதேச மக்கள் வித்தியாசமான இராஜதந்திரமொன்றை கையாள ஆரம்பித்துள்ளனர். இவ் உபாயத்திற்கு முன்னால் இஸ்ரேலிய உளவுத்துறையினர் மற்றும் பொலிஸார் ஸ்தம்பித்துப் போயுள்ளனர்.

காஸாவில் போன்று இஸ்ரேலை எதிர்த்து திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைகளில் மேற்குக் கரையிலோ அல்லது அல்குத்ஸ் பிரதேசத்திலோ ஈடுபட முடியாமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன:

*01.* மேற்குக் கரையினதும் அல்குத்ஸ் பிரதேசத்தினதும் பாதுகாப்பை பலப்படுத்துதில் பலஸ்தீன அதிகார சபை மற்றும் இஸ்ரேலிய இராணுவத்திற்கும் மத்தியில் உடன்பாடு காணப்படுகிறமை. இவ்வுடன்பாட்டை இஸ்ரேலிய அரசு மதிக்கா விட்டாலும், பலஸ்தீன அதிகார சபை மதித்தே ஆக வேண்டிய நிலை காணப்படுகிறது. இல்லாவிட்டால் பலஸ்தீன அதிகார சபைக்கான நிதி உட்பாய்ச்சல் இடைநிறுத்தப்படும் அபாயம் ஏற்படும். எனவே, இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் கீழுள்ள யூத குடியேற்றவாசிகளுக்கு பலஸ்தீனர்களால் ஏதும் நடந்துவிடக் கூடாது என்பதில் இஸ்ரேலை விட பலஸ்தீன அதிகார சபை கரிசனை காட்டுகிறது. விளைவாக, மேற்குக் கரையிலோ அல்குத்ஸ் பகுதியிலோ ஸியோனிஸ அரசுக்கு எதிராக திட்டமிட்ட இராணுவ அல்லது ஆயுத ரீதியான குழுக்கள் இயங்க முடியாத நிலை காணப்படுகிறது.

*02.* காஸாவை விட இஸ்ரேலிய அரச படைகள் மேற்குக் கரையில் தமக்கெதிரான நடமாட்டங்கள் எழக் கூடாது என்பதில் மிகக் கவனமாக உள்ளன. இதன் பின்புலத்தில் தொழிற்படும் இராஜதந்திரம் என்னவென்றால், காஸாவை விட இஸ்ரேலின் இராஜதந்திர நகரங்களை தாக்கக் கூடிய வாய்ப்பு மேற்குக் கரைக்கே அதிகம் காணப்படுகிறது. இதனால், மேற்குக் கரையில் சிறியதொரு மாற்றம் நடைபெற்றாலும், இஸ்ரேலிய இராணுவம் உசாரடையும் நிலை காணப்படுகிறது. இவ்வாறு மேற்குக் கரையிலும் அல்குத்ஸ் பிரதேசத்திலும் காணப்படும் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக, அப்பிரதேச மக்களின் போராட்ட வியூகத்தில் மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன.

மஸ்ஜிதுல் அக்ஸாவை 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே திறந்து விடும் இஸ்ரேலிய அரசின் தீர்மானமானது மனித விழுமியங்களுக்கு அப்பாற்பட்டது. எனவே, மஸ்ஜிதுல் அக்ஸாவைப் பாதுகாப்பதற்காக திரண்டு வருமாறு சர்வதேச அறிஞர்கள் ஒன்றியம் முஸ்லிம் உம்மத்திடம் வேண்டிக் கொள்கிறது. இவ் அத்துமீறலை சர்வதேசம் புரிந்து கொள்ளும் வகையில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துமாறும் வேண்டிக் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாற்றங்களை பலஸ்தீன அரசியல் விமர்சகா அத்னான் அபூஆமிர் "ஹர்புல் சகாகீன்" (கத்திப் போராட்டம்) என வர்ணிக்கிறார். இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை தட்டிக் கேட்க முடியுமான அனைத்து வித வாயில்களும் தங்களுக்கு முன்னால் மூடப்பட்டிருக்கும் நிலையில், கத்திகளைச் சுமந்து யூதக் குடியேற்றவாசிகளின் வணக்கஸ்தலங்கள், வீடுகள் மற்றும் இராணுவ முகாம்களுக்குள் புகுந்து தாக்கும் முறைமையை பலஸ்தீனர்கள் பின்பற்றத் துவங்கியுள்ளனர். இக்கத்தி தாக்குதலுக்கு இலக்காகி பல இராணுவ சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதேவேளை, அல்அக்ஸாவிற்குள் அத்துமீறிய இஸ்ரேலிய இராணுவத்தை பழிவாங்கும் வகையில் யூத வணக்கஸ்தலமொன்றுக்குள் புகுந்து, அங்கிருந்தவர்களை ஐந்து பலஸ்தீன இளைஞர்கள் சரமாரியாக தாக்கியுள்ளனர். இதில் ஆறு யூத குடியேற்றவாசிகள் பலியாகியுள்ளனர். மேற்குக் கரை மற்றும் அல்குத்ஸ் வாசிகளின் கத்திப் போராட்டம் சட்டவிரோத யூதக் குடியேற்றவாசிகளின் உள்ளத்தில் அச்சத்தையும் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தியுள்ளன. அதனை சமாளிக்கும் நோக்குடன் இஸ்ரேலிய அரசு சகல ஜெரூஸலம் வாசிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் ஆயுதம் வைத்துக் கொள்ளும் அனுமதியை வழங்கியுள்ளது.

தம்மால் முடியுமான எதனைப் பயன்படுத்தியேனும் ஸியோனிஸ ஆக்கிரமிப்பாளர்களை அடக்க வேண்டும் என்ற பலஸ்தீனர்களின் போராட்ட உணர்வை நெதன்யாகு வியப்புடன் நோக்குகிறார். ஏனெனில், மேற்குக் கரையில் அவ்வாறானதொரு நிலை தோன்ற மாட்டாது என்பதே நெதன்யாகுவின் எதிர்வுகூறலாக இருந்தது. மேற்குக் கரை மக்களைக் கட்டுப்படுத்துவதில் பலஸ்தீன அதிகார சபை இதய சுத்தியுடன் நடந்து கொள்ளும் என்றே இஸ்ரேலிய உளவுத் துறை எண்ணியது. இதனை ஜெரூஸலம் போஸ்ட் பத்திரிகையின் ஊடகவியலாளர் ஒருவர் "ஆயுதப் போராட்டகளத்தில் மேற்குக் கரை மக்கள் இறங்குவதற்கான உளவியல் தயார் நிலையை வெளிப்படுத்தும் இத்தகைய தாக்குதல்களினால் மேற்குக் கரை மற்றும் அல்குத்ஸ் பிரதேச சட்டவிரோத குடியேற்றவாசிகள் சலிப்படைந்துள்ளனர்" எனக் குறிப்பிடுகிறார்.

நெதன்யாகு அக்ஸாவின் மீதான அத்துமீறலை அரசியலுக்காக பயன்படுத்த நினைத்தார். ஆனால், பலஸ்தீன அதிகார சபையின் கட்டுப்பாடுகளையும் இஸ்ரேலிய இராணுவத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தாண்டிய போராட்ட உணர்வலைகள் பலஸ்தீனர்களுக்கு மத்தியில் ஏற்பட்டு வருவதனை நெதன்யாகு அவதானித்தார். அக்ஸா மீதான இஸ்ரேலிய படைகளின் அத்துமீறலைத் தொடர்ந்து சர்வதேச இஸ்லாமிய அறிஞர்களும் பலஸ்தீனுக்குள் தொழிற்படும் போராட்ட இயக்கங்களும் மூன்றாவது இன்திபாழாவுக்கு மக்களை அழைப்பு விடுத்தன. இவ்வழைப்பு இஸ்ரேலுக்கு விழுந்த மிகப் பெரிய மானசீக அடி என அரசியல் விமர்சகர் யாஸிர் ஸஆதிரா வாதிக்கிறார்.

பலஸ்தீன மக்களின் போராட்ட உணர்வுகளையும் இன்திபாழா பற்றிய அழைப்புக்களையும் தணிக்கும் நோக்குடன் ஜோர்தான் மன்னனுடன் சமாதானம் பேசும் நிலைக்கு நெதன்யாகு தள்ளப்பட்டார். இதனையடுத்து 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே அக்ஸாவில் தொழ முடியும் என்ற கட்டுப்பாட்டைத் தளர்த்தி எவருக்கும் மஸ்ஜிதுல் அக்ஸாவில் தொழ முடியும் என இஸ்ரேலிய அரசு இடைக்கால பிரகடனமொன்றையும் அறிவிப்புச் செய்தது.

இறுதியாக, அக்ஸா மீதான சமீபத்திய இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதல்கள், அதனை பலஸ்தீனர்கள் எதிர்கொண்ட முறைகள் மற்றும் மக்களின் உணர்வலைகளைத் தணிப்பதற்கு நெதன்யாகு மறைமுகமாக மேற்கொண்ட நடவடிக்கைகள் ஓர் உண்மையை வெளிப்படுத்துகின்றது. அதாவது, பலஸ்தீன மக்கள் மிகவும் அரசியல் விழிப்புணர்வைப் பெற்றவர்கள். சர்வதேச சமூகமும் மற்றும் அரபுலகமும் எந்தத் திசையில் சென்றாலும், தங்களது போராட்டத்தின் இலக்குகளில் பலஸ்தீன மக்களும் போராட்டக் குழுக்களும் மிகவும் உறுதியாகவும் தெளிவாகவும் நிலைத்திருக்கின்றனர் என்பதே அந்த யதார்த்தமாகும். ■


**அல்ஹஸனாத்**

**சிறப்பிதழ்**

**"சுவனம் எமது வீடுகளில்" எனும் மகுட வாசகத்தை மையமாகக் கொண்டு அடுத்த அல்ஹஸனாத் (ஜனவரி 2015) குடும்பவியல் சிறப்பிதழாக மலர இருக்கிறது, இன்ஷா அல்லாஹ்.**

- **கணவன்- மனைவி உறவு**
- **பெற்றார்- பிள்ளை உறவு**
- **இரத்த உறவு**
- **அழகிய வீட்டுச் சூழல்...**

**இன்னும் பல**

உங்கள் பிரதிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷஹாததுல் ஹக்

## எமது கொள்கைக்கு நாமே எடுத்துக்காட்டு

### இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் வருடாந்த தேசிய மாநாடு- 2014 (ஹி.1436)

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் 62வது வருடாந்த தேசிய மாநாடு கடந்த 15.11.2014 அன்று காலை 8.30 முதல் இரவு 8.30 மணி வரை முதல் சாய்ந்த மருது லீ மரிடியன் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

ஜமாஅத்தின் அமீர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்களின் தலைமையில் "ஷஹாததுல் ஹக்-எமது கொள்கைக்கு நாமே எடுத்துக் காட்டு" எனும் கருப்பொருளில் நடைபெற்ற வருடாந்த தேசிய மாநாட்டில் ஜமாஅத்தே இஸ்லாமியின் பகுதிகள் மற்றும் துணை அமைப்புகளின் கடந்த வருட செயற்பாடுகள் குறித்து அறிக்கைகள் சமர்ப் பிக்கப்பட்டதோடு, அங்கத்தவர்களைத் தகைமைப்படுத்தும் நிகழ்ச்சி, ஆளுமை விருத்தி நிகழ்ச்சி, அமீர் தெரிவு, மஜ்லிஸுஷ் ஷூரா தெரிவு, பிராந்திய நாஸிம்கள் தெரிவு, பிரமுகர் அமர்வு மற்றும் கலை, சலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்ற இந்நிகழ்வில், "தேசம் காண்போம் நேசமுடன் உடன்பாடு வளர்ப்போம் உறுதியுடன்!" எனும் மகுடத்தின் கீழ் மாநாட்டுப் பிரகடனம் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தேசிய மாநாட்டில் ஓர் அங்கமாக நடைபெற்ற பிரமுகர் அமர்வில், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த சிரேஷ்ட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



ஜமாஅத்தின் அமீர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர், பொதுச் செயலாளர் சட்டத்தரணி எம்.எஸ்.எம். பாரிஸ், உதவிப் பொதுச் செயலாளர்களான சகோதரர் வை.ஐ.எம். ஹனீஸ், எம்.எச்.எம். ஹஸன் ஆசிரியர், அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ், கலாநிதி அஷ்ஷெய்க் இஸ்மத் ரம்ஸி, மஜ்லிஸுஷ் ஷூரா உறுப்பினர்களான எம்.எம்.எம். மன்ஸூர், பொறியியலாளர் இஸட். ஏ.எம். நௌஸர், சட்டத்தரணி அஷ்ஷெய்க் ஜே.எம். அஷ்ரஃப் (நளீமி) ஆகியோரது நிகழ்ச்சிகளின்போது



ஜமாஅத்தின் அமீர் மற்றும் மூத்த உறுப்பினர்கள் மேடையில் வீற்றிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாநாட்டில் கலந்து கொண்ட ஜமாஅத்தின் முன்தஸிப் அங்கத்தவர்களில் ஒரு பகுதியினர்.



ஜமாஅத்தில் இணைந்து கொண்ட புதிய அங்கத்தவர்களில் சிலர்



ஜமாஅத் அங்கத்தவர்கள் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றபோது



கலை நிகழ்வுகளின்போது



பிரமுகர் அமர்வின்போது





பிரமுகர்கள் சிலர் கருத்துத் தெரிவிக்கையில்

பிரமுகர் அமர்வில் பங்கேற்ற அம்பாறை, மல்வத்தை இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி கேணல் ஹரின் வீரசிங்கவுக்கு இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் அமீர் தப்ஹீமுல் குர்ஆனின் சிங்கள மொழிமூல பிரதியொன்றை கையளிக்கும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாகிஸ்தானில் மாபெரும் இஜ்திமா:

## புத்துணர்வு பெறும் இஸ்லாமியப் பணி









பாகிஸ்தான் ஜமாஅத்தே இஸ்லாமியின் மூன்று நாள் இஜ்திமா கடந்த மாதம் 21,22, 23ஆம் திகதிகளில் லாஹூரிலுள்ள மினாரா-ஏ - பாகிஸ்தான் திடலில் நடைபெற்றது. ஆண்கள், பெண்கள் உட்பட மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இவ் இஜ்திமாவில் ஹிந்து, சீக்கிய, கிறிஸ்த்தவ மதங்களைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பாகிஸ்தான் ஜமாஅத்தின் மாணவர் இயக்கமான இஸ்லாமி ஜம்இய்யதே தலபாவின் முன்னாள் தலைவர் ஜனாப் ஸிராஜுல் ஹக் ஜமாஅத்தின் அமீராக இவ்வருடம் பதவியேற்றதிலிருந்து இயக்கத்தில் ஒரு புது உத்வேகமும் சுறுசுறுப்பும் ஏற்பட்டிருப்பதை இவ் இஜ்திமாவின் ஏற்பாடுகளும் நிகழ்ச்சிகளும் படம் பிடித்துக் காட்டுகின்றன.

ஜனாப் ஸிராஜுல் ஹக் கைபர் பக்தூன்குவா மாநிலத்தில் இரண்டு தடவை நிதி அமைச்சராகப் பதவி வகித்து அவரது செயற்திறன் காரணமாக அனைவரது நன்மதிப்பையும் பெற்றவர். அவர் அமீர் பதவியை ஏற்றதையடுத்து ஜமாஅத்தின் ஊழியர்களும் பொது மக்களும் அவர் மீது பெரும் எதிர்பார்ப்பு வைத்துள்ளனர்.

'இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம்கள் இஸ்லாமிய அடிப்படையில் சுபிட்சமாக வாழ ஒரு நாடு' எனும் சுலோகத்தோடு உருவாக்கப்பட்ட பாகிஸ்தான் 67 வருடங்கள் கடந்த பின்பும்கூட அது உருவாக்கப்பட்ட நோக்கத்தை அடைந்து கொள்ளவில்லை. மாறி மாறி ஆட்சிக்கு வந்த முஸ்லிம் லீக், பாகிஸ்தான் மக்கள் கட்சி என்பன இந்த நோக்கத்தை அடையத் தவறி விட்டன. பாகிஸ்தான் வரலாற்றில் சுமார் அரைப் பகுதியை ஆட்சி செய்த இராணுவம், பாகிஸ்தானின் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்க உதவியதே தவிர தீர்வாக அமையவில்லை.

இந்நிலையிலேயே 'பாகிஸ்தான் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றுவோம்' எனும் சுலோகத்தோடு களமிறங்கியிருக்கிறார் ஜனாப் ஸிராஜுல் ஹக். கடந்த சில மாத கால அவரது தலைமைத்துவமும் இஜ்திமாவில் பொது மக்களும் ஊழியர்களும் வெளிப்படுத்திய ஆர்வமும் நம்பிக்கை அளிப்பதாக அமைந்துள்ளன.

ஜமாஅத் அமீர் பாகிஸ்தான் உருவாக்கப்பட்ட கனவை நனவாக்கும் தனது வேலைத் திட்டத்தை விரிவாக முன்வைத்தமை இஜ்திமாவின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவ்வாறே இஜ்திமாவில் இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் வழங்கப்பட்ட தனி இடமும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் சுமார் 25 நாடுகளைச் சேர்ந்த இஸ்லாமிய இயக்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 60 வெளிநாட்டுப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

(36ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலட்சியம் அன்பைக் கொன்று விடும்; இருவருக்கு மிடையில் ஒரு வெடிப்பை ஏற்படுத்தி விடும்; இயல்பு நிலையை நீக்கி அனைத்தையும் ஒரு வகையான செயற்கைத் தன்மை கொண்டதாக மாற்றி விடும்; புன்னகையை உங்கள் வீட்டு எல்லைக் குள்ளிருந்து வெளியேற்றி விடும்; உங்கள் அகச் சூழலை மாசுபடுத்தி விடும்.



அஷ்ஷெய்க் அப்துல் ஹலீம் (நளீமி) B.A
நிறுவனர், குடும்ப வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கான மத்திய நிலையம்
cfcglanka@gmail.com

# குடும்ப வாழ்வை சீரழிக்கும் ஸீரியஸான குற்றங்கள்

**குற்றம்!**

நாட்டில் பல குற்றங்கள் நடக் கின்றன; ஊருக்கு ஊர் குற்றங்கள் நடக்கின்றன; பாதையோரங்களில் குற்றங்கள் நடக்கின்றன. குற்றங்கள் என்றவுடன் ஏதோ கொலை, கொள்ளை, போதைப்பொருள் கடத்தல் என் றெல்லாம் நினைத்து விடாதீர்கள். கிட்டத்தட்ட ஒவ்வொரு குடும்பத் துக்குள்ளும் தெரிந்தும் தெரியாமலும் குடும்ப வாழ்வில் மண்ணை அள்ளிப் போடும் குற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்தக் குற்றங்கள் பரஸ்பரம் கணவன்- மனைவி இருவராலும் நடைபெறுகின்ற குற்றங்களாகும். எனவே, இவற்றின் விளைவுகளை இருவருமே அனுபவிக்க வேண்டி யிருக்கின்றது. பலபோது அவர்க ளோடு சேர்த்து ஏனைய குடும்ப அங்கத்தவர்களும் அவற்றை அனுப விக்க வேண்டி ஏற்படுகின்றது.

இந்தக் குற்றங்களில் நீங்கள் ஈடுபட்டால் உங்களை யாரும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்து சிறையில் அடைக்க மாட்டார்கள். மாறாக, நீங்களே உங்களது வீட்டை உங்களுக்கான சிறைச்சாலையாக மாற்றிக் கொள் வீர்கள். அது போதாதென்று உங்களையே ஒரு நடமாடும் சிறைச்சாலையாக நீங்கள் மாற்றிக் கொள்வீர்கள்.

அது என்ன ஆச்சரியமான குற்றங்கள்? என்று நீங்கள் யோசிக்க வேண்டிய அவசியமில்லை. அதிகம் சுற்றி வளைக்காமல் விடயத்துக்கு நேரடியாகவே வந்து விடுகிறேன். இதோ இவைதான் அந்தக் குற்றங்கள்

**01. அலட்சியம் எனும் மாபெரும் குற்றம்**

ஆண்- பெண் வித்தியாசமில்லாமல் இன்று அனைவரும் பிஸியாக இருக் கின்றோம். ஏன், எதற்கு என்றில்லை, யாரிடம் கேட்டாலும் நான் கொஞ்சம் பிஸியாக இருக்கிறேன் என்ற பதில் சர்வ சாதாரணமாக வரும். 'பிஸி' என்றால் என்னவென்று வரைவிலக்கணப்படுத்த முடியாத இன்றைய காலத்தில் இந்த பிஸியானது யாரைப் பாதித்தாலும் இல்லாவிட்டாலும் நேரடியாகவே கணவன்- மனைவியைப் பாதித்திருக்கின்றது.

தொழில், நட்பு, பொழுதுபோக்கு, விளையாட்டு, அரட்டை, தூக்கம், சமூகம் என்று முற்றுப்புள்ளியின்றி நீண்டு செல்லும் எங்கள் பட்டியலில் இயல்பாகவே கணவன் அல்லது மனைவி என்ற அம்சம் இறுதியிடத்துக்குத் தள்ளப்பட்டு விடுகின்றது.

ஒரு கணவனது பட்டியலில் மனைவிக்கு கடைசியிடம் கிடைத்தால் அவள் கணவன் தன்னை அலட்சியப்படுத்துகிறான் என்று உணர ஆரம்பிக்கிறாள். அதன் விளைவாக அவளும் அவனை அலட்சியப்படுத்த ஆரம்பிக்கின்றாள். அதே போன்றுதான் ஒரு மனைவியின் பட்டியலில் கணவனுக்கு கடைசியிடம் கிடைத்தால் அவன் தன் மனைவி தன்னை அலட்சியப்படுத்துகிறாள் என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர ஆரம்பிக்கின்றான். அதன் விளைவாக அவனும் அவளை அலட்சியப்படுத்த ஆரம்பிக்கின்றான்.

உங்களது துணைவரது தேவைகள் உங்களது பட்டியலில் முதன்மை பெறாதபோது இந்த அலட்சியம் என்ற குற்றம் குடும்பத்துக்குள் அரங்கேறிக் கொண்டே இருக்கும்.

. அலட்சியம் அன்பைக் கொன்று விடும்; இருவருக்குமிடையில் ஒரு வெடிப்பை ஏற்படுத்தி விடும்; இயல்பு நிலையை நீக்கி அனைத்தையும் ஒரு வகையான செயற்கைத் தன்மை கொண்டதாக மாற்றி விடும்; புன்னகையை உங்கள் வீட்டு எல்லைக்குள்ளிருந்து வெளியேற்றி விடும்; உங்கள் அகச் சூழலை மாசுபடுத்தி விடும். மென்மை, நளினம் போன்ற நல்ல குணங்களை கடுமை, முரட்டுத்தனம் போன்ற கரடு முரடான குணங்களைக் கொண்டு துடைத்தெறிந்து விடும்

அடேயப்பா, எத்தனை பெரிய குற்றமிது!

ஒரு குடும்பத்தின் மகிழ்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் இந்த அலட்சியமானது குழி தோண்டிப் புதைத்து விடுகின்றது. ஈற்றில் இறுதி வரை ஒன்றாய் வாழ்வதற்காய் ஒன்றிணைந்தவர்களை இடைநடுவிலேயே இரண்டாய் உடைத்துத் திசைமாறிப் பயணிக்க வைத்து விடுகின்றது.

உங்கள் வாழ்விலும் இந்தக் குற்றம் நடைபெறுவதாய் உணர்கிறீர்களா?

உடனே செயற்படுங்கள். நீண்ட நாட்களுக்கு விட்டு வைத்தீர்களேயானால் அப்புறம் குணப்படுத்தவே முடியாத புற்றுநோயாக அது மாறிவிடும். அப்படியாகி விடாமல் இருப்பதற்காக நீங்கள் உடனடியாக செய்ய வேண்டியது இதுதான்.

எத்தகைய நிலையிலும் சரி நீங்கள் மட்டும் வீட்டிலிருந்து வெளியே போகின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் உங்கள் துணைவரைத் தனிமையில் சந்தித்து குறைந்தபட்சம் ஒரு முத்தத்துடனும் ஸலாத்துடனும் வெளியேறுங்கள். அது அன்றைய நாள் முழுக்க ஒருவர் அடுத்தவரது நினைவில் இருப்பதற்கான ஒரு மிகச் சிறந்த வழிமுறையாகும். மேலதிகமாக நீங்கள் இருக்குமிடத்திலிருந்து நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உங்களுக்கிடையிலான அன்பை இலத்திரனியல் வடிவில் பரிமாறிக் கொள்வது இன்னும் சிறப்பானது.

திருமணம் முடித்த புதிதில் அன்பு இலத்திரனியல் வடிவில் தாராளமாகப் பரிமாறப்படுகின்றது. ஆனால், காலம் செல்லச் செல்ல இருவருக்குமிடையிலான இரசாயனத் தொழிற்பாடுகள்கூட மெல்ல மெல்ல அற்றுப் போகின்றன.

**02. சமாந்தர வாழ்க்கை எனும் இரண்டாவது குற்றம்**

அது என்ன சமாந்தர வாழ்க்கை என்ற கேள்வி எழுகிறதா?

ரயில் தண்டவாளத்தைப் பார்த்திருக்கின்றீர்களல்லவா?! மிக அருகாமையில் இருக்கும் இரண்டு இரும்புப் பாதைகளும் இறுதி வரை இணையாமலேயே இருக்கின்றதல்லவா! அதே போன்று ஒரே வீட்டில் வாழும் கணவன், மனைவி எனும் இரண்டு ஜீவன்கள் ஒட்டாமலே வாழ்க்கையை ஓட்டிச் செல்வதுதான் சமாந்தர வாழ்க்கை. அவர்கள் இருவரும் பயணிக்கிறார்கள், ஆனால் சந்திப்பதேயில்லை. தொடர்ந்தும் ஓர் இடைவெளியை அவர்கள் தமக்கிடையில் பேணி வருகின்ற அந்த நிலையையே இது குறிக்கின்றது.

இது கிட்டத்தட்ட அலட்சியப் போக்கு அதிகமாகும்போது அதன் இரண்டாம் கட்டமாக இடம்பெறும் குற்றமாகும். எனினும், இந்நிலை மிகவும் ஆபத்தானது. ஒரு விடுதியில் ஒரே அறையில் தங்கியிருக்கும் ஒருவருக்கொருவர் ஒத்துவராத இரண்டு நபர்களைப் போல இவர்கள் நடந்து கொள்வார்கள்.

ஒருவரையொருவர் மதிப்பார்கள். ஆனால், அந்த மரியாதைக்குள் எப்போதும் ஒரு 'க்' கன்னா ஒளிந்து கொண்டிருக்கும். இருவரும் பேசுவார்கள். ஆனால், அதனை நீண்டு விடாமல் முடித்து விடுவதில் மிகக் கவனமாக இருப்பார்கள். பல சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் இருவருக்குமிடையில் தூதுவர்களாகவும் இடைத்தரகர்களாகவும் பணியாற்ற வேண்டிய நிலை ஏற்படும். ஒவ்வொரு நாடும் அடுத்த நாடுகள் விடயத்தில் தமக்கென்று ஒரு வெளிநாட்டுக் கொள்கை (Foreign Policy) வைத்திருப்பதைப் போன்று இவர்களும் தமக்கிடையில் அப்படியான கொள்கைகளைப் பேணி வருவார்கள். இருவரினதும் குரல் சப்தங்கள் அடிக்கடி உச்சஸ்தானத்துக்கு சென்று வரும். இருவரும் தமக்கென்று சில வேலைகளை வரையறுத்துக் கொள்வர். மறந்தும் கூட அடுத்தவரது வேலையில் உதவிகள் புரிய மாட்டார்கள்.

பொதுவாகவே கணவன்- மனைவி இருவரும் தமக்கென்று வெவ்வேறு நிகழ்ச்சிநிரலைக் கொண்டிருப்பதானது இத்தகையதோர் அபாயகரமான நிலை ஏற்படுவதற்கு காரணியாய் அமைந்து விடுகின்றது. இருவரதும் உணவு உண்ணும் நேரம், தூங்கச் செல்லும் நேரம், தூங்கி எழும் நேரம், ஓய்வு நேரம், பொழுதுபோக்குகள் என்பன போன்ற விடயங்களில் வித்தியாசமான நேரசூசியை நீங்கள் கொண்டிருந்தால் இத்தகைய நிலை உங்களுக்கும் ஏற்பட அதிகமான வாய்ப்புகள் உள்ளன.

இந்தக் குற்றம் நடைபெறும் வீடுகளுக்குள் கணவன்-மனைவி என்ற இருவரும் ஓர் அடையாள உறவைத்தான் வைத்திருப்பர். ஈகோ தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும். குழந்தைகள் ஒன்றில் பயங்கரமாகப் பாதிக்கப்படுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரயில் தண்டவாளத்தைப் பார்த்திருக்கின்றீர்களல்லவா?! மிக அருகாமையில் இருக்கும் இரண்டு இரும்புப் பாதைகளும் இறுதி வரை இணையாமலேயே இருக்கின்றதல்லவா! அதே போன்று ஒரே வீட்டில் வாழும் கணவன், மனைவி எனும் இரண்டு ஜீவன்கள் ஒட்டாமலே வாழ்க்கையை ஓட்டிச் செல்வதுதான் சமாந்தர வாழ்க்கை.**

அல்லது தாய்க்கும் தந்தைக்கும் இடையிலிருக்கும் இந்த இடைவெளியை தங்களுக்கு சாதகமாகப் பயன் படுத்திக் கொள்வார்கள்.

சிலபோது குழந்தைகளை நன்றாக வளர்க்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் கணவனோ அல்லது மனைவியோ தன் துணைவரை விட குழந்தைகளின் மீது காட்டும் அதிகபட்ச கரிசனைகூட நாளடைவில் இத்தகைய ஒரு சமாந்தர வாழ்க்கைக்குள் அவர்களைத் தள்ளிவிட வாய்ப்பிருக்கின்றது.

ஒரு வீட்டுக்குள் இரண்டு வாழ்க்கையாகத் தொடரும் இந்தப் பயணம் மிகவும் ஆபத்தானது. உங்களது வீட்டுக்குள்ளும் இப்படியான ஒரு குற்றம் நடக்கின்றதா? நீங்கள் உடனடியாகவே மிக அவசரமாக சில நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டியிருக்கின்றது.

நீங்கள் இருவருமே உங்களது நேரசூசியில் சில உடனடி மாற்றங்களைக் கொண்டுவருவது நீங்கள் எடுக்க வேண்டிய முதல் நடவடிக்கையாகும். குறைந்தபட்சம் இரவுணவை மட்டுமாவது ஆரம்பத்தில் ஒன்றாக உட்கொள்கின்ற பழக்கத்தை உங்களுக்கு மத்தியில் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அது பழக்கத்துக்கு வந்ததன் பின்னர் சந்தர்ப்பம் அமையும் போதெல்லாம் காலையுணவு மற்றும் பகலுணவைக்கூட ஒன்றாக அமர்ந்து சாப்பிட முயற்சியுங்கள்.

அடுத்த கட்ட நடடிவடிக்கையாக தூங்கச் செல்லும்போது இருவரும் ஒன்றாக படுக்கைக்குச் செல்ல முயற்சியுங்கள். தூங்கி எழும்போதும் ஒரே நேரத்தில் எழுந்து விடுங்கள். ஒருவர் முதலில் எழுந்தால் உடனடியாக அடுத்தவரையும் எழுப்பி விடுங்கள். ஒரே தட்டில் உணவு உட்கொள்வதும் ஒரே படுக்கையில் தூங்கி எழுவதும் கணவன்- மனைவி இருவருக்குமிடையிலான பாசப் பிணைப்பையும் நெருக்கத்தையும் ஏற்படுத்த வல்லவையாகும்.

சில வீடுகளில் ஒன்றாக உட்கார்ந்து குடும்ப அங்கத்தவர்கள் சாப்பிட்ட வரலாறே இருக்காது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு நேரத்தில் சாப்பிடும் பழக்கமும் ஒவ்வொருவரும் அவரவர் விரும்பிய நேரத்தில் தூங்கும் பழக்கமும் இருக்கின்ற வீடுகளில் கணவன்- மனைவி இருவரும் மிகப் பெரும்பாலும் ரயில் தண்டவாளம் போன்று சமாந்தரமாகவே பயணிப்பார்கள்.

கணவன் மனைவிக்கிடையே தொழிற்படும் ஒரு விதி இருக்கின்றது. உடலால் தூரமானால் உள்ளங்களும் தூரமாகும்; உடலால் நெருக்கமாகி தொடுகைகள் அதிகரிக்கும் போது இரண்டு உள்ளங்களுக்கு மிடையிலான அன்பும் நெருக்கமும் எப்போதும் அதிகரித்துக் கொண்டே செல்லும் என்பதே அந்த விதியாகும்.

எனவே, சமாந்தரமாகப் பயணிப்பதை விட்டு விட்டு ஒரே கோட்டில் நீங்களிருவரும் பயணிக்க முயற்சி செய்யுங்கள். ஞாபகத்தில் வையுங்கள், நான் உங்களுக்கு சம்பந்தமேயில்லாத யாருடனோ நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளச் சொல்லவில்லை. உங்களது வாழ்க்கையை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வந்த உங்கள் துணைவருடன்தான்.

### 03. உணர்ச்சிகளைக் கொலை செய்தல்

Passion என்று ஓர் ஆங்கிலச் சொல் இருக்கின்றது. கணவன்- மனைவி இருவருக்குமிடையில் தொழிற்படும் மிக முக்கியமான மானசிக ரீதியான ஒரு விடயம்தான் இந்த Passion என்பதாகும். இதனைத் தமிழில் சொல்வதாக இருந்தால் கட்டுக்கடங்கா உணர்ச்சி என்றோ பிரவாகிக்கும் உணர்ச்சிகள் என்றோ சொல்லலாம். ஆனால், அது எந்தளவு தூரம் அந்த சொல்லுக்கான சரியான கருத்தாக அமையுமோ தெரியாது.

பொதுவாகவே ஆண், பெண் என்று வருகின்றபோது இருவரிலும் ஏற்படுகின்ற வித்தியாசமான உணர்ச்சிகள், ஹோர்மோன் மாற்றங்கள் என்பன நாம் அனைவரும் அறிந்ததே. ஆணுக்குப் பெண்ணிலும் பெண்ணுக்கு ஆணிலும் கவர்ச்சியும் எதிர்பார்ப்பும் இருக்கின்றன. திருமணம் என்ற வேலிக்குள் இஸ்லாம் அவற்றை தாராளமாக அனுபவிப்பதற்கு அனுமதித்திருக்கின்றது.

ஆனால், இன்று கணவனுக்கு மனைவியிலும், மனைவிக்குக் கணவனிலும் அத்தகைய Passion இருக்கின்றதா என்பது மிக முக்கியமான கேள்வியாகும்.

இருவருக்குமிடையில் அத்தகைய ஒரு நெருக்கம் ஏற்படுவதற்கு இருவருமோ அல்லது இருவரில் ஒருவரோ எப்போதும் ரொமான்டிக் ஆக இருக்க வேண்டும் என்று கட்டாயமில்லை. உங்களது Passion ஐ உங்களது துணைவருக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக் காட்டுவதற்கு சந்தர்ப்பங்களைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமேயில்லை.

இன்று எமது குடும்பங்களில் இந்த Passion என்பது காணாமல் போன ஒரு விடயமாக மாறி வருகின்றது. திருமணம் முடித்த புதிதில் ஹோர்மோன்களில் ஏற்படும் மாற்றம் தரும் ஒரு தற்காலிக Passion மட்டுமே இன்று பலருடைய குடும்ப வாழ்க்கையில் இருக்கின்றது. இதனுடைய அர்த்தம் உணர்ச்சிகள் செத்துப் போய்விட்டன என்பதல்ல. மாற்றமாக உணர்ச்சிகள் சாகடிக்கப்படுகின்றன என்பதாகும். இது மிகவும் பாரதூரமான கொலையாகும்.

எல்லாக் கணவன்மாருக்கும் தனது மனைவியைப் பார்த்து 'ஐ லவ் யு' என்று சொல்ல வேண்டும் என்ற உணர்வு இருக்கின்றது. எல்லாக் கணவன்மாருக்கும் தனது மனைவிக்கு ஒரு ஸர்ப்ரைஸ் கிஃப்ட் கொடுக்க வேண்டும் என்ற ஆசை இருக்கின்றது. எல்லோருக்கும் தனது மனைவியை பீச்சுக்கோ, பார்க்குக்கோ அழைத்துச் சென்று Relax ஆக நடந்து விட்டு வர வேண்டும் என்ற ஆசை இருக்கின்றது. சகல கணவன்மாருக்கும் மனைவி எதிர்பார்க்காத சந்தர்ப்பத்தில் ஒரு முத்தம் கொடுத்து தன் அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்ற உணர்வு இருக்கின்றது. இப்படி எத்தனை எத்தனையோ ஆசைகளும் உணர்வுகளும் ஒவ்வொரு வருக்குள்ளும் இருக்கின்றன. இவை எதுவுமே ஹராமானவையல்ல.

அப்படியிருந்தும் நாம் என்ன செய்கிறோம்? எம்மைச் சுற்றி நாமே கட்டியெழுப்பியிருக்கின்ற தேவையற்ற சுவர்கள் காரணமாக பிரவாகித்து வரும் இந்த உணர்ச்சிகளையெல்லாம் நாம் கழுத்தை நெறித்துக் கொலை செய்து விடுகின்றோம்.

அதே போன்றுதான் எல்லா மனைவியருக்கும் தனது கணவனின் நெஞ்சில் சாய்ந்து அவனது இருதயத் துடிப்பை செவிமடுக்க வேண்டும் என்ற ஆசை இருக்கின்றது. பாதையில் நடந்து செல்லும்போது அவனோடு கைகோர்த்தவாறே செல்ல வேண்டும் என்ற விருப்பம் இருக்கின்றது. மோட்டார் வண்டியில் பயணிக்கும்போது கணவனது முதுகில் சாய்ந்தவாறே பயணிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கின்றது. இந்த உணர்வுகளும்கூட எம்மைச் சுற்றி நாமே போட்டுக் கொண்ட தடைகளால் படுகொலை செய்யப்படுகின்றன.

இறுதியில் Passion ஐ வெளிப்படுத்தாமலே வாழ்ந்து மரணித்து விடுகிறோம். அல்லாஹ் ஹலாலாக்கியதை ஹராமாக்கும் அதிகாரம் இங்கு யாருக்கும் இல்லை. மார்க்கத்தின் ஒழுக்க பண்பாட்டு விழுமியங்கள் மீறப்படாமல் ஒரு கணவனோ மனைவியோ தன் துணைவருக்கு இதனை வெளிப்படுத்துவதில் எந்தத் தவறும் கிடையாது.

இந்தப் Passion ஐ நீங்கள் கொலை செய்தால் உங்களது குடும்ப வாழ்வு என்பது வாசமில்லாத பூவாக, சாறில்லாத சக்கையாக, உயிரற்ற உடம்பாக மாறிவிடும். அதன் பின்னர் நீங்களிருவரும் நடமாடும் இரண்டு இயந்திரங்களாக இருப்பீர்களேயல்லாமல் கணவன்- மனைவியாக இருக்க மாட்டீர்கள்.

இந்தப் Passion ஐ நீங்கள் கொலை செய்தால் உங்களது குடும்ப வாழ்வு என்பது வாசமில்லாத பூவாக, சாறில்லாத சக்கையாக, உயிரற்ற உடம்பாக மாறிவிடும். அதன் பின்னர் நீங்களிருவரும் நடமாடும் இரண்டு இயந்திரங்களாக இருப்பீர்களேயல்லாமல் கணவன்- மனைவியாக இருக்க மாட்டீர்கள்.

மேற்சொன்ன மூன்றும் இன்றைய குடும்பங்களில் நடைபெறும் குற்றங்களாகும். இந்தக் குற்றங்கள் பரவலாக நடைபெறுவதால் இன்று பல வீடுகள் சிறைச்சாலைகளாக மாறியிருக்கின்றன. சிறைச்சாலையாக உங்கள் வீடிருக்க வேண்டுமா அல்லது அமைதிப் பூங்காவாக இருக்க வேண்டுமா? முடிவு செய்வது உங்கள் கரங்களிலேயே இருக்கின்றது. ■

புத்தளத்தில் | மூன்று மாடி கட்டிடத்தில் | 13 வருட அனுபவத்துடன்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின்
Tertiary and Vovational Education Commission [P13/0056]
கீழ் பதிவு செய்யப்பட்டு, அரச/சர்வதேச
அங்கீகாரம் பெற்ற உங்கள் கல்லூரியில்

AutoCAD 2D & 3D

AutoCAD கற்பதன் பயன்கள்
- கட்டடத்துறையில் {Construction Field} அதிகமான வேலை வாய்ப்புக்கள்.
- Precast Factory களில் பயிற்சியுடன் கூடிய தொழில் வாய்ப்புக்கள்.
- Saudi, Dubai, Qatar போன்ற நாடுகளில் மாதம் 60000/- க்கு மேல் சம்பளம்.
- கட்டிட வடிவமைப்பில் வல்லுனராக தரமான பயிற்சி.
- 3D Designing, Interior Designing செய்தல்.
- Furniture Designing செய்தல்.

JOBs: Technical Officer (TO), Site Supervisor, Draftsman
Duration: 4 Months Investment: Rs. 21500.00

ஏனைய பாடநெறிகள்
JOB Training Program | BIT Program | Ms Office | Graphic Designing
Hardware Technician | Com. Accounting | Web Designing | AutoCAD Phone
Repairing | Internet & Email | 3D Max | Maya | Spoken English
KIDS Computing | O/L ICT | O/L English | A/L GIT | A/L English



விபரங்களுக்கு MJMM. Riswan [MD]
0716228580

Since 2002
Global
College of Computer Studies

100, மரிக்கார் வீதி, புத்தளம்.
facebook.com/ puttalamglobal
twitter.com/ lankait
E: puttalamglobal@yahoo.com
T: 0323292885, 0322267885



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

"அவர் 'கண்ணியம்' என்று குறிப்பிட்டது அக்கடிதம் வந்த ஆச்சரியமான முறையைத்தான். இது எந்த அரசனாலும் செய்ய முடியாத ஒரு காரியமாகும். சாதாரண அரசர்களுக்கு அதற்கான வாய்ப்புக் கிடையாது. இக்கடிதம் அன்று முழுப் பிராந்தியத்திலும் பிரபல்யமடைந்திருந்த இறைத் தூதர் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களிடமிருந்து வந்துள்ளது என்பதை அறிந்து கொண்டதும் அதனை அவர்களால் எதிர்கொள்ள இயலாது என்பது அவர்களுக்குப் புரிந்தது."

# பில்கீஸ் பின்த் ஷராஹீல் (அலைஹஸ்ஸலாம்) ஆட்சி பீடத்திலிருந்து அடிமைத்தனத்தை நோக்கி...

▲ பாத்திமா ஸைனப் பின்த் பவாஸ் ▲

ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது வரலாறு ஸூரதுந் நம்லில் இடம்பெறுவது போன்று அல்குர்ஆனில் வேறெந்த ஸூராவிலும் விரிவாக விவரிக்கப்பட வில்லை. ஆனால், அது ஓர் அம்சத்துடன் மட்டுமே தொடர்புபட்டுள்ளது. மனிதர்கள், ஜின்கள், பறவைகள், மிருகங்கள், காற்று முதலான அனைத்தும் வசப்படுத்திக் கொடுக்கப் பெற்றிருந்த ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் பனூ இஸ்ரவேலர்களிடத்தில் பெரும் ஆட்சியாளராகவும் இறைதூதராகவும் திகழ்ந்தார்.

ஒரு நாள் அவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த ஒரு ஹுத் ஹுத் பறவையைக் காணவில்லை தொலைதூரம் சென்றிருந்த ஹுத்ஹுத் ஓர் அதிசயத் தகவலுடன் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை வந்தடைந்தது.

"ஸபாவிலிருந்து உறுதியான ஒரு செய்தியுடன் உம்மிடம் வந்துள்ளேன். நான் அந்நாட்டவர்களை ஆட்சி செய்யும் ஒரு பெண்ணைக் கண்டேன். அவள் அனைத்து வகைப் பொருட்களும் வழங்கப் பெற்றுள்ளாள். அவளுக்கு மாபெரும் அரியாசனமும் உள்ளது." (27: 22-23)

அந்த அரசிதான் வரலாற்றில் பில்கீஸ் பின்த் ஷராஹீல் (அலைஹஸ்ஸலாம்) என அழைக்கப்படுகிறார்.

ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள், அரசி பில்கீஸுக்கும் அவருடைய சமூகத்தாருக்கும் ஒரு கடிதம் எழுதி அதை ஹுத் ஹுத் பறவையிடம் கொடுத்தனுப்பினார்.

"என்னுடைய இந்தக் கடிதத்தைக் கொண்டு சென்று அவர்களிடம் போட்டு விடு. பிறகு அவர்களை விட்டு ஒதுங்கி நின்று, அவர்கள் என்ன பதிலளிக்கிறார்கள் என்பதைக் கவனி." (27: 28)

அப்பறவை பில்கீஸின் அரண்மனைக்குச் சென்று அங்கிருந்த ஜன்னல் வழியாக அவர்முன் கடிதத்தைப் போட்டது. கடிதம் கிடப்பதைக் கண்டு அரசி அதிர்ந்தார். அது அவரை உலுக்கியது. கடிதத்தைப் படித்துவிட்டு, உடனே பில்கிஸ் தம் நாட்டுத் தலைவர்கள், அமைச்சர்கள், பெரிய மனிதர்கள் ஆகியயோரை ஒன்றுகூட்டி "பிரமுகர்களே! நிச்சயமாக என்னிடம் கண்ணியமான ஒரு கடிதம் போடப்பட்டுள்ளது" என்று கூறினார். நிச்சயமாக இது ஸுலைமானிடமிருந்து எழுதப்பட்டுள்ளது. பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று ஆரம்பிக்கிறது. என்னை நீங்கள் மிகைக்க எண்ணாதீர்கள். அடிபணிந்து என்னிடம் வந்து விடுங்கள் என்றும் எழுதப்பட்டுள்ளது என்று கூறினார்." (27: 29-31)

அவர் 'கண்ணியம்' என்று குறிப்பிட்டது அக்கடிதம் வந்த ஆச்சரியமான முறையைத்தான். இது எந்த அரசனாலும் செய்ய முடியாத ஒரு காரியமாகும். சாதாரண அரசர்களுக்கு அதற்கான வாய்ப்புக் கிடையாது. இக்கடிதம் அன்று முழுப் பிராந்தியத்திலும் பிரபல்யமடைந்திருந்த இறைத் தூதர் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களிடமிருந்து வந்துள்ளது என்பதை அறிந்து கொண்டதும் அதனை அவர்களால் எதிர்கொள்ள இயலாது என்பது அவர்களுக்குப் புரிந்தது. "அடிபணிந்து என்னிடம் வந்து விடுங்கள்" என்பதற்கு அப்துர் ரஹ்மான் பின் ஸைத் பின் அஸ்லம் (ரஹிமஹுல்லாஹ்) "மறுக்காமலும் பெருமை பாராட்டாமலும் பணிந்து விடுங்கள்" என்றும் "அடிபணிந்து (முஸ்லிமீன்)" என்பதற்கு இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) "ஓரிறைவனை ஏற்றவர்களாக" என்றும் விளக்கம் கூறியுள்ளார்கள். (தப்ஸீர் இப்னு கதீர்)

ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் கடிதத்தைப் படித்து, நெருக்கடிக்கு உள்ளாகிய நிலையில் பில்கீஸ் "பிரமுகர்களே! என் பிரச்சினைக்குத் தீர்வு கூறுங்கள். நீங்களும் பங்கெடுத்துக் கொள்ளாமல் எந்த முடிவையும் நான் தீர்மானிக்கப் போவதில்லை என்று கூறினார்." (27: 32)

அவர் புத்திக்கூர்மையுள்ள ஓர் அரசியாக இருந்திருக்க வேண்டும். கண்ணியமான கடிதம் என்று கூறி அதனால் பூரிப்படைந்தபோதிலும் சுயமாகத் தீர்மானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்காமல் பிரமுகர்களின் அலசலுக்கு விஷயத்தை விடு கிறார். அரசியிடம் அவருடைய ஆலோசகர்கள் தங்களின் ஆள் பலத்தையும் ஆயுத பலத்தையும் பெருமிதத்தோடு நினைவூட்டினர். பிறகு, இறுதி முடிவெடுக்கும் அதிகா ரத்தை அரசியின் தெரிவுக்கே விட்டனர்.

"நாம் வலிமை உடையோர். கடும் போர்த்திறன் உடை யோர். எனினும், முடிவெடுக்கும் அதிகாரம் உம்மிடம் உள்ளது. எனவே, என்ன ஆணை பிறப்பிப்பது என்பதை நன்கு யோசித்துக் கொள்வீராக என்றார்கள்." (27: 33)

நாம் மிக்க வலிமை பெற்றவர்கள். நீர் ஸுலைமா னுடன் போரிட வேண்டுமென முடிவு செய்து விட்டால் அதிலிருந்து நம்மைத் தடுக்க யாராலும் முடியாது. இதற்கு மேல் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் உமக்கே உள்ளது. நாம் அதற்குக் கட்டுப்படத் தயாராக உள்ளோம்.

அடுத்து, பில்கீஸை அரசியாகவல்லாமல் ஒரு பெண் ணாகப் பார்க்கிறோம். பொதுவாக பெண்கள் போர்க்க ளங்களை விரும்புவதில்லை. எனவே, மறுப்பையும் எதிர் கொள்வதையும் விட்டுவிட்டு, சமாதானத்தையும் உடன் பாட்டையும் விரும்புகிறார்.

"நிச்சயமாக அவர்களுக்கு நான் அன்பளிப்பு ஒன்றை அனுப்பப் போகிறேன். தூதுவர்கள் என்ன பதிலோடு திரும் புகிறார்கள் என்பதைப் பார்க்கப் போகிறேன் என்றார்" (27:35)

இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) கூறினார்கள்: பில்கீஸ் தம் சமூகத்தாரிடம் "ஸுலைமான் (அலைஹிஸ் ஸலாம்) அன்பளிப்பை ஏற்றுக் கொண்டால் அவர் ஒரு சாதாரண மன்னர்தான். அப்போது அவருடன் போர் புரியுங்கள். அவர் அதை ஏற்க மறுத்தால் அவர் ஓர் இறை தூதராவார். எனவே, அவரைப் பின்பற்றுங்கள்" என்று கூறினார். (தஃப்ஸீர் இப்னு அபீ ஹாத்திம்)

பில்கீஸ் மாபெரும் அன்பளிப்பை அனுப்பியபோதும் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அதனை ஏறிட்டும் பார்க்காமல் முற்றாகப் புறக்கணித்தவராக "பொருளைக் கொண்டு எனக்கு உதவப் போகிறீர்களா?" (27: 36) என்று கேட்டுவிட்டு அன்பளிப்பை திருப்பி அனுப்பினார்கள். நபிமார்கள் உலகத்தில் எதனையும் எதிர்பார்த்து அழைப் புப் பணி புரிபவர்களல்ல. பில்கீஸின் தூதுவர்கள் அவர் கொடுத்துனுப்பிய அன்பளிப்புக்களுடனும் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) கூறிய செய்தியுடனும் திரும்பிச் சென்றனர். எனவே, அவர் உண்மையான இறைதூதர்தான் என்பதைத் தெளிவாக விளங்கிக் கொண்டதும் அவரு டைய தூதுச் செய்திக்குக் கீழ்ப்படிந்தவர்களாக பில்கீஸும் அவர்தம் சமூகத்தினரும் இஸ்லாத்தில் இணையும் எண் ணத்தோடு ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை நோக்கிப் புறப்பட்டனர். அப்போது பில்கீஸ் அரச நிருவாகத்திலிருந்த அதிகாரியிடம் "உமது பொறுப்பி லுள்ள பொருட்களையும் என்னுடைய அரச சிம்மா சனத்தையும் நன்கு பாதுகாப்பீராக! இறையடியார்களில் யாரும் அதன் பக்கம் சென்று விடக் கூடாது. நான் உம்மிடம் திரும்பி வரும் வரை யாரும் அதைக் கண்ணால் கூட பார்த் துவிடக் கூடாது" என்று ஆணையிட்டிருந்தார். (தப்ஸீர் இப்னு அபீ ஹாத்திம்)

அரசி, தமது படையுடன் அடிபணிந்தவராக வருவதைக் கேள்வியுற்று மகிழ்ச்சியடைந்த இறைதூதரும் பேரரசரு மான ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) ஸபா நாட்டு அரசிக்கு தமது பேரரசின் அதிகார பலத்தையும் தமது ஆளுமையின் ஆழத்தையும் புரிய வைப்பதற்கு சில வேலைகளைச் செய்தார்கள். அவர் "அவையோரே! அவர் கள் அடிபணிந்து என்னிடம் வருவதற்கு முன்பே அவரது அரியாசனத்தை என்னிடம் கொண்டு வருபவர் உங்களில் யார்?" என்று கேட்டார். (27: 38)

வேத ஞானம் பெற்றிருந்த ஒருவர் "நீங்கள் உங்கள் கண்ணை மூடித் திறப்பதற்குள் அதை நான் உங்களிடம் கொண்டு வந்து விடுகிறேன்" என்று கூறினார். (27: 40)

ஜெரூஸலத்திலிருந்து சுமார் 1500 மைல்கள் தொலை விலுள்ள அரச சிம்மாசனத்தை கண் இமைக்கும் பொழு துக்குள் கொண்டு வருவதென்பது மாபெரும் அற்புதமாகும். இது தாம் இறைதூதர் என்பதை அரசிக்கு உணர்த்துவதே ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் நோக்கமாக இருந்தது. அரசியின் அரியணை அடையாளம் தெரியாத அளவுக்கு மாற்றப்பட்டது. "கண்டுபிடிக்க முடியாத வகையில் அவளது அரியணையை மாற்றி விடுங்கள். அவள் அடையாளம் கண்டு கொள்கிறாளா? அல்லது அடையாளம் கண்டு கொள்ளாதவர்களில் இருக்கிறாளா எனப் பார்ப்போம்" (27: 41) என்று ஸுலைமான் (அலை ஹிஸ்ஸலாம்) கூறினார்.

அரசி வந்து அதைக் காணும்போது அவரது புரிதலும் திறமையும் எவ்வாறுள்ளது என்பதைப் பரிசோதிப்பதே ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் நோக்க மாகும்.

பில்கீஸ் வந்ததும் அவரது அரசை விட தமது அரசு மிக வலுவானது என்பதையும் அவரது அதிகார வீச்சை விட தமது அதிகாரம் மிகப் பாரியது என்பதையும் அரசிக்கு காட்டுவதற்காக தமது மாளிகைக்குள் நுழையச் சொன் னார் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்). "இம்மாளிகைக் குள் நுழைவீராக" என்று சொல்லப்பட்டது. அதை அவள் பார்த்ததும் தரையில் நீர்த் தடாகம் இருப்பதாக எண்ணி தன் கணைக் கால்களிலிருந்து ஆடையை உயர்த்தினாள். அவர் "இது கண்ணாடிகள் பதிக்கப்பட்ட மாளிகை" என்று கூறினார். (57ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முதலில் எதனைக் கூறப் போகிறீர்கள்?



**"அல்லாஹ் உங்களை நேசிக்கிறான்; அவனே உங்களைப் படைத்து நீங்கள் அனுபவிப்பதற்காக இவ்வுலகையும் படைத்தான்" என நாம் எமது பிள்ளைகளுக்குக் கற்பித்தால் அவர்கள் தங்களை நேசித்துத் தங்கள் நன்மை பற்றிக் கரிசனை காட்டுகின்ற இந்த இறைவன் யார் என அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவார்கள்.**

"நான் இறைவனை நேசிக்கிறான்; அவனே என்னையும் இந்தப் பூமி, சூரியன், சந்திரன் முதலிய வற்றையும் படைத்தான்" எனக் கூறுமாறு நாம் எமது பிள்ளைகளுக்குக் கற்பித்தால் இதன் மூலம் அவர்களுக்கு வழங்கப்படும் செய்தி யாது? எல்லாவற்றுக்கும் முதலில் பிள்ளைகளிடம் இறைவன் பற்றிய கருத்துப் படிவமொன்றே இருக்காது. ஏனெனில், அது அவர்களால் அப்பருவத்தில் புரிந்து கொள்ள முடியாத பருப் பொருள் சாராக் கருத்தொன்றாகும். எனவே, அவர்களுக்குத் தெரியாத ஒன்றை நேசிப்பதும் நேசிக்காமலிருப்பதும் ஒன்றுதான். பிள்ளைகளைப் பொறுத்தவரை அவர்களும் அவர்களைச் சுற்றியுள்ள உலகமும் யதார்த்தமானவையாகத் தென்படுகின்றன.

இவ்விடயத்தை மறுதலையாக மாற்றி "அல்லாஹ் உங்களை நேசிக்கிறான்; அவனே உங்களைப் படைத்து நீங்கள் அனுபவிப்பதற்காக இவ்வுலகையும் படைத்தான்" என நாம் எமது பிள்ளைகளுக்குக் கற்பித்தால் அவர்கள் தங்களை நேசித்துத் தங்கள் நன்மை பற்றிக் கரிசனை காட்டுகின்ற இந்த இறைவன் யார் என அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவார்கள். இவ்வாறு அன்பு காட்டிப் பராமரிக்கும் அந்த இறைவனோடு தொடர்பு கொள்ளவும் அவனைப் பற்றி மேலும் மேலும் அறிந்து கொள்ளவும் அவர்கள் விரும்புவார்கள்.

வணக்கவழிபாடுகள், வாழ்க்கை தம்மைப் படைத்தவனின் நாட்டத்திற்கு சுய விருப்பத்தோடு அடிபணிதல் என்பவற்றுக்கிடையில் வலிமையான தொடர்பொன்று காணப்படுகிறது. எமது நன்னடத்தையானது அவனைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற ஆசையை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். ஏனெனில், அவனே நல்ல தன்மைக்கும் உண்மைக்கும் மூல காரணமானவனாக இருக்கிறான். எங்களதும் எங்களைச் சூழ உள்ளோரதும் வாழ்க்கைப் பண்பை மேம்படுத்துவதற்காக இறைவனது அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் பின்பற்றுவதே அவனைத் திருப்திப்படுத்துவதற்குரிய ஒரே வழியாகும்.

நல்லவர்களாகவும் கடும் உழைப்பாளிகளாகவும் பயனுள்ளவர்களாகவும் ஏனையவர்களுக்கு ஒத்தாசை புரிபவர்களாகவும் இருப்பதன் மூலம் நாம் எமது ஆன்மிகப் பண்புகளைப் பலப்படுத்திக் கொள்கிறோம். மேலும் இதன் மூலம் நாம் எமது இரட்சகனை நோக்கி நெருங்குகிறோம். மற்றவர்களது வாழும் உரிமை, சொத்துரிமை, கௌரவம் என்பவற்றை மதிப்பதன் மூலமும் நீதி, கருணை, சுதந்திரம் என்பவற்றை ஊக்குவிப்பதன் மூலமும் கொடுங்கோன்மையைத் தவிர்த்து அடக்குமுறையை எதிர்ப்பதன் மூலமும் நாம் பிறருக்குச் செய்யும் உதவி எமக்கு நன்மையாகவே அமையும்.

மேற்சொன்ன முயற்சிகளில் வெற்றி பெற வேண்டுமாயின் அல்லாஹ்வைப் பற்றியும் அவனது அழகான பண்புகளைப் பற்றியும் தொடர்ச்சியாக உணர்ந்து நினைவுகூர்வதும் அவசியமாகிறது. சமயக் கடமைகளை நிறைவேற்றுவது இவ்வுணர்வையும் அல்லாஹ்வின் மீதான அன்பையும் வலுப்படுத்தும். இவ்வழியில் எமக்கு அல்லாஹ்வின் அருள் கிட்டுகிறது; உளச் சுத்தியோடு அவனை வணங்குபவர்களுக்கு நல்லதையும் சரியானதையும் செய்யும் அவர்களது முயற்சியில் வெற்றி பெறுவதற்கான பலமும் கிடைக்கிறது.

**- பெற்றார் - பிள்ளை உறவுகள்: பிள்ளைவளர்ப்புக்கான ஒருவழிகாட்டி எனும் நூலிலிருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர் தலைமைத்துவ விருத்தியின் முன்னோடி
தரத்தின் சின்னம்
தாய்மை அபிவிருத்திக்கான

# ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா

வழங்கும் இளம் யுவதிகளுக்கான

## "ஃபதாயாத் தலைமைத்துவப் பயிற்சி நெறி"





- 4 மாத கால பயிற்சி
- ஜனவரி 2ஆம் வாரம் ஆரம்பம்
- மனோரம்யமான, ஆன்மிக மற்றும் இயற்கைச் சூழல்
- தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள்
- தரமான உணவு
- விசாலமான தங்குமிட வசதி

## உள்ளடக்கம்

குடும்பத் தலைமைத்துவ பயிற்சிகள்

வீட்டலங்காரம், தோட்டக் கலை

தொழில் சார் வழிகாட்டல்கள்

தலைமைத்துவத் திறன்களை வளர்ப்பதற்கான விளையாட்டுகள்

இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்

தொழில்நுட்பத்தையும் சமூக ஊடகங்களையும்(Social media) தஃவாவுக்காக திறம்பட பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்

ஷரீஆ பாடங்கள்

கலாசார நிகழ்ச்சிகள்

ஆன்மிக இரவுகள்

*இன்னும் பல...*

*மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்*

**Jamiah Ayesha Siddeeqa
for
Motherhood Development**

P O Box -14, Mawanella,
Tel: 077 395 0087, 071 823 4378
e-mail: alosrah2001@yahoo.com web: www.siddeeqa.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நப்பாசை

என் நரைத்த தலை மயிர்களுக்குள்ளே
தேடியபோது கிடைத்தது
நான் மகிழ்ந்து கிடந்த
அந்த நாட்கள்

திரும்பிப் பார்க்காத நதியும்
பாதை திரும்பாத புயலும் போலத்தான்
வாழ்ந்து முடித்த அந்த நாட்களும்
புதைந்து கொண்டிருந்த ஏதோவொன்றை
அறிந்து கொண்டபோது
அதிர்ந்து போனேன்...
வாழ்வு... வாழ்வு...
இன்னும் எத்தனை நாட்கள்...

பாதங்களில் சுவன வாயில் சுமந்தபடி
என்னைக் கருக்கொண்ட தாய்
முகிழ் விடும்போதே...
எனக்குச் சிறகு கட்டிய தந்தை
ஊதாரியாகாமல் பார்த்துக் கொண்டபடி
ஊரெல்லாம் சுற்றியலைந்த
சுட்டி நண்பர்கள்

இனிக்கவும் புளிக்கவும் உறைக்கவும் வைத்த
கிராமத்தின் சுட்டிச் சிறுமிகள்...
தன்னையழித்து என்னை ஒளிர்ந்த
ஆசான்கள்...
கோடுகளுக்குள் எல்லாமான...
என் தாயுமானவர்கள்

குழப்படித் தலைக்கு மேல்
கெட்டிக்கார மகுடம் சூடிக் கொண்டு
படைத்தவன் நெஞ்சிலேற்றி
தலை குனிந்த பொழுதுகள்
இந்த நந்தவன நாட்கள்
எத்தனை வருடங்கள்...?

வேண்டுமென்றே துறந்து வந்த
கிராமத்தின் மண் மனம்...
முகம் சுழிக்காமல் முக்கியெழும்
காபன் கெட்டிப் புகையும்
கழிவின் துர்வாடையும்
சரிவரக் கலந்த இன்றைய நகர வாழ்வு

பழம் நழுவி
பாலில் விழுந்ததென
இன்னொரு கருவறையாக்கி
என்னை ரப்பிடம் மீட்ட
ஜமாஅத்தின் நிறைகுடங்கள்
எனக்கும் ஏதோ தெரியுமென்று
மின்மினியிடம்
வெளிச்சம் கேட்கும்
நான் வளர்ந்த தொட்டிலின்
இன்றைய மாணவ இளசுகள்

'நுபுவ்வத்' வயதின்
இரண்டுதான் மூப்பு நான்
இன்று
மௌனமும் பேசுகிறது
மௌனப்படுகிறது மொழியும்
பதற்றம் நிதானப்படுகிறது
ஐக்கியப்படுகிறது அந்நியம்
இப்படி எத்தனையோ முரண் நகைகள்!

சுழிக்குள் அகப்பட்ட
தத்தளிப்புடன்தான்...நான்
இறையுவப்பில்
கெட்டியாகி என் மீது வந்து விழும்
பனிக்கட்டிகள் போல்
வகை கூறல்கள்... பொறுப்புகள்
இத்யாதிகள்

அவை
சிரசுக்கு கிரீடங்கள் எனினும்– என்
பாதங்கள் பூமியில்தான்!
தடத்தின் 'மூலம்' தேடினேன்...
பதித்த சாதனைக்கல்ல
படைத்தவன் சந்நிதானம் போனால்...
எனக்கொரு நிழல் கிடைக்குமா...?
என்ற நப்பாசையில்...

**கலாவெவ எம்.எஸ்.எம். பாரிஸ்**
**18.11.2014**



# ஜாஹிலிய்யத்தின் நிழலில்

நாகரிகப் புயலினுள் சிக்கி
சுழல்கின்ற
என் முஸ்லிம் சகோதரியே!
செவிதாழ்த்து இவளின்
மொழிக்கு
நீ பாழாக்கும் வாழ்நாளில்
ஒரு நிமிடத்தையாவது
செலவளித்து...

நீ அணிந்து கொண்டு
அலையும் ஆடை
ஆணின் பார்வைக்கு போடும்
திரையா?
இல்லை, அது அல்லாஹ்வின்
அருளுக்கு
நீயே போட்டுக் கொள்ளும்
திரை

மார்க்கம் தந்த பசும்
பூக்களாலான
ஆடையை களைந்து விட்டு
நாகரிகம் தந்த முட்களாலான
ஆடை போர்த்தி
உன்னையே நீ
காயப்படுத்துகிறாய்!

கற்பைப் பாதுகாக்க நீ அணியும்
அடையாளச் சீட்டு
கற்பை பறிகொடுக்க நீ
கொண்டுள்ள
நுழைவுச் சீட்டாய்
மாறிவிட்டது
இதன் பெயர்தான் நாகரிகமா?

உன்னால் சதிகார ஷைத்தானின்
பாதாளத்துள்
விழுந்து பாழான எத்தனையோ
இளைஞரின்
வாழ்வுக்கு
நாளை மறுமையில்
இறைவன் முன் பதில் கூற
நீ தயாரா?

அருளாளன் உனக்களித்த
வெண்காகிதமாம்
வாழ்க்கை
அதில் வரைந்து கொள் உன்
உருவத்தை.
சுவன வானில் சிறகடிக்கும்
சிட்டாய்!

**பாத்திமா றிப்கா சுபைர்**
**இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெல்லக் கருகும் உள்ளம்!

ஈகோ அது
உள்ளத்தின்
அழுக்கு!

ஆணவத்தின்
அணிகலன்!

இப்லீஸின்
இலட்சியம்!

பொறாமைத் தீயின்
சுவாலை!

அழுக்கை அகற்றா விட்டால்
இழுக்கில் வந்து முடியும்!

அணிகலனாகக் கொண்டால்
அசிங்கம் குடிகொள்ளும்!

இப்லீஸிய இலட்சியம்
பிடுங்கி எறியப்படா விட்டால்
இறை சாபம் இறங்கும்!

அந்தத் தீயை அணைக்கா விட்டால்
மெல்லக் கருகும்
உள்ளம்!



▶ ஜெம்ஸித் அஸீஸ்

## வெறுமையை விடுத்து மறுமையை வெற்றி கொள்!

கழியும் ஒரு துளி நீர்
உதிரக் கட்டியானதால்
வலியை
வேதனையையும்
வரையாது
தாய்க்கு வழங்கி
வெறுமனே
வையகம் கண்டவன் நீ!

காரிருள் களைய
கதிருக்கே
சுடர் கொடுக்கும்
பேரருள் நாயனின்
பெரு நன்கொடை
மனிதன் என்ற
மகுடம் உனக்கு!

பாரில் நீ காணும்
பேரும் புகழும்
போதுமென எண்ணி

உன் பெருமையால்
அல்லாஹ்வின்
பொறுமையை சோதிக்காதே!

புகழுக்குரியவன்
போதிக்க நினைத்தால்
பாருக்குள் நீ
பதராகி விடுவாய்
நீ சாதிக்க நினை
கர்வத்தால் அல்ல
கண்ணியத்தினால்!



**ராணி பௌசியா**
**கல்லளை**

## அருளன்பில் திளைப்போமாக!



இந்த உடல் உயிர் நமக்குச் சொந்தமல்ல
இருக்கின்ற இவ்வுலகும் நிலையும் அல்ல
வந்த இட முகவரிக்கே திரும்பிச் செல்லும்
வரையோலைக் கடிதம் நாம், ஆமாம் உண்மை!

எந்தவோர் நம் செயலும் தவறா வண்ணம்
இறைவனின் லௌஹுல் எனும் ஏட்டினிலே
விந்தையாய்ப் பதிகிறது எண்ணிக் கொள்வீர்
தீனின் வெளிச்சத்தில் இறைமேன்மை கண்டு கொள்வீர்!

கண்ணுக்குத் தெரியாமல் ரூஹ் ஓர் நாள்
கைதாகப் போகிறது என்ன செய்வோம்?

மண்ணாண்டு மனையாண்டு என்ன யிங்கே
மதியாண்டு நிதியாண்டு வந்த நம்மை
விண்ணாண்டும் மண்ணாண்டும் இருக்கும் மேலோன்
விசாரணைக் கைதியாய் அழைத்துப் போவான்!

பொன்னாண்ட புகழாண்ட மன்னர்கூட இறைப்
பேரரசின் முன்னாலே பணிந்தே நிற்பர்!
வாழ்கின்ற நாளேனும் நன்மை செய்து
வல்ல இறை உவப்பை நாம் பெறுவோமாக!

சூழ்கின்ற துயர் கண்டு அஞ்சிடாமல்
தொழுகையிலே துஆவிலே வெல்வோமாக!

நாள், வார, மாதமென்று நகரும் காலம்
நல் அமலை அதற்குள்ளே நிறையச் சேர்த்து
ஆலம் படைத்தாளுகின்ற பெரியோன் அல்லாஹ்
அருளன்பில் நாமெல்லாம் திளைப்போமாக!

**கவிஞர் மு. ஹிதாயத்துல்லாஹ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# Join WinSYS and Become Internationally Certified Network | System Engineer



CISCO | Microsoft | Linux

## குறுகிய காலத்தில் கணனி வலையமைப்பில் நிபுணத்துவத்தை பெற

- அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
- 11 வருட அனுபவம் நிறைந்தது
- நவீன ஆய்வு கூட வசதி
- அனைத்து மாணவர்களுக்கும் தனிப்பட்ட கணனி மற்றும் Routers

CISCO NETWORKING

**CCNA R&S** 200-120 Routing & Switching

**CCNA Voice** EXAM : 640-461

**CCNP R&S** Routing, Switching & Tshoot

**CCNA Security** EXAM : 640-554

100% Practicals with Real Cisco Equipments

Visit the Labs, then Join







Microsoft

**MCSA 2012** Microsoft Certified Solutions Associate

**MCSE 2012** Microsoft Certified Solutions Expert

70-410 Server 2012 | 70-411 Server 2012 | 70-412 Server 2012

70-687 Windows 8.1 | 70-688 Windows 8.1 | MCSE

High-Eng Laptops for MCSA & MCSE Practicals




**PHP with MySQL** | CENTOS **LINUX with Security** | **vmware vSphere** | **SAN Storage Area Networking STORAGE**

## ONE-DAY Workshop



CCTV, PABX Intercom, Network Cabling & Wireless
RS.2500/= With Lunch & Refreshments

## 4-DAYS RESIDENCIAL WORKSHOP

Fiber & Copper Cabling
CCTV with DDNS
PABX Systems
Access Control System

- Certicatetions from 3M & WinSYS
- Food & Refreshments Provided

CompTIA. A+ Certified

CompTIA. Network+™ Certified

**Hardware & Networking**
**Network Administration**

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றது · TVEC Reg.No :- P01 - /0402

# WinSYS NETWORKS®

The Network Security Training Provider of the Nation!

No: 14, Schofield Place,
Kollupitiya, Colombo-03

011-2589567
011-2589568

HOTLINE : 0777-259927

www.winsys.lk

Kandy : 0777-807630
Batticaloa : 0777-832871
Kuliyapitiya : 0777-825789
Jaffna : 0777-259927



One-Day Workshop on 10-08-2014





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**O/L மற்றும் A/L பரீட்சை எழுதிய உங்களுக்காகவே...**

# Kandy , Kuliyapitiya , Jaffna & Batticaloa

- MS Office Applications
- Computerized Accounting
- Graphic Designing
- Hardware & Networking
- Web Designing
- Network Administration
- Web Development
- AutoCAD 2D & 3D Drafting

**கணனித்துறையில் தொழில் வாய்ப்பை பெற மிகச் சிறந்த தேர்வு....**



உள்நாட்டில் மற்றும் வெளிநாடுகளில்
அதிக தொழில் வாய்ப்புக்கள்





பயிற்சி நெறியை முடித்தவுடனே சுய தொழில் வாய்ப்பை பெறும் வகையில்
வடிவமைக்கப்பட்ட பாடநெறி...

# CCTV Camera

**ONE-DAY TRAINING PROGRAM**

- CCTV Camera Installation
- PABX Intercom Networking
- Structured Network Cabling
- Wireless Technology

**2500/= Only**

100% Practical Trainings

**4-DAYS RESIDENCIAL CAMP**

- Fiber Cabling Practicals (3M)
- Copper Cabling Practicals (3M)
- CCTV Camera Instalation
- DDNS (Remote View) Settings
- PABX Advanced Training
- Access Control Security System

Food & Refreshments Provided
Certifications from Both WinSYS Networks & 3M Lanka

**WinSYS NETWORKS®**
The Network Security Training Provider of the Nation !

No: 14, Schofield Place, Kollupitiya, Colombo-03
011-2589567
011-2589568

HOTLINE : 0777-259927

www.winsys.lk

Kandy : 0777-807630
Batticaloa : 0777-832871
Kuliyapitiya : 0777-825789
Jaffna : 0777-259927


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அபூ அப்திர் ரஹ்மான்

❖❖❖❖❖❖❖❖

குழந்தைகள் தமது சொந்தக் கால்களில் நிற்கின்ற நிலை உருவாக்கப்பட வேண்டும் என்பது முக்கியமான தாகும். பாடங்களை மீட்டுவதும் வகுப்பில் முன்னிலையைப் பெறுவதும் பெற்றோர் கையிலேயே தங்கி யிருக்கின்றது என பிள்ளை உணரத் துவங்கினால் அவர்களது ஆர்வம் குறைந்துவிடும்.

❖❖❖❖❖❖❖❖



# பாடசாலைப் பயிற்சிகளில் தாமதமா?

## கேள்வி- பதில்: 05

கேள்வி: எனது மகன் நான்காம் வகுப்பில் கல்வி பயில்கிறான். படிப்பில் திறமையானவள். அதற்குக் காரணம் நான் கண்டிப்பாக இருப்பதுதான். அவனது படிப்பை நான் மேற்பார்வை செய்யாவிட்டால் கவனயீனமாக இருப்பான். பல மணித்தியாலயங்கள் கதிரையில் உட்கார்ந்திருப்பான். பாடத்தில் கவனத்தைக் குவிக்க மாட்டான். நான் பரிசுகள் வழங்க முயற்சித்திருக்கிறேன். ஆனால், அது போதிய பயனளிப்பதாக இல்லை. தண்டனைகளும் கண்டிப்புமே எனது மகனை ஓரளவு செயற்பட வைக்கின்றன. நான் அவனோடு அதிக நேரத்தை செலவழிக்க வேண்டிய தேவையும் ஏற்படுகிறது. இந்நிலையில்எனக்கு உரியஆலோசனை வழங்குமாறு அன்பாய் வேண்டுகிறேன். - தாய் -

பதில்: குழந்தை விடயத்தில் உங்களது ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். இங்கு குழந்தைகள் தமது சொந்தக் கால்களில் நிற்கின்ற நிலை உருவாக்கப்பட வேண்டும் என்பது முக்கியமானதாகும். பாடங்களை மீட்டுவதும் வகுப்பில் முன்னிலையைப் பெறுவதும் பெற்றோர் கையிலேயே தங்கியிருக்கின்றது என பிள்ளை உணரத் துவங்கினால் அவர்களது ஆர்வம் குறைந்துவிடும். பொதுவாகவே சிறு வயதுக் குழந்தை நேரத்தின் பெறுமதியை உணராதிருப்பது சாதாரண விடயமாகும். அவர்களை நாம் இத்துறையில் பயிற்றுவிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

அவ்வகையில் பின்வரும் வழிமுறைகள் மூலமாக குழந்தைகள் தமது சொந்தக் காலில் தங்கியிருக்கும் நிலையை அதிகரிக்கலாம்:

01. குழந்தைகளால் சுயமாகச் செய்ய முடியுமான வேலைகளை நீங்கள் செய்ய முற்பட வேண்டாம்.

02. வீட்டு வேலைகளிலும் குழந்தைகளைப் பங்கேற்கச் செய்யுங்கள்.

03. தன்னால் பல புதிய வேலைகளைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை குழந்தைக்கு ஏற்படுத்துங்கள்.

04. 'உன்னால் இதனைச் செய்ய முடியும்' 'உன்னால் சாதிக்க முடியும்' போன்ற உற்சாகமூட்டும் வார்த்தைப் பிரயோகங்களை அடிக்கடி கையாளுவதோடு எதிர்மறையாகப் பேசுவதை முற்றாகவே தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**பின்வரும் வழிமுறைகள் ஊடாக குழந்தைகளிடத்தில் சுயமாகக் கற்கும் ஆற்றலை அதிகரிக்கலாம்:**

01. படிப்படியாக குழந்தையிடமிருந்து உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள்.

02. பாடங்களை மீட்டுவது தொடர்பாக குழந்தையைப் பயிற்றுவித்தல்.

03. குழந்தைக்கு வாழ்க்கையில் ஓர் இலக்கை உருவாக்கிக் கொடுத்து தற்போது இடம்பெறும் பாடசாலைக் கல்வியோடு தொடர்புபடுத்தி விடல்.

04. பாட மீட்டலின்போது இடைக்கிடையே ஓய்வு நேரங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(50ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸூரா இப்றாஹீம் நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது மக்கா வாழ்வின் இறுதிக் காலப் பகுதியில் இறங்கிய ஸூராக்களில் ஒன்றாகும். எள்ளிநகையாடல், இழிவுபடுத்தல், பொய்ப் பிரசாரங்களைக் கட்டவிழ்த்துவிடல் என்ற நிலையிலிருந்து சிறைவாசம், சித்திரவதை, கொலை முயற்சிகள் என்ற நிலை வரைக்கும் முஸ்லிம்கள் மக்காவில் சோதிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது பனூ ஒளி, இலகு மற்றும் சுபிட்சத்துடனும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இந்த வசனத்தில் "இருள்களிலிருந்து ஒளியை நோக்கி" என்பதற்கு 'குஃப்ரிலிருந்து ஈமானை நோக்கி' என்றும் "அல்லாஹ்வுடைய நாட்கள்" என்பதற்கு 'அல்லாஹ்வுடைய அருள்கள்' என்றும் இப்னு அப்பாஸ், உபை இப்னு கஅப் (ரழியல்லாஹு அன்ஹுமா) போன்றோர் விளக்கியுள்ளனர். (மஆலிம் அத்தன்ஸீல்- இமாம் அல்பகுவீ (ரஹிமஹுல்லாஹ்)


மக்கத்து முஸ்லிம்கள் எதிர்கொண்ட துயரங்களை விட அவர்களுக்கு முன்பு வாழ்ந்த பனூ இஸ்ரவேலர்கள் பாரிய இன்னல்களில் சிக்கிக் கிடந்த போது அவற்றிலிருந்து அல்லாஹ் அவர்களை விடுதலை பெறச் செய்தமை ஒரு பேரருளாக சுட்டிக் காட்டப்படுகிறது.

**மனித வரலாற்றில் உதித்த ஒரு மாபெரும் இறைத் தூதரால்கூட அல்லாஹ்வின் சில அருட்கொடைகளுக்கு நன்றியைப் பூரணப்படுத்த முடியுமான அளவுக்கு வானத்திலும் பூமியிலும் மனித வாழ்விலும் அல்லாஹ் தன் அருட்கொடைகளைக் கொட்டிக் குவித்துள்ளான்.**

# அல்லாஹ்வின் அருட்கொடைகளும் அடியார்களின் நன்றியுணர்வும்

இஸட்.ஏ.எம். பவாஸ்,
சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம், மலேசியா

இஸ்ரவேலர்கள் ஃபிர்அவ்னின் அடக்குமுறையில் சிக்குண்டு எதிர்கொண்ட கடுமையான சோதனையை அல்லாஹ் இந்த ஸூராவில் விவரிக்கிறான். ஒரு சமூகத்தை இருளிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டு வருவதற்கு அந்த சமூகத்திற்கு அல்லாஹ்வின் அருள்கள் நினைவூட்டப்பட வேண்டும் என்று இங்கு உணர்த்தப்படுகிறது.



"நிச்சயமாக நாம் மூஸாவை நம்முடைய அத்தாட்சிகளைக் கொண்டனுப்பி 'நீர் உம்முடைய சமூகத்தினரை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியின்பால் கொண்டு வாரும். அல்லாஹ்வுடைய நாட்களை அவர்களுக்கு நினைவூட்டுவீராக' என்று கட்டளையிட்டோம். நிச்சயமாக இதில் பொறுமையுடையோர், நன்றி செலுத்துவோர் யாவருக்கும் படிப்பினைகள் இருக்கின்றன." *(14: 5)*

அரேபியக் கவிதைகளில் இருள், வழிகேடு மற்றும் இன்னல்களுடனும்

"மூஸா தம் சமூகத்தாரிடம் ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாரிடமிருந்து அல்லாஹ் உங்களைக் காப்பாற்றியபோது அவன் உங்களுக்குப் புரிந்த அருட்கொடையை நினைத்துப் பாருங்கள். அவர்களோ உங்களைக் கொடிய வேதனையால் துன்புறுத்தியதுடன் உங்களுடைய ஆண் குழந்தைகளை அறுத்துக் கொலை செய்து உங்கள் பெண் மக்களை மட்டும் உயிருடன் வாழ வைத்தார்கள். இதில் உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு மகத்தான சோதனை இருந்தது என்று கூறினார்." *(14: 6)*

ஆயிரக் கணக்கான குழந்தைகளைக் கொன்று குவித்தமை வாழ்நாள் முழுவதும் மனிதர்களின் உள்ளத்திலிருந்து மறையும் செய்தியல்ல. ஃபிர்அவ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எதனையும் கூட்டவோ சேர்க்கவோ அவசியமற்றவாறு எல்லாக் காலங்களினதும் தேவைகளுக்கேற்ப மார்க்கம் முழுமை பெற்றுள்ளது. ஆனால், அல்லாஹ்வின் அருள் பற்றிக் கூறும்போது அதற்கு வரையறை எதுவும் விதிக்காத, மென்மேலும் பூரணப் படுத்தப்பட முடியுமான பொருளைத் தரும் أَتَمَّ என்ற சொல்லே கையாளப்பட்டுள்ளது.

னின் கொலை வெறியை சித்திரிக்க மிருகங்களை அறுத்துப் பலியிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லைக் குர்ஆன் கையாண்டுள்ளது. ஆண்கள் குறைந்து பெண்கள் மட்டும் பெருகிய ஒரு சமூகம் பலவீனத்தையும் இழிவையும் தானாகச் சுமந்து கொள்கிறது. அந்தத் தருணத்தில் அல்லாஹ் பொறுமை பற்றி பிரஸ்தாபிக்காமல் அவர்களுடைய சிந்தனைப் போக்கையே மாற்ற விரும்பினான்.

*"நீங்கள் நன்றி செலுத்தினால் நிச்சயமாக உங்களுக்கு நான் அதிகமாக்குவேன். நீங்கள் நன்றி செலுத்தாதுமாறு செய்தீர்களானால் நிச்சயமாக என்னுடைய வேதனை மிகக் கடுமையானதாகும் என்று உங்களுக்கு இறைவன் அறைகூவல் விடுத்ததையும் நினைவுகூருங்கள்."*

*(14: 7)*

இங்கு "நீங்கள் நன்றி செலுத்தினால்" என்பது அரபு மூலத்தில் شَكَرْتُمْ என இறந்த காலத்தில் வந்துள்ளது. அதன் பொருள் "நீங்கள் ஒரு தடவையாவது எனக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க மாட்டீர்களா?" என்று கேட்பது போல் அமைந்துள்ளது. அவ்வாறு மனிதர்கள் ஒரு முறையேனும் நன்றி செலுத்தினால் அதிகமாக்குவதாக அல்லாஹ் பொதுவாகக் குறிப்பிடுகின்றான். ஆனால், எதனை அதிகமாக்குவது என்று குறிப்பிட்டுக் கூறவில்லை. குர்ஆனில் ஏனைய இடங்களில் ஈமானை அதிகமாக்குவதாகவும் (20: 114) கூறுகின்ற அல்லாஹ், நன்றியுணர்வுள்ள மனிதர்களின் வாழ்வில் அவன் அதிகப்படுத்தும் அம்சம் நமது கற்பனைக்கு எட்டாததாகவே இருக்கலாம். மேலும் குர்ஆனில் பொதுவாக விளிப்பது போல் 'நாம்' என்று கூறாமல் அவனுடைய அளவு கடந்த அன்பை வெளிப்படுத்தும் விதமாக "நான் அதிகமாக்குவேன்" என்றும் வாக்களிக்கின்றான்.

மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய நல்லுபதேசம் தொடர்கிறது.

*"மேலும் மூஸா தம் சமூகத்தாரிடம் நீங்களும் பூமியிலுள்ள அனைவரும் ஒன்றுசேர்ந்து நன்றி செலுத்தாது மாறு செய்தாலும் நிச்சயமாக அல்லாஹ் தேவையற்றவனும் புகழுடையவனுமாக இருக்கிறான் என்று கூறினார்." (14: 8)*

இந்த வசனத்தில் மாறு செய்வதற்கு 'குப்ர்' எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'ஷுக்ர்' என்பதற்கு எதிர்ச் சொல்லான இது ஒன்றை மூடி மறைப்பதை சுட்டுகிறது. அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதை அபூதர் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்கள்:

"என் அடியார்களே! மனிதர்களிலும் ஜின்களிலும் முதலாமவர், இறுதியானவர் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து உங்களிலுள்ள ஒரு நல்லடியானின் இதயத்தைப் பெற்று நற்செயல்கள் புரிந்தாலும் அதனால் என்னுடைய அரசாட்சியில் ஒரு சிறிதும் கூடி விடாது. என் அடியார்களே! உங்களிலுள்ள மனிதர்களிலும் ஜின்களிலும் முதலாமவர், இறுதியானவர் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து உங்களிலுள்ள ஒரு பாவியின் இதயத்தைப் பெற்று அக்கிரமங்கள் புரிந்தாலும் அதனால் என்னுடைய அரசாட்சியில் ஒரு சிறிதும் குறைந்துவிடாது."

(ஸஹீஹு முஸ்லிம்)

இதனால்தான் அல்லாஹ் *"எவன் நன்றி செலுத்துகிறானோ அவன் தனது நன்மைக்காகவே நன்றி செலுத்துகிறான். எவன் மாறு செய்கிறானோ நிச்சயமாக அல்லாஹ் தேவையற்றவனும் புகழுடையவனுமாக இருக்கிறான்" (31: 12)* எனக் குறிப்பிடுகின்றான்.

ஸூரா இப்ராஹீமின் மையக்கருவுடன் நெருங்கிய தொடர்புள்ள இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது வரலாற்றின் ஒரு பகுதியும் இந்த அத்தியாயத்தில் இணைக்கப்பட்டுள்ளது. தமது குடும்பத்தினரை பாலைவனத்தில் தன்னந்தனியாக விட்டுச் சென்றபோது தமது நீண்ட பிரார்த்தனையில் இவ்வாறு இறைஞ்சுகிறார்.

*"மக்களில் ஒரு தொகையினரின் இதயங்களை அவர்கள்பால் சாய்ந்திடச் செய்வாயாக, அவர்கள் நன்றி செலுத்துவதற்காக!"*

*(14: 37)*

*"என்னுடைய முதுமையில் இஸ்மாஈலையும் இஸ்ஹாக்கையும் எனக்களித்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். என் இறைவன் பிரார்த்தனையை செவியேற்பவன்."*

*(14: 39)*

அரபியில் அருட்கொடைக்கு نِعْمَةٌ என்று கூறப்படுகின்றது. இந்தச் சொல்லுக்கு نِعَمٌ மற்றும் أنعُم என்று இரண்டு வித்தியாசமான பன்மைகள் உள்ளன. نعم என்பது أنعم என்பதை விட எண்ணற்ற பல மடங்கு பலம் வாய்ந்த மேம்படுத்தப்பட்ட பன்மையாகும். இவ்விரு சொற்களும் குர்ஆனில் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை மாத்திரமே இடம்பெற்றுள்ளன. இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் நன்றி நவிலல் பற்றி ஸூரதுந் நஹ்லில் குறிப்பிடும்போது شَكِرًا لِأَنْعُمِهِ "அல்லாஹ்வின் சில அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துபவராக அவர் இருந்தார்'' (16: 121) என்று பலவீனமான பன்மையையே அல்லாஹ் பயன்படுத்தியுள்ளான். ஏனெனில், "அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் கணக்கிட்டால் அவற்றை எண்ண முடியாது." (16: 18)

"நபியே! கூறுவீராக! என் இறைவனின் வாக்கியங்களை எழுதுவதற்கு கடல் நீர் யாவும் மையாக இருந்தாலும் என் இறைவனின் வாக்கியங்களை எழுதி முடிவதற்கு முன்னதாகவே கடல் நீர் முடிந்துவிடும். அது போன்ற இன்னொரு கடலையும் நாம் உதவிக்கு கொண்டு வந்த போதிலும் சரியே!" (18: 109)

"நிச்சயமாக பூமியிலுள்ள மரங்கள் யாவும் எழுதுகோல்களாகவும் கடல் நீர் யாவும் மையாகவும் இருந்து அது தீர்ந்தற்குப் பின்னர் இன்னும் ஏழு கடல்கள் அதனுடன் மையாகச் சேர்ந்து அவற்றால் எழுதிக் கொண்டிருந்தாலும் அல்லாஹ்வின் வார்த்தைகள் எழுதித் தீராது." (31: 27)

மனித வரலாற்றில் உதித்த ஒரு மாபெரும் இறைத்தூதரால்கூட அல்லாஹ்வின் சில அருட்கொடைகளுக்கு நன்றியைப் பூரணப்படுத்த முடியுமான அளவுக்கு வானத்திலும் பூமியிலும் மனித வாழ்விலும் அல்லாஹ் தன் அருட்கொடைகளைக் கொட்டிக் குவித்துள்ளான். இதனால்தான் "அல்லாஹ் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் நீங்கள் பார்க்க முடிந்ததும் பார்க்க முடியாததுமான தன் எண்ணற்ற அருட்கொடைகளை உங்கள் மீது நிரம்பச் செய்துள்ளான்" (31: 20) என்ற வசனத்தில் نِعَم எனும் மிகப் பலம் வாய்ந்த பன்மையை அல்குர்ஆன் பயன்படுத்தியுள்ளது.

மேலும் "இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை நான் பரிபூரணமாக்கி விட்டேன். என்னுடைய அருட்கொடையை உங்கள் மீது முழுமையாக்கி விட்டேன்" (5: 3) என்ற வசனத்தில் பூரணப்படுத்தலை சுட்டிக்காட்ட இரு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மார்க்கம் பூரணப்படுத்தப்பட்டதைக் குறிப்பிட أَكْمَلَ என்ற சொல்லும் அல்லாஹ்வுடைய அருள் முழுமையாக்கப்பட்டதைக் குறிப்பிட أَتَمَّ என்ற சொல்லும் கையாளப்பட்டுள்ளது. மார்க்கம் மனித வாழ்வின் சகல துறைகளையும் உள்ளடக்கி பூரணப்படுத்தப்பட்டுள்ளது. எதனையும் கூட்டவோ சேர்க்கவோ அவசியமற்றவாறு எல்லாக் காலங்களினதும் தேவைகளுக்கேற்ப மார்க்கம் முழுமை பெற்றுள்ளது. ஆனால், அல்லாஹ்வின் அருள் பற்றிக் கூறும்போது அதற்கு வரையறை எதுவும் விதிக்காக, மென்மேலும் பூரணப்படுத்தப்பட முடியுமான பொருளைத் தரும் أَتَمَّ என்ற சொல்லே கையாளப்பட்டுள்ளது.

எனவே, மக்கத்து முஸ்லிம்கள் அன்று எதிர்கொண்ட இன்னல்களுடன், இன்றைய முஸ்லிம்கள் எதிர்நோக்கும் அற்பப் பிரச்சினைகளை ஒப்பிடவே முடியாது என்பதை அல்லாஹ்வின் அருள்களுக்கு நன்றியுள்ள மனிதர்களால் மட்டுமே விளங்கிக் கொள்ள முடியும். ■

**பாகிஸ்தானில்...** (19ஆம் பக்கத் தொடர்)

இலங்கையிலிருந்து இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி எம். எஸ்.எம். பாரிஸ் கலந்து கொண்டார்.

இஜ்திமா ஏற்பாடுகள் அனைத்தும் வியக்கத்தக்க வகையில் பிரமாதமாக அமைந்திருந்தன. இஜ்திமா நிகழ்ச்சிகளை சமூக வலைத் தளங்களினூடாக வழங்குவதில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஈடுபட்டனர். இஜ்திமாவில் கடைபிடிக்கப்பட்ட ஒழுங்கு மற்றும் கட்டுப்பாட்டை ஊடகங்களும் பாராட்டின.

ஜமாஅத் அமீர் தனது முடிவுரையில், துன்பமுற்றோரின் துயர் துடைப்பதில் ஊழியர்கள் அர்ப்பணத்தோடு உழைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். தொழுகையில் பேணுதல், தினமும் அல்குர்ஆன் ஓதுதல், பொய், புறம் என்பவற்றிலிருந்து விலகி வாழ்தல் முதலானவற்றையும் வலியுறுத்தினார். பாகிஸ்தானில் இஸ்லாமிய ஆட்சியைக் கொண்டு வரும் ஜமாஅத்தின் முயற்சியில் அனைவரும் அர்ப்பணிப்போடு பங்கு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

**விஷேட விலையில்**

**அல்ஹஸனாத் Binding**

2014ஆம் ஆண்டு அல்ஹஸனாத் பிரதிகள் Binding செய்யப்பட்டுள்ளன. பெற விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

விலை: 1000.00 ரூபா மட்டுமே!

தொடர்புகளுக்கு:

**எம்.ஏ.எம். பிலால்**
**0772992220**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

After O/L

# Diploma in Information Technology

## Islamic Institute of Information Technology

வழங்கும் டிப்ளோமா பாடநெறி. எதிர்காலச் சவால்களை வெற்றிகொள்ளத் தயாராகுங்கள்.

**இக்கற்கை நெறியை ஏன் நீங்கள் தெரிவு செய்ய வேண்டும்?**

- ✓ பாதுகாப்பான இஸ்லாமிய சூழல்
- ✓ நவீன கணனி ஆய்வு கூடம்
- ✓ உயர் கற்கை நெறிகளுக்கான கல்வி வழிகாட்டல்.
- ✓ குறைந்த கட்டணம் நிறைந்த பயன்
- ✓ முழுமையான இஸ்லாமியப் பயிற்சிகளுடன் இணைந்த கற்கை நெறிகள்

**Course Fee**
Rs. 15000/= மட்டுமே
உணவு, தங்குமிட
வசதியுடன்


100% Practical

## Diploma in Information Technology

Get up to speed in the information highway, learn the latest software and master the basics of computing

- Introduction to ICT
- Microsoft Office™ 2010 Suite
  - Microsoft Word 2010
  - Microsoft Excel 2010
  - Microsoft Power Point 2010
  - Microsoft OneNote 2010
  - Microsoft Publisher 2010
  - Microsoft Visio 2010
  - Internet & Email
- Desktop top Publishing
  - Adobe Photoshop CS 3
  - Corel Draw X4
  - Adobe Page Maker 7.0
- PC Hardware (Practical Oriented)
- Introduction to Networking





## Soft Skills Training

Soft Skills Training would help improve your personal outlook, build your confidence and equip yourself with range of tools to get productive

பாடநெறி ஆரம்பம் : 13th January 2015
இடம் : Islamic Institute of Information Technology Old Town, Madampe
கட்டணம் : Rs 15,000 (உணவு, தங்குமிட வசதியுடன்)

Duration – 1 Month
Limited Intake - 30 Students Only
CALL Rushdeen on 0773 171 718
Reserve your place today


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

அஷ்ஷெய்க் கியாஸ் முஹம்மத் (நளீமி) M.A. விரிவுரையாளர்- ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா





கோள்கள், நட்சத்திரங்கள், சூரிய குடும்பம், பால் வெளி, ஞாயிற்றுத் தொகுதி என் றெல்லாம் ஆய்வு செய்யும் விண்வெளி ஆய்வாளர்கள் படைப்பாளன் ஒருவனே என்ற முடிவுக்கு வருகின்றனர்.

# படைப்பாளனின் அற்புதம்

ஒரு நோயாளியை வைத்தியர்கள் பரீட்சித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பம் அது. வைத்தியர்களுள் முஸ்லிமான, முஸ்லிமல்லாத இருவர் இருந்தனர். நோயாளியின் இதயத் துடிப்பை இயந்திரம் காட்டிக் கொண்டிருந்தது. திடீரென நோயாளிக்குத் தும்மல் ஏற்பட இதயத் துடிப்பு தடைப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கின்றது. இதனை அவதானித்துக் கொண்டிருந்த முஸ்லிம் அல்லாத வைத்தியர் இஸ்லாத்தைத் தழுவினார். முஸ்லிம்கள் தும்முகின்றபோது 'அல்ஹம்துலில்லாஹ்' எனக் கூறி அல்லாஹ்வைப் புகழ்வது அவருக்கு ஏலவே தெரியும். அதன் யதார்த்தத்தையும் தேவையையும் குறித்த அந்த சந்தர்ப்பத்தில் புரிந்து கொண்டமையே அவர் இஸ்லாத்தில் நுழைவதற்கு காரணம் என்ற செய்தியை எனது நண்பர் ஒருவர் வாயிலாக செவியுற்றபோது படைப்பளானின் அற்புதம் உள்ளத்தில் உணர்வுகளை ஏற்படுத் தியது.

"நிச்சயமாக வானங்கள், பூமியின் படைப்பிலும் இரவு, பகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு அத்தாட்சிகள் உண்டு" என ஆரம்பிக்கும் ஸூறா ஆலு இம்ரானின் இறுதிப் பத்து வசனங்கள் இறங்கியபோது தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அதனை ஓதி, சிந்தித்து கண்ணீர் வடித்தார்கள். இவ்வசனங்களை ஓதி அவை பற்றி சிந்திக்காதோர் நஷ்டமடைவர் எனவும் நபிய வர்கள் எச்சரித்தார்கள். (இப்னு ஹிப்பான், ஷெய்க் அல்பானி இதனை ஸஹீஹான ஹதீஸ் எனக் கூறியுள்ளார்)

உள்ளத்தினால் செய்யும் திக்ரின் முக்கியதொரு வெளிப்பாடே இறை படைப்புகள் குறித்து சிந்திப்பதாகும். அல்லாஹ்வை, அவனது ஆற்றலை விளங்குவதற்கு, அதன் காரணமாக இறை நெருக்கமும் ஈமானிய உறுதியும் பெறுவதற்கு இது பிரதான வழிமுறையாக அமைகின்றது.

எனவேதான் அல்குர்ஆன் "படைப்புகள் பற்றி நீங்கள் சிந்திக்கவில்லையா?" என்று பொதுவாகவும் வானம், பூமி இரவு, பகல், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மலைகள், ஒட்டகம் எனத் தனித்தனியா கவும் படைப்புகளைச் சொல்லி அவற்றின் அத்தாட்சிகளை சிந்திக்கவில்லையா? எனப் பல இடங்களில் கேள்வி எழுப்புகின்றது.

கோள்கள், நட்சத்திரங்கள், சூரிய குடும்பம், பால் வெளி, ஞாயிற்றுத் தொகுதி என் றெல்லாம் ஆய்வு செய்யும் விண்வெளி ஆய்வாளர்கள் படைப்பாளன் ஒருவனே என்ற முடிவுக்கு வருகின்றனர். மறு பக்கம் கலங்களையும் அதற்குள் இருக்கும் அணுவையும் அணு வுக்குள் இருக்கும் துணிக்கை களையும் நுணுக்கமான ஆய் வுக்கு உட்படுத்தி படைப்பின் மூலத்தைக் கண்டறிய முற்ப ட்ட விஞ்ஞானிகள் அது சாத் தியமில்லை எனக் கண்டபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளின் துணிக்கை (God matter) எனும் ஓர் உண்மையை ஏற்றுக் கொள்கின்றனர். மட்டுமன்றி, ஏராளமான விஞ்ஞானிகளும் படித்தவர்களும் இறை மார்க்கத்தைத் தழுவுவதற்கு இது காரணமாய் அமைகின்றது.

படைப்பாளன் அல்லாஹ்வை ஈமான் கொண்டு நாம் ஏற்றிருக்கிறோம். அவனது படைப்பாற்றலை படைப்புகளின் ஊடாக அவதானித்து, படித்து, விளங்கி ஈமானை மெருகூட்டத் தவறுவோர் முன்பை விடவும் இன்றைய நாட்களில் படைப்புகளின் அற்புதம் ஆய்வு ரீதியாக உண்மைப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதை உணர வேண்டும்.

*"எமது அத்தாட்சிகளை பிரபஞ்சத்திலும் அவர்களிலும் நாம் காட்டிக் கொண்டிருப் போம்."* ***(41: 5)***

வானம், பூமி ஒரு பக்கம் இருக்க மனிதர்களாகிய நமது உடம்பு படைப்பாளனின் ஏராளமான அற்புதங் களைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. மனிதனின் மூளை, இதயம், கண், காது, கை, கால் என நீண்டு செல்லும் உறுப்புகளும் அவற்றின் அற்புதமான செயற்பாடுகளும் பலபோது நாம் சிந்திக்கத் தவறுகின்ற பக்கங்கள்.

நாம் எமது உடம்பின் 360 மூட்டுகளுக்கும் ஒவ்வொரு நாளும் தர்மம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம் எனும் நபிகளாரின் வழிகாட்டல் இதனையே உணர்த்தி நிற்கின்றது. மூட்டுகள் இன்றி அசைக்க முடியாத நிலையில் எமது உறுப்புகளை சிந்தித்துப் பார்த்தால் எப்படியிருக்கும், ஸுப்ஹானல்லாஹ்! அனைத்தையும் கச்சிதமாகப் படைத்துக் காத்துக் கொண்டிருக்கும் அல்லாஹ் மிகத் தூய்மையானவன், வல்லமை மிக்கவன்.

ஒரு விபத்தில் காலொன்றை இழந்து பிளாஷ்டிக் காலின் உதவியோடு நடமாடும் ஒரு சகோதரரை சந்தித்தேன். அவர் ஒவ்வொரு முறையும் அமரும்போதும் எழும்பும்போதும் முழங்கால் பகுதியில் ஒரு பொத்தானைக் கழற்றி விடுகிறார். நாமோ எந்த பொத்தானும் இல்லாமல் இயல்பாக ஓடி ஆடி செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். எல்லாப் புகழும் படைப்பாளன் அல்லாஹ்வுக்கே.


இறையருள்கள் குறித்து நினைவுகூருமாறு ஸூறா ழுஹா எம்மிடம் வேண்டி நிற்கின்றது. நாம் படைப்புகளின் யாதார்த்தத்தை மிகச் சரியாகப் புரிந்து கொண்டால் இறையருள்களை, படைப்பாளனின் அற்புதத்தை உணர்ந்து கொள்வோம்; எமது ஈமான் பிரகாசிக்கும். இறைவன்பால் தேவையோடு நாடிச் செல்வோம். இவை பற்றி பேசுவது தஃவாவாகவும் மாறிவிடும். இத்தகையதோர் உயர் நிலைக்கு வல்ல நாயனிடம் கரமேந்துவோம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## இரு நாள் விஷேட செயலமர்வு

ஜம்இய்யாவின் ருகூன் அங்கத்துவத்திற்கான நேர்முகப் பரீட்சைக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான விஷேட செயலமர்வொன்று கடந்த மாதம் 6,7 ஆம் திகதிகளில் ஜமாஅத்தின் தலைமையகக் கேட்போர்கூடத்தில் இடம் பெற்றது.

16 ஊழியர்கள் கலந்து கொண்ட இச்செயலமர்வில் இஸ்லாமிய இயக்கம், ஆன்மிக வாழ்வு, ருகூன் அங்கத்தவர் களிடம் இருக்க வேண்டிய ஆளுமைப் பண்புகள், இயக் கத்தின் உயர் மட்ட உறுப்பினர்கள் என்ற வகையில் அவர் களின் வகிபாகம் முதலான பல தலைப்புகளில் கலந்துரை யாடல்களும் விரிவுரைகளும் இடம் பெற்றன.

இதில் வளவாளர்களாக ஜமாஅத்தின் மத்திய மஜ்லி ஸுஷ் ஷூரா உறுப்பினரும் பொறியிலாளருமான இஸட்.எம். நௌஸர், ஜமாஅத்தின் தேசிய ஒருங்கிணைப்புப் பகுதியில் பணியாற்றும் அஷ்ஷெய்க் ரிழ்வான் (இஸ்லாஹி), ஜம்இய்யாவின் முன்னாள் நாஸிம்களில் ஒருவரான பொறியியலாளர் என்.எம். முன்ஸிப் மற்றும் ஜம்இய்யாவின் நாஸிம் அஷ்ஷெய்க் ஸுஃபியான் (நளீமி) ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ருகூன் அங்கத்தவர் ஒன்றுகூடல்

2014 ஆம் ஆண்டுக்கான ஜம்இய்யாவின் இறுதி ருகூன் அங்ககத்தவர் ஒன்றுகூடல் கடந்த மாதம் 08ஆம் திகதி தாருல் ஈமான் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

36 அங்கத்தவர்கள் கலந்து கொண்ட இவ்வமர்வில் ஜம்இய்யாவின் யாப்பில் சில திருத்தங்கள் மேற்கொள் ளப்பட்டதுடன், டிசம்பர் மாத நடுப் பகுதியில் இடம் பெறவிருக்கும் வருடாந்தப் பொதுக் கூட்டம் தொடர் பாகவும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## Personal Development Workshop

ஜம்இய்யாவின் ருகூன் அங்கத்தவர்களுக்கு நடத்தப் பட்டுவரும் Personal Development Workshopஇன் இரண்டாவது மாதாந்த அமர்வு கடந்த 09ஆம் திகதி தாருல் ஈமான் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. 30 அங்கத்தவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் தப்ஸீர் விளக்கம், இகாமதுத் தீன் பார்வையில் ஸீரா, சமகால இஸ்லாமிய உலகம் எதிர்கொள்ளும் சவால்கள், அல்லாஹ் வுடனான உறவு என பல தலைப்புகளில் விரிவுரைகள் இடம்பெற்றன.

இதில் வளவாளர்களாக ஜமாஅத்தின் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா உறுப்பினருமான பொறியலாளர் இஸட்.எம். நௌஸர், ஜமாஅத்தின் உதவிப் பொதுச் செயலாளர்களுள் ஒருவரான சகோதரர் வை.ஐ.எம். ஹனீஸ், அஷ்ஷெய்க் உவைஸ் (இஸ்லாஹி), சகோதரர் அப்தூர் ரஷீத், ஜம்இய் யாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அப்துல் ஹலீம் (நளீமி) ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தலைமைத்துவப் பயிற்சிநெறி

ஜம்இய்யாவின் இணை அங்கத்தவர்களை அடுத்த வருட வேலைத் திட்டங்களுக்கு தயார்படுத்தும் நோக் கில் பிராந்திய ரீதியாக அவர்களுக்குரிய ஒரு நாள் தலைமைத்துவ பயிற்சிநெறிகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் கடந்த நவம்பர் மாதம் 06 ஆம் திகதி வடமேற்கு மற்றும் வடமத்திய பிராந்தியங்களுக்கான பயிற்சி நெறி ஜமாஅத்தின் புத்தளம் பயிற்சி மன்றத்தில் இடம்பெற்றது.

27 அங்கத்தவர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் வளவாளர்களாக ஜம்இய்யாவின் தேசிய ஒருங்கிணைப் பாளர் எம்.எல்.எம். தௌபீக், பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பகுதியின் தலைவர் எம். ஐ. ஸாதிக் அப்துல்லாஹ், தஃவாப் பகுதியின் பொறுப்பாளர் எம்.எஸ்.எம். ஆஸாத் (நளீமி), வடமேற்குப் பிராந்திய நாஸிம் எம். என்.எம். நப்லான், எம்.எல்.எம். அஸ்வர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இணை அங்கத்தவர்கள் தங்களது அறிவு, ஆளுமை,


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திறன்கள் என்பவற்றை இஸ்லாமிய இயக்கப் பணிக்கு வழங்குவது எப்படி? இஸ்லாமிய இயக்கம் பற்றிய சிந்தனைத் தெளிவு, முஸ்லிம் அல்லாதவர்களுடனான உறவு போன்ற பல தலைப்புகளில் கலந்துரையாடல்களும் பயிற்சிகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐந்து நாள் வதிவிட செயலமர்வு

மாணவர்களே, பொற்றோர்களே!

வேகமாக முன்னேறி வரும் உலகில் இதற்கு ஈடுகொடுக்க ஒவ்வொரு மாணவனும் அறிவு, ஆற்றல், திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடித்த கையோடு தமது உயர் கல்விற்கான அடித்தளத்தை அமைத்துக் கொள்வது மாணவர்களின் தலையாய கடமையாகும். பெற்றோரே! உங்களது பிள்ளைகளுக்கு வழிகாட்டுவது உங்களது பொறுப்பாகும்.

பரீட்சை முடிந்தவுடன் இதற்கான வழிகாட்டலை வழங்க காத்திருக்கிறது ஜம்இய்யா.

## YEP

"மாணவர்களின் அறிவு, ஆற்றல், திறன் என்பவற்றை விருத்தி செய்வதன் மூலம் தனக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் நன்மை செய்யக்கூடிய இளைஞனாக மாற்றுதல்" எனும் உயரிய இலக்கை அடையும் நோக்கில் தயார்படுத்தப்பட்டுள்ள ஒரு பயிற்சிநெறியே YEP

## YEP பயிற்சிநெறி

■ நீங்கள் நாளாந்த வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மனம் திறந்து பேச நல்லதோரு வாய்ப்பு.

■ உங்களது ஆசைகள், வேட்கைகள் இலட்சியங்களை அடைவது எப்படி?

■ எல்லோரும் உங்கள் மீது அன்பும் மரியாதையும் செலுத்த வேண்டுமா? அதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

■ உயர் கல்வியை எங்கு, எப்படி, எவ்வாறு ஆரம்பிக்கலாம்?

■ விடுமுறையை எவ்வாறு கழிப்பது?

போன்ற கேள்விகளுக்கு பதில் சொல்லும், இன்ஷா அல்லாஹ்!

## YDP பயிற்சிநெறியின் முடிவில் ஒரு மாணவன்

01. வாழ்கை பற்றிய சிறந்த தெளிவையும் வாழ்க்கைக்கான இலட்சியத்தையும் தெரிந்திருப்பார்.

02. தனது உள்ளார்ந்த ஆற்றல்களை இனங்கண்டிருப்பார்.

03. உயர் கல்வியை எவ்வாறு, எங்கு, எதில் தொடர்வது தொடர்பான விளக்கத்தைப் பெற்றிருப்பார்.

பயிற்சி நெறியின் முடிவில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கப்படும்.

இன்ஷா அல்லாஹ் டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறிக்கு முதலில் விண்ணப்பிக்கும் 1000 மாணவர்களுக்கே சந்தர்ப்பம் வழங்கப்படும்.

ஊங்களது பெயர்களைப் பதிந்து கொள்ள இன்றே உங்கள் மாவட்ட, மாகாண இணைப்பாளரை தொடர்பு கொள்ளுங்கள்.

01. மேல் மாகாணம் - M.A.M. Waseem - 0774139123

02. சப்ரகமுவ மாகாணம் - H.K. Husny - 0779618383

03. மத்திய மாகாணம் - M.N. Ameer Suhail - 0774716154

04. ஊவா மாகாணம் - M.M. Furquan - 0776202504

05. தென் மாகாணம் - M.H.M. Sayyaf - 0777001737

06. வடமேல் மாகாணம் - U.L. Musthaq - 0773349821

07. வடமத்திய மாகாணம் - M.L.M. Azwer - 0771825770

08. மட்டக்களப்பு மாவட்டம் - I.M. Ifthiqar - 0776284310

09. திருகோணமலை மாவட்டம் - N.M. Akeel - 0752651150

10. அம்பாறை மாவட்டம் - M.U.M. Sanoos - 0754344089

11. சிங்கள மொழி மூல பதிவுகளுக்கு: A.R.M. Arkam - 0773573815

மேலதிக விபரங்களுக்கு:
M.I. Sadiq - 0776857715

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# குறையா நிறையா?



ஒரு ஏழை ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தான். அவன் தன் வீட்டுத் தேவைக்காக தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவதை வழக்கமாக்கிக் கொண்டிருந் தான்.

தண்ணீர் எடுத்து வர அவன் இரண்டு பானைகளை வைத்திருந்தான். அந்தப் பானைகளை ஒரு நீளமான கழி யின் இரண்டு முனைகளிலும் தொங்க விட்டு கழியைத் தோளில் சுமந்து செல்வான்.

இரண்டு பானைகளில் ஒன்றில் சிறிய துவாரம் இருந் தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும் பொழுது குறையுள்ள பானையில் பாதியளவு நீரே இருக்கும்.

குறையில்லாப் பானைக்கு தன் திறன் பற்றி பெருமை. குறையுள்ள பானையைப் பார்த்து எப்போதும் அதன் குறையை சுட்டிக்காட்டி கிண்டலும் கேலியும் செய்யும்.

இப்படியே இரண்டு வருடங்கனள் கடந்து விட்டன. கேலி பொறுக்க முடியாத பானை அதன் எஜமானனைப் பார்த்து பின்வருமாறு கேட்டது:

"ஐயா என் குறையை நினைத்து நான் கேவலமாக உணர்கிறேன். உங்களுக்கும் என் குறையால் சிரமம். தினமும் வரும் வழியெல்லாம் தண்ணீர் சிந்தி உங்கள் வேலைப் பளு மிகவும் அதிகரிக்கிறது. தயவுகூர்ந்து எனது குறையை சரி செய்யுங்களேன்."

அப்போது அதன் எஜமானன் பின்வருமாறு பதில் கூறினார்:

"பானையே நீ ஒரு விடயத்தைக் கவனித்தாயா? நாம் வரும் பாதையின் உன் பக்கம் இருக்கும் அழகான பூச் செடிகள் வரிசையைக் கவனித்தாயா? உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னமே தெரியும். அத னால்தான் வழிநெடுக பூச்செடி விதைகளை விதைத்து வைத்தேன். நீ தினமும் சிந்திய தண்ணீரில் அவை இன்று பெரிதாக வளர்ந்து எனக்கு தினமும் அழகான மலர்களைத் தருகின்றன. அவற்றை வைத்து நான் வீட்டை அலங்க ரிக்கின்றேன். மீதமுள்ள மலர்களை வைத்தது பணம் சம்பாதிக்கின்றேன்."

இதைனக் கேட்ட பானை தன்னைப் பற்றி கேவலமாக உணர்வரை நிறுத்தி விட்டது. அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப்படாமல் தன் வேலையைக் கருத்துடன் செய்யத் துவங்கியது அந்தப் பானை.

**படிப்பினை: அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப்பட்டால் நாம் எந்த வேலையையும் செய்ய முடியாது.**

## சிறுவர் பூங்கா

*முதல் பரிசுக்குரியவர்:*

**பௌமியா நளீம்**

இல: 89, மதவாக்குளம், ஆண்டிகம

### ஆறுதல் பரிசைப் பெறுவோர்

01. எம்.என்.எப். நூர் சுஜா, ஓட்டமாவடி
02. எம்.ஆர். அஹ்மஸ் ஹம்தி, அக்கரைப்பற்று
03. எம்.என்.எப். ஸிப்ரா, ஹக்மன
04. ஐ.எம். அனீஸ், மாத்தளை
05. பாத்திமா ஸல்மா, கள்- எலிய பெ.அ.க
06. ஷஹாமா றிபாய், கெலிஓய
07. பாயிஸ் ஹரீஸ், தோப்பூர்
08. பர்ஹா பாரிஸ், கண்டி
09. ரைஹானா பர்ஹான், மடவளை பஸார்
10. ரீ.ஏ. ஸைனப், முள்ளிப்பொத்தானை

**குறிப்பு:**

விடைகளை தபால் அட்டையில் (Post Card) மாத்திரம் எழுதி அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிக்கும் மாண்பு



உண்மை முஸ்லிம் மன்னிக்கும் மாண்பாள ராகத் திகழ்வார். மன்னிப்பது மனிதனின் உயர் பண்பாகும். அது குறித்து வலியுறுத்தும் அல்குர்ஆன் வசனங்கள் ஏராளம். அந்தப் பண்புகளைப் பெற்றவர்களை இஸ்லாம் இறையச்சமுள்ள, சிறந்த, முன்மாதிரியான முஸ்லிம் என்றும் அல்லாஹ்வின் அன்பையும் திருப் பொருத்தத்தையும் அடைந்தவர்கள் என்றும் கூறுகிறது.

உறவை முறித்தல், புறக்கணித்தல், நேர்வழியைத் தடுத்தல் போன்ற இழி குணங்களை எதிர்கொள்ள நேர்ந்தால், அதை மன்னிப்பு மற்றும் பெருந்தன்மையின் மூலம் எதிர்கொள்ள வேண்டுமென்ற சிந்தனையை முஸ்லிம்களின் இதயங்களில் நபியவர்கள் விதைத்தார்கள். மனிதர்கள் கடினத் தன்மைக்கு கட்டுப்படுவதை விட மிக அதிகமாக அன்பிற்கு கட்டுப்படுவார்கள் என்பதை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் விளங்கி இருந்தார்கள்.

எனவேதான் உக்பா இப்னு ஆமிர் (ரழியல்லாஹு அன்ஹு) நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதரே! நற்செயல்களில் மிகச் சிறப்பானதை எனக்கு அறிவித்துத் தாருங்கள்" என வேண்டிக் கொண்டபோது, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "உக்பாவே! உம்மைத் துண்டிப்பவர்களுடன் சேர்ந்து வாழ்ந்து, உமக்குக் கொடுக்காதவர்களுக்குக் கொடுத்து வருவீராக! உமக்கு அநீதமிழைத்தவர்களைப் புறக்கணித்து விடுவீராக!" என்று கூறினார்கள். மற்றோர் அறிவிப்பில், "உமக்கு அநீதமிழைப்பவரை மன்னித்து விடுவீராக!" என்று வந்துள்ளது. (முஸ்னத் அஹ்மத்)

# சபிக்கப்பட்டவனின் கதை

ஒரு நாள் அதிகாலை நேரம் மக்காவின் ஸபாவின் மீது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஏறி நிற்கின்றார்கள். மக்கள் தத்தமது வேலைகளில் மூழ்கியிருக்கின்றனர். நபியவர்கள் மக்கள் எல்லோரையும் கூவி அழைக்கின்றார்கள். மக்கள் நபியவர்களை நோக்கி விரைந்து வருகின்றார்கள்.

அக்கால வழக்கப்படி, யாரேனும் ஒருவர் ஒரு செய்தியை ஊர்வாசிகளுக்கு தெரிவிக்க விரும்பினால் இவ்வாறு செய்வார்கள்.

நபியவர்கள் அல்அமீன் (நம்பிக்கையாளர்) மற்றும் அஸ்ஸாதிக் (உண்மையாளர்) என்று பெயர் பெற்றவர் அல்லவா? எனவே, மக்கள் அவரின் செய்தியைக் கேட்கும் ஆவலில் அவசரமாக விரைந்து சென்றனர்.

அப்போது அம்மக்களைப் பார்த்து நபியவர்கள், "நான் இம்மலைக்குப் பின்னால் எதிரிகள் உங்கள் அனைவரையும் தாக்குவதற்கு தயாராக இருக்கிறார்கள். உங்களை முற்றாக அழிப்பதுதான் அவர்களின் நோக்கம் என்று நான் சொன்னால் நீங்கள் என்னையும் என் பேச்சையுன் நம்புவீர்களா?" எனக் கேட்டார்கள்.

அதற்கு அம்மக்கள் அனைவரும் ஒரே குரலில் "நீர் பொய் சொல்லி ஒருபோதும் நாம் கண்டதில்லை" எனப் பதிலளித்தார்கள்.

அப்போது நபியவர்கள் "அல்லாஹ் ஒருவனே. முஹம்மத் ஆகிய நான் அவனுடைய இறுதித் தூதராவேன்" என்று கூறினார்கள்.

அப்போது அக்கூட்டத்திலிருந்த அபூ லஹப் "முஹம்மதே! நீ இதனைச் சொல்வதற்காகத்தான் எங்களை அழைத்தாயா? உனக்கு நாசமுண்டாகட்டும்" என்று சபித்தான்.

அதனையடுத்தே அல்லாஹ் தஆலா ஸூறதுல் லஹப் எனும் குர்ஆனின் 111ஆவது அத்தியாயத்தை இறக்கினான். அதிலே கண்ணியமிக்க நபியவர்களை இகழ்ந்து சபித்த அபூ லஹபை அல்லாஹ் நாசமாகட்டும் எனக் குறிப்பிடுகின்றான்.

அல்லாஹ் எவ்வாறு தனக்கு கட்டுப்படாதவர்களை தண்டிக்கின்றான் என்று பார்த்தீர்களா?

ஆகவே, அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து வாழ்வோமாக!

# வினா-விடைப் போட்டி-77

01. ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அரசி பில்கீஸுக்கு எழுதிய கடிதத்தை எவ்வாறு அனுப்பினார்கள்?

02. "இருள்களிலிருந்து ஒளியை நோக்கி" என்ற அல்குர்ஆன் வசனத்திற்கு இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அளித்த விளக்கம் என்ன?

03. மார்க்கம் பூரணப்படுத்தப்பட்டதைக் குறிக்க அல்குர்ஆன் எந்த அரபுச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளது?

04. "அர்ரிபா அந்நஸீஆ" என்றால் என்ன?

05. ஹைபர் போராட்டத்தில் எத்தனை ஸஹாபிப் பெண்மணிகள் பங்கேற்றார்கள்?

**உங்கள் விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி டிசம்பர் 22ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.**

**சிறுவர் பூங்கா**
**அல்ஹஸனாத்**
**77, தெமடகொட வீதி, கொழும்பு-09**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மழையில் நனைந்தபடி – 08

– ஷாரா –

அளவில்லாக் கருணையாளனே! மனிதர்களில்தான் எத்தனை வகைகள்! உன் விருப்பப்படி விதவிதமாய்ப் படைத்தாய். அனைவரும் எந்த வித்தியாசமுமின்றி ஒரே நிறம், ஒரே உயரம், ஒரே முகவெட்டு எனப் படைக்கப்பட்டிருந்தால் வாழ்க்கை எவ்வளவு சிக்கலாய் மாறியிருக்கும்.

குலங்களாய், கோத்திரங்களாய்ப் படைத்திருப்பது ஒருவரையொருவர் அடையாளம் காண்பதற்கே எனச் சொல்கிறாய். ஆழ்ந்து நோக்கும்போது உனது இந்த ஏற்பாட்டின் அற்புதம் புரிகிறது. இதனால்தானே மனித வாழ்வு அழகு படுத்தப்படுகிறது.

இந்தக் குலங்கள், கோத்திரங்கள் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக குடும்பம் என்ற அலகை வைத்தாய். உனது இந்தப் பேரருளுக்கு எப்படி நன்றி சொல்வது!

பெற்றெடுத்த தாய், தந்தையர் நீ தந்த மிகப் பெரிய அருள்! அவர்களுக்கு நீயும் உன் தூதரும் கொடுக்கும் இடம் மகத்தானது. அவர்களது ஆசைகளால் எங்கள் வாழ்வு போஷிக்கப்படுகிறது. அவர்களது பாசம் எங்கள் வாழ்வை ஈரமாய் வைத்திருக்கிறது. அவர்களது கனவுகளால் எங்கள் வாழ்வு அலங்கரிக்கப்படுகிறது. அவர்களது தியாகங்களால் எங்கள் வாழ்வு உயிர் பெறுகிறது. இறைவா! இவற்றுக்கெல்லாம் வெகுமதி வழங்கும் வல்லமை உனக்கு மட்டுமே உண்டு.

உடன் பிறப்புகள் உன் அருளின் மற்றுமொரு வடிவம். ஒன்றாய் வளர்ந்து, விளையாடி, கதை பேசி வாழ்கின்றபோது அந்த மகிழ்ச்சிக்கு எல்லை ஏது! அந்தப் பாசம் வற்றாத நதியாய் வாழ்வின் முடிவு வரை கூடவே வருகிறது. அறுத்தெறிய முடியாதபடி இறுக்கமாய், நெருக்கமாய் அந்த பந்தத்தை ஆக்கிட்டாய். வாழ்க்கைத் துணையால்தானே எங்கள் வாழ்வு முழுமை பெறுகிறது. வெவ்வேறான இரு உள்ளங்களை செம்புலப் பெயல் நீராய் நீ மாற்றி விடுகிறாய் அந்த உள்ளங்களில் அன்பை விதைப்பவன் நீதானே!

அவர்களில் நீ விரும்பியவர்களுக்கு குழந்தை என்ற அருளைக் கொடுக்கிறாய். அதன் மூலம் மனிதனின் அடுத்த பரம்பரையை நீ உருவாக்குகிறாய். இப்படி சங்கிலித் தொடராய் மனித குலம் தொடர வழியமைக்கிறாய்.

மாண்பு மிக்கவனே! நீ இப்படி பெற்றோர், உடன் பிறப்புகள், உறவினர்கள், வாழ்க்கைத் துணை, குழந்தைகள் என சொந்தங்களின்றி தனியாளாய் எமைப் படைத்திருந்தால் இந்த மகிழ்ச்சியும் நிம்மதியும் கிடைத்திருக்குமா? வாழ்க்கை சலித்துப் போயிருக்கும். உள்ளங்கள் வரண்டு போயிருக்கும். விரக்தியிலே மனிதன் அழிந்திருப்பான்.

இந்த உறவுகளின் அன்பும் பாசமும், அவற்றால் வரும் இன்பமும் துன்பமும், கண்ணீரும் புன்னகையும் வாழ்வுக்குச் சுவையூட்ட, அரவணைப்பும் ஆறுதலும் ஊக்குவிப்பும் வாழ்வை வளப்படுத்த நாம் வாழ்கிறோம்.

இறைவா! இரத்த உறவுகளோடு மட்டுமன்றி, ஏனையவர்களுடனும் மனதில் அன்பை விதைத்தாய்; நட்பை ஏற்படுத்தினாய்; வாஞ்சையை வளர்த்தாய். இப்படியொரு அழகிய அமைப்பில் உலக வாழ்வை அமைத்துத் தந்த உனக்கே எல்லாப் புகழும்.

ஆனாலும் இவற்றையெல்லாம் அருள்கள் என நாம் நினைப்பதில்லை. சிலவேளை இந்த உறவுகளை நாம் சுமையாய்ப் பார்க்கிறோம். அவர்களால் பிரச்சினைகள், சிரமங்கள் வரும்போது ஏனிந்த உறவுகள் என சலித்துக் கொள்கிறோம். இந்த ஒவ்வோர் உறவுக்கும் நீ கொடுத்திருக்கும் மதிப்பும் அதைப் பேணுவதற்கு நீ கொடுக்கும் வெகுமதியும் தெரிந்தால் இந்த உறவுகளைப் புறக்கணித்து நடக்க மனம் வருமா?

தாயை பிள்ளைகள் உதறித் தள்ளுகிறார்கள். தந்தைக்குக் கட்டுப்பட்டு நடக்க மறுக்கிறார்கள். உடன் பிறப்புகளுடன் விட்டுக் கொடுத்து நடக்க முடியாமல் சினக்கிறார்கள். மனைவியைப் புரிந்து கொண்டு இல்லறத்தை இன்பச் சோலையாய் மாற்ற கணவன் முயற்சிப்பதில்லை. கணவனுக்குக் கட்டுப்பட்டு குடும்பத்தில் குதூகலத்தைக் கொண்டு வர மனைவிக்குத் தெரிவதில்லை. இந்தப் போக்குகளால் குடும்பம் சிதறி, சமூகமே சிதைந்து, சீரழிந்து போகிறது. குடும்ப உறவுகளில் ஏற்படும் விரிசலால் உலகத்தின் நிம்மதி சீர்குலைந்து போகிறது.

நாயனே! இந்த உறவுகளின் பெறுமதியை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவற்றைப் பேணி நடந்து வாழ்வில் நிம்மதி பெற வேண்டும். எம்மைத் தனியாய் இல்லாது இத்தனை உறவுகளுடன் வாழ வைத்ததற்காய் ஒவ்வொரு கணமும் உனக்கு நன்றி சொல்ல வேண்டும். இரத்த உறவு மறுமையில் எமக்கெதிராய் வழக்காடாமல் பாதுகாத்து விடு! நாயனே! இந்த உரிமைகளை நாம் புறக்கணித்து நடக்காமல் எம்மைக் காத்துவிடு! எங்களது இந்த சொந்தங்களோடு சுவனத்தில் ஒன்றாய் வாழ அருள் புரிந்து விடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ■ ஒரு பெண் நான்கு ஆண்களைத் திருமணம் முடிக்க இஸ்லாம் அனுமதி வழங்காதது ஏன்?
# ■ வட்டியுடன் தொடர்புள்ள ஒருவருடனான கொடுக்கல்-வாங்கல் குறித்து...

அஷ்ஷெய்க் முஹம்மத் முபீர் (இஸ்லாஹி), (M.A).
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை. mufeer96@gmail.com

**கேள்வி:** இஸ்லாத்தில் ஓர் ஆணுக்கு நான்கு பெண்களைத் திருமணம் முடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது போன்று ஏன் ஒரு பெண்ணுக்கு நான்கு ஆண்களைத் திருமணம் முடிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை?

**பதில்:** பலதாரமணத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மத்தியில் சமத்துவத்தைப் பேணுவது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது. ஏனென்றால், ஒரு பெண்ணுக்கு ஒரு வருடத்தில் ஒரே நேரத்தில் ஆண் மூலமாக ஒரு முறைதான் கர்ப்பமுற முடியும் என்பது இறை நியதியாகும்.

அதே போன்று ஒரு பெண் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களை மணந்தால் அவள் யாரினூடாக கர்ப்பமுற்றார் என்பதை தீர்மானிக்க முடியாமல் போய் விடும்.

இஸ்லாத்தில் பெண்களை நிர்வகிக்கின்ற பொறுப்பு ஆண்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்:

"(ஆண், பெண் இரு பாலாரில்) அல்லாஹ் சிலரை சிலரை விட மேன்மைப்படுத்தி வைத்திருக்கிறான். (ஆண்கள்) தங்கள் சொத்துகளிலிருந்து (பெண் பாலாருக்காகச்) செலவு செய்து வருவதினாலும் ஆண்கள் பெண்களை நிர்வகிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்." *(4:34)*

அப்படியாயின் ஒரு பெண் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களைத் திருமணம் முடித்தால் யார் யாரைக் கட்டுப்படுத்துவது, அவள் யாருக்கு கட்டுப்படுவது முதலான பிரச்சினைகளும் உருவாகி விடுகின்றன. இது போன்ற காரணங்களாலும் இன்னும் பல காரணங்களாலும் இஸ்லாம் இவ்வுரிமையை ஆண்களுக்கு மட்டுமே வழங்கியுள்ளது.

**கேள்வி:** வட்டியுடன் தொடர்பு வைத்துள்ள ஒருவருடன் நாம் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியுமா?

**பதில்:** வட்டியுடன் தொடர்பு வைத்துள்ள ஒருவருடன் வட்டி தவிர்ந்த ஏனைய கொடுக்கல்- வாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் எவ்வித தவறும் இல்லை. நீங்கள் உங்களுடைய பொருட்களை அவருக்கு விற்க முடியும்; அவரிடமிருந்து நீங்கள் பொருட்களை கொள்வனவு செய்யவும் முடியும். அவர் உங்களுக்குத் தருகின்ற அன்பளிப்புக்களை ஏற்றுக் கொள்ளவும் முடியும். ஏனென்றால் யூதர்கள் வட்டியில் முன்னோடிகளாக இருந்தபோது அவர்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு சில அன்பளிப்புக்களை வழங்கினார்கள். அப்போது நபியவர்கள் அவற்றை ஏற்றுக் கொண்டார்கள். அதே போன்று தனது குடும்பத்துக்குத் தேவையான உணவுகளை ஒரு யூதனிடமிருந்து வாங்கியிருக்கின்றார்கள்.

ஆனால், வட்டியுடன் தொடர்பு வைத்துள்ளார் என்ற ஒரே காரணத்துக்காக அவருடனான உங்களுடைய கொடுக்கல்- வாங்கல் நடவடிக்கைகளை நீங்கள் துண்டித்துக் கொள்வதன் மூலம் அவர் வட்டியிலிருந்து தவிர்ந்து கொள்வார் என்றிருந்தால் அப்போது நன்மையை ஏவி தீமையைத் தடுப்பதில் ஒருவருக்கொருவர் உதவி செய்தல் எனும் அடிப்படையில் அவருடன் கொடுக்கல்- வாங்கலை மேற்கொள்ளாமல் இருக்கலாம்.

**கேள்வி:** ஒருவர் என்னிடமிருந்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தேயிலையை வாங்கிவிட்டு மூன்று மாதங்களின் பின்பு மாறுகின்ற காசோலையொன்றை எனக்கு வழங்கினார். ஒரு வாரத்தின் பின்னர் எனக்கு ஏற்பட்ட அவசரத் தேவையின்போது இக்காசோலையை எனக்குத் தெரிந்த ஒருவருக்கு கொடுத்துவிட்டு அவரிடமிருந்து 47 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொண்டேன். இதனையறிந்த எனது மனைவி நீங்கள் வட்டியுடன் தொடர்புபட்டுள்ளீர்கள். இப்பணத்தை திருப்பிக் கொடுத்து விடுங்கள் என வாதிட்டார். இது தொடர்பான மார்க்கத்தின் நிலைப்பாடு என்ன?

**பதில்:** நீங்கள் தேயிலையைக் கொடுத்துவிட்டு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையைப் பெற்றுக் கொண்டதில் எதுவித தவறும் இல்லை. ஏனென்றால், நீங்கள் பொருளை கடனுக்கு விற்றுள்ளீர்கள். அதற்கு உறுதியாக காசோலையைப் பெற்றுக் கொண்டுள்ளீர்கள். அதாவது, பொருள் உடனடியாக வழங்கப்பட்டு அதற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மாதங்களின் பின்னர் கிடைக்க இருக்கின்ற பணத் தொகையை மூன்று மாதங்களுக்கு முன்பே நீங்கள் பெற்றுக் கொள்வதற்காக 3000 ரூபாவை அவருக்குக் கொடுத்துள்ளீர்கள். அதாவது, காலம் தாழ்த்தப்படுவதற்காக அவர் மேலதிகமாக 3000 ரூபாவை உங்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றார். இதனையே இஸ்லாம் அர்ரிபா அந்நஸீஆ காலம் தாழ்த்தப்படுவதற்காக மேலதிகமாகப் பெறப்படும் வட்டிப் பணம் என்று அழைக்கின்றது.

கான பெறுமதி காலம் தாழ்த்தி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இங்கு மூன்று மாதங்களின் பின்னர் காசோலை மாறுகின்றபோது உங்களுக்கு 50 ஆயிரம் ரூபா பணமாகக் கிடைக்கின்றது.

நீங்கள் அவசரத் தேவையின் காரணமாக 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையைக் கொடுத்து விட்டு 47 ஆயிரம் ரூபாவை காசாகப் பெற்றுக் கொண்டது நீங்கள் செய்த தவறு மட்டுமல்ல, நீங்கள் வட்டிக் கொடுக்கல்-வாங்கலில் ஈடுபட்டிருக்கின்றீர்கள். ஏனென்றால் மூன்று மாதங்களின் பின்னர் கிடைக்க இருக்கின்ற பணத் தொகையை மூன்று மாதங்களுக்கு முன்பே நீங்கள் பெற்றுக் கொள்வதற்காக 3000 ரூபாவை அவருக்குக் கொடுத்துள்ளீர்கள். அதாவது, காலம் தாழ்த்தப்படுவதற்காக அவர் மேலதிகமாக 3000 ரூபாவை உங்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றார். இதனையே இஸ்லாம் அர்ரிபா அந்நஸீஆ- காலம் தாழ்த்தப்ப டுவதற்காக மேலதிகமாகப் பெறப்படும் வட்டிப் பணம் என்று அழைக்கின்றது. எனவே, நீங்கள் இவ்விடத்தில் தெளிவான வட்டிக் கொடுக்கலில் ஈடுபட்டுள்ளீர்கள்.

எனவே, நீங்கள் செய்த இத்தவறுக்காக அல்லாஹ்விடம் தௌபா செய்து மீண்டு கொள்வதுடன், குறித்த அந்த நபரிடம் விடயத்தைத் தெளிவுபடுத்தி அவரிட மிருந்து உங்களுடைய 3000 ரூபாவையும் மீளப் பெற்றுக் கொள்ளுங்கள். அல்லது அவரிடமிருந்து நீங்கள் பெற்றுக் கொண்ட 47 ஆயிரம் ரூபாவையும் மீளக் கொடுத்துவிட்டு உங்களுடைய காசோலையைப் பெற்று குறித்த திகதியில் முழுப் பணத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஹராம், ஹலால் விடயத்தில் பேணுதலாக இருந்து உங்களுக்கு வழிகாட்டிய உங்களுடைய மனைவிக்கு நன்றி கூறி அவரை உற்சாகமூட்டுங்கள்.

WORLD FOCUS COLLEGE
MAWANELLA

OUR 9TH BATCH STARTS ON 4TH OF JANUARY 2015

இதில் 25 க்கும் மேற்பட்ட பாடங்கள்
நடாத்தப்படுகின்றன அவைகளில் சில....

- Child care
- First Aid
- ஹதீஸ் (Hadhees)
- (Hifl)
- History of Hijab and cartoonisam
- (Fiqh)
- Pre marriage counseling/ Carrier Guidance/ Self Employment/ General Knowledge
- (Ahlaq)
- Computer Studies
- Islamic Medicines
- Spoken English
- Paper Quilling, Mehendi Designing, Glass painting
- Introductions to Social media
- Life learning activities
- Habaya stone works
- Psychology
- Health Care
- (Stitching)
- Food & Nutrition
- Nursery Teacher Training
- Life Skill

Age Limit
வயதெல்லை 16 - 25

Gold Medals

4 MONTHS
Residential Course for
Unmarried Girls

More Than
5 Certificates

இதில் தமிழ்,
ஆங்கிலம்,
சிங்களம்
மொழிகளில்
கல்வி
கற்றவர்களுக்கும்
இதில் கலந்து
கொள்ள முடியும்.

SAABIR MOHAMED HASHIM

இதில் பங்கு கொள்வோர்


- 16 வயது பூர்த்தியடைந்த அனைத்து பெண்கள்
- O/L A/L செய்து விட்டு பெறுபேறு வரும் வரை காத்திருப்பவர்கள்
- திருமணம் முடிப்பதற்கு தயாராக இருக்கும் பெண்கள்
- வீட்டிலிருந்து சம்பாதிப்பதற்கு விருப்பம் உள்ள பெண் கள்
- ஆங்கிலம், தையற்கலை மற்றும் சமயற்கலை ஆகியவற்றில் ஆர்வமுள்ளவர்கள்

WORLD FOCUS COLLEGE
20/ 2, Hemmathagama Road, Beminiwaththa, Mawanella.
+ 94 777 344474/ + 94 77 4370320



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபு மூலம்: அம்ர் காலித்
தமிழில்: அஷ்கர் அரூஸ் (நளீமி)



# நபிகளாரின் ஸீராவிலிருந்து...

தொடர் - 26

## கைபர் போராட்டம்

ஹுதைபியா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடத்தின் பின்னர் நபிகளாரின் பார்வை முஸ்லிம்களுக்கு சதிசெய்து கொண்டிருந்த ஒரு பிரதேசத்தை நோக்கி நகர்ந்தது. அதுதான் கைபர். மதீனா பூமியில் முஸ்லிம்களுக்கு சதிசெய்த யூதர்களை மதீனாவிலிருந்து சுத்திகரிப்புச் செய்த போது அவர்கள் கைபரில் தஞ்சம் புகுந்தார்கள். இவர்களுள் அஹ்ஸாப் போராட்டத்தில் முஸ்லிம்களுக்கெதிராக ஏனைய கோத்திரங்களை படைதிரட்டிய 'ஹுயய் இப்னு அஹ்தப்' என்பவனும் இருந்தான். எனவே, கைபர் பூமி முஸ்லிம்களுக்கு பெரும் அச்சுறுத்தலாகத் திகழ்ந்தது. குறைஷிகளுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டதைப் போல் இவர்களோடும் ஒன்றில் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் அல்லது யுத்தம் புரிந்து இவர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டிய நிலை இருந்தது. இவர்கள் ஏலவே முஸ்லிம்களுக்கு அநியாயம் செய்து சதி முயற்சிகளில் ஈடுபட்டு வந்ததால் இவர்களோடு சமாதான பேச்சுவார்த்தைக்கான களமிருக்கவில்லை. சிலபோது சமாதான உடன்படிக்கை செய்து கொண்டாலும், இவர்கள் ரோம, பாரசீகர்களின் உதவிகளைப் பெற்று முஸ்லிம்களை எதிர்க்கவும் சந்தர்ப்பம் இருந்தது. இதனால் யுத்தத்தின் மூலம் இவர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் விரும்பினார்கள்.

**நபியவர்களின் கற்பித்தல் உத்திகளில் அவரது பார்வையும் புன்னகையும்கூட செல்வாக்குச்செலுத்தியுள்ளது. அன்னாரின் கற்பித்தல் முறைமைகளை நாமும் பின்பற்றுவோம்.**

கைபரில் பலமிக்க எட்டுக் கோட்டைகள் இருந்தன. பத்தாயிரம் போர் வீரர்களும் ஆயுதங்களும் ஒரு வருடத்துக்குத் தேவையான (முற்றுகையிடப்பட்டாலும்) உணவு வசதிகள் மற்றும் விவசாய நிலங்களும் இருந்தன. உண்மையில், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இந்த யுத்தத்தை பிரகடனம் செய்வதற்கான நோக்கம் கைபரை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து சுதந்திர தஃவாப் பயணத்திற்கு வழியமைப்பதற்கே ஆகும். இந்த யுத்தத்தில் 96 பேர் மாத்திரமே படுகொலை செய்யப்பட்டமை இதற்கான ஆதாரமாகும். எனவே, இந்த கைபர் யுத்தத்திதல் நபியவர்கள் யூதர்களை அழித்தொழிப்பதை இலக்காகக் கொள்ளவில்லை. இந்த யுத்தத்தின் நோக்கங்களாவன:

01. யூதர்களிடமுள்ள ஆயுதங்களைப் பறிமுதல் செய்தல்.

02. முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தலாக அவர்கள் அமையக் கூடாது.

03. சமதான சகவாழ்வை மேற்கொள்ளுதல்.

யுத்தத்திற்குப் புறப்படும் வேளையில் அபூ முஷஹ்ஹம் என்ற யூதன் ஒருவன் அப்துல்லாஹ் இப்னு ஹத்ரத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் வந்து தனக்கு திருப்பித் தர வேண்டிய ஐந்து திர்ஹம் கடனை ஒப்படைத்து விட்டுப் போகுமாறு பணித்தான். கடனை திருப்பித் தர இன்னும் கால அவகாசம் இருப்பதை ஸஹாபி சுட்டிக்காட்டியும் அவன் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இருவரும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் சென்று முறையிட்டபோது "நீ அவருக்கு கடனைத் திருப்பிச் செலுத்தாமல் யுத்தத்துக்கு புறப்படக் கூடாது" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கட்டளை பிறப்பித்தார்கள்.

* கடனைத் தவிர ஷஹீதின் அனைத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவங்களும் மன்னிக்கப்படும்

* சிறுபான்மையினருக்கான நபிகளாரின் நீதித் தத்துவம்.

குறித்த ஸஹாபி கூறுகின்றார்: என்னிடம் இரு ஆடைகள் இருந்தன. ஒன்றை அணிந்திருந்தேன். அடுத்ததை விற்று மூன்று திர்ஹம் கொடுத்தேன். எனது தலைப்பாகையை விற்று இரு திர்ஹம் கொடுத்தேன். பின்னர் யுத்தத்திற்குப் புறப்பட அணிந்திருக்கும் ஆடையைத் தவிர வேறு ஆடையில்லை என்பதை எண்ணி கவலையோடு இருந்தேன். அப்போது மூதாட்டி ஒருவர் என்னைக் கடந்து சென்றபோது எனது சோகத்திற்கான காரணத்தை வினவினாள். நான் காரணத்தைக் கூறியபோது அவள் தனது ஆடையை ஒப்படைத்து விட்டு "நீ திரும்பும் வரையில் நான் வீட்டிலே தங்கியிருக்கிறேன். நிச்சயமாக நான் உனது நன்மையில் பங்கெடுக்க விரும்புகிறேன்" எனக் கூறினாள்.

* கொள்கைக்காக வாழ்வோம்.

* கொள்கைக்காக எதனையும் அர்ப்பணிப்போம்.

இவ்வாறு ஹைபர் வெற்றியின்போது அபூ முஷஜ்ஜம் என்பவனின் நெருக்கத்துக்குரிய ஒரு பணிப்பெண் கைதியாக பிடிபட்டாள். அவளை நபியவர்கள் அப்துல்லாஹ்வுக்கே வழங்கினார். அபூ முஷஜ்ஜம் அவளை அப்துல்லாஹ்விடமிருந்து 1000 திர்ஹங்களுக்கு வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டான், ஸுப்ஹானல்லாஹ்!

முஸ்லிம்கள் 1400 தோழர்கள் மற்றும் 20 ஸஹாபிப் பெண்மணிகளுடன் ஹைபர் களத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹைபருக்கு வந்தபோது ஒரு பெரும் துஆப் பிரார்த்தனையில் ஈடுபட்டார்கள். பின்னர் இஸ்லாமிய படையை முகாமிடுவதற்கு ஓர் இடத்தைத் தெரிவு செய்தார்கள். அவ்விடத்தை ஆட்சேபித்த ஹப்பாப் இப்னு முன்திர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் "இது வஹியின் தீர்மானமா? அல்லது யுத்த தந்திரமா?" என வினவினார்கள். நபியவர்கள் "யுத்த தந்திரம்" எனக் கூறியபோது அதனை விட சிறந்த ஓர் ஆலோசனையை முன்வைத்தார்கள். அப்போது நபியவர்கள் அவரது ஆலோசனையை ஏற்று மதித்தார்கள். எனினும், "நாம் பின்வாங்குவது எதிரிகள் எம்மைக் கோழைகளாகக் கருதி அவர்கள் உளரீதியான பலத்தைப் பெறுவார்களாயின் நாம் ஒருபோதும் அசையவே மாட்டோம்" எனக் கூறினார்கள்.

முற்றுகை 15 நாட்களாகத் தொடர்ந்து பசி, தாகம், களைப்பு அனைவரையும் ஆட்கொண்டது. அப்துல்லாஹ் இப்னு மக்பல் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கொஞ்சம் வெண்ணெய் பெற்றுக் கொண்டு "நான் யாருக்கும் தர மாட்டேன்" என கூவிச் சென்றார். இதனை செவியேற்ற நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவரைப் பார்த்து புன்னகைத்தார். உடனே அவர் வெட்கித் தலை குனிந்து ஏனைய ஐந்து ஸஹாபாக்களுடனும் பகிர்ந்து சாப்பிட்டார்கள்.

* நபியவர்களின் கற்பித்தல் உத்திகளில் அவரது பார்வையும் புன்னகையும்கூட செல்வாக்குச் செலுத்தியுள்ளது. அன்னாரின் கற்பித்தல் முறைமைகளை நாமும் பின்பற்றுவோம்.

முஸ்லிம்கள் ஹைபரை முற்றுகையிட்டு 13 நாட்கள் கடந்தும் ஹைபரை இலகுவாக வெற்றிக் கொள்ள முடியவில்லை. நபியவர்களுக்கு தலைவலி ஏற்பட்டது. அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) போர்க் கொடியை ஏந்திப் போரிட்டார். பின்னர் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் போர்க் கொடியை ஏந்திப் போரிட்டார். எவராலும் வெற்றிக் கொள்ள முடியவில்லை. ஸஹாபாக்கள் சிறிது ஆட்டம் காண்பதை உணர்ந்தார்கள். பதினான்காம் நாள் இரவில் இஷாத் தொழுகையின் பின் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "நாளை ஸுப்ஹுத் தொழுகைக்குப் பின் போர்க் கொடியை ஒருவருக்கு கொடுப்பேன். அல்லாஹ் அவர் மூலம் எமக்கு வெற்றியைத் தருவான். அவர் அல்லாஹ்வையும் தூதரையும் விரும்புபவர். அவரை அல்லாஹ்வும் தூதரும் விரும்புகிறார்கள். அவர் விரண்டோட மாட்டார்" எனக் கூறினார்கள். ஸஹாபாக்கள் ஒவ்வொருவரும் அந்தப் பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ள முந்தியடித்துக் கொண்டு ஸுப்ஹ் தொழுகைக்காக முதல் பந்தியில் உட்கார்ந்திருந்தார்கள். தொழுகை முடிந்த பின் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கொடியை அனைவருக்கும் தெரியும் வகையில் நிலத்தில் நட்டினார்கள். பின்னர் "எங்கே அலி?" என வினவினார்கள். அதற்கு தோழர்கள் "அல்லாஹ்வின் தூதரே! அவருக்கு கண் வலி ஏற்பட்டுள்ளது" எனக் கூறினார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் சென்று "அலியே! பூமியில் சாய்ந்து எனது மடியில் உனது தலையை வையுங்கள்" எனக் கூறி, குர்ஆனிய வசனங்களை ஓதி, தனது முபாரக்கான கரங்களால் அவரது கண்களைத் தடவினார்கள். அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகின்றார்கள்:

"நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது கண்ணைத் தடவிக் கொண்டிருப்பதற்காக எனது கண் வலி தொடர்ந்திருக்க வேண்டுமே என ஆசைப்பட்டேன்."

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "அலியே! போர்க்கொடியை பற்றிப் பிடிப்பீராக! பின் வாங்காதே!" எனக் கூறினார்கள். "அல்லாஹ்வின் தூதரே! நான் எவ்வாறு அவர்களுடன் போரிட வேண்டும்" என வினவினார்கள்.

(58ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்: மறுமைச் சகோதரிகளுக்கான வழிகாட்டி
- பதீஉஸ் ஸமான் ஸஈத் நூர்ஸி -

# உணர்வுகளைத் தாண்டி உயிரோடு உறவாடிய ஒரு துடிப்புள்ள பனுவலின் பகிர்வு

■சஜியா மனார்தீன், ஜாமிஆ ஆயிஷா ஸித்தீகா ■




ஈமானின் அத்திவாரம் பதுகாக்கப்பட வேண்டும். ஏனெனில், அதற்கு ஏற்படக்கூடிய சவால்கள் புதுமையா னவை. அவற்றுக்கு முகங்கொடுப்பதற்கு ஈமானிய சிந்தனை புதுவிதமாக மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதற்காக, அனைத்து முயற்சிகளையும் ஒருமுகப்படுத்தி பேனா முனையிலான ஒரு ஜிஹாத் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற தூரநோக்கோடு வாழ்ந்து மறைந்தவரே பதீஉஸ்ஸமான் ஸஈத் நூர்ஸி அவர்கள். தான் நாடு கடத் தப்பட்டிருந்தபோது அவர் மேற்கொண்ட பேனா முனையிலான ஜிஹாத் "ரிஸாலா ஏ நூர்" வாழ்வின் யதார்த்தங்களை படம் பிடித்துக் காட்டும் ஒரு கெமரா.

பல நூல்களைப் படித்திருந்தாலும் அவற்றில் மனதைக் கொள்ளை கொள்பவை ஒரு சில நூற்களே! அந்த வகையில் ரிஸாலா ஏ நூர் தொகுப்பிலிருந்து மொழியாக்கம் செய் யப்பட்ட "மறுமைச்சகோதரிகளுக்கான வழிகாட்டி" எனும் நூல் என் கரம் கிட்டும்போது மழைத் துளி மண்ணைத் தொடும் ஆனந்தத்தை உணர்ந்தேன். துருக்கி மொழியில் எழுதப்பட்ட இதனைத் தமிழில் தந்தவர் பூகம்பம் எனும் ஒரு மாவீரனின் வரலாற்றோடு புரட்சி எழுத்தாளராக எழுத்துலகில் அறிமுகமாகிய புத்தாக்க சிந்தனையாளர் ஆஸிம் அலவி அவர்கள். தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நூல்களை வழங்கியதினூடாக தஃவாப் பணிக்குப் பங்க ளிப்புச் செய்த இவர் 'ரிஸாலா ஏ நூர்' தொகுப்பிலிருந்தும் பல நூல்களை மொழிபெயர்த்துள்ளார்.

பதீஉஸ் ஸமான் பற்றிய அறிமுகத்தோடு ஆரம்பமாகும் இந்நூல் அவருடைய உயர் சிந்தனைகளையும் கொள்கை உறுதியையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இதனை வாசிக்கும், போது ஸஈத் நூர்ஸி அவர்கள் எம்மோடு நேரடி யாக உரையாடுவது போலவும் அவர் எம்மை ஈமானிய உறவாக ஏற்றுப் போஷிப்பதாகவும் உணர முடிகிறது. ஆன்மிகப் பூஞ்சோலைக்குள் நுழைந்து எம்மால், அங்கு ஈமானிய வாசத்தை மாத்திரமே நுகர முடிகிறது. ஒவ்வோர் எழுத்திலும் இஸ்லாம் எனும் தேனமுதமே பரவிக் கிடக் கிறது.

"புகழ்ச்சிக்குரிய இறைவனின் பெயரால் மறுமையை ஈமான் கொண்ட எனது சகோதரிகளுடன் ஓர் உரையாடல்" என்பதனூடாக அவர் எம்மோடு பேச ஆரம் பிக்கின்றார். "இளை ஞர்களுக்கான வழி காட்டி" எனும் நூலைத் தொடர்ந்து, அவரு டைய ஈமானிய சகோ தரிகளுக்கான இந்நூலை உடல் பலவீனமான, நோ யுற்றிருந்த வேளையில் எழுதியிருக்கிறார் என்பதை ஆரம்பத் திலேயே அறியத் தரு கிறார். பெண்களின் வீரம்கலந்தகருணையே முஸ்லிம் சமூகத்தின் மகிழ்ச்சியின் அடித்தளங்கள் என்று தாய்மையின் கருணையால் தொடங்கி, ஒரு பெண்ணின் குடும்ப வாழ்வு சிதைவுறுவதற்கான காரணங்களையும் அழகாக முன்வைக்கிறார்.

"குழந்தைகளைக் கொஞ்சுவதும் அவர்களோடு அளவளாவுவதும் 100 சினிமாக்களைப் பார்ப்பதை விட மனதுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியது" என்ற இவருடைய வார்த்தை குழந்தைகளைக் கவனிக்க நேரமில்லாமல் சினிமாவுக்குள் புதையுண்டு போயிருக்கும் எத்தனையோ தாய்மார்களை நோக்கி வீசப்படுகின்றது. 'சுபசோபனமும் எச்சரிக்கையும்' எனும் பகுதியை வாசித்து முடித்தபோது உடலுக்குள் புது இரத்தம் பாய்ச்சப்பட்டதாக உணர்ந்தேன்.

ஸஈத் நூர்ஸி அவர்களின் உலகப்பற்றற்ற தன்மையும் அவரால் உணர்த்தப்பட்ட இறை பணியின் பாரமும் சமூகத்தை நேர் வழியில் நடத்திட வேண்டும் என்பதற்கான ஆர்வமும் நூலில் ஆங்காங்கே வெளிப்படுவதைக் காண லாம். இஸ்லாம்தான் அவருடைய வாழ்வின் முழுப் பகுதியையும் ஆட்கொண்டிருந்தது. அவர் அதற்காக அவருடைய வாழ்வையே அர்ப்பணித்தார். இருந்தபோ திலும், தன்னால் இந்த தீனுக்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள் போதவில்லையே என்ற ஏக்கம் நிறைந்த அந்த எழுத்துக்கள், சமூகப் பற்றின்றி, சமூகக் கவலையின்றி எந்த அழைப்பாளனாலும் தஃவாவை செவ்வனே நிறைவேற்றிட முடியாது என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்நூலில் எனது கவனத்தை ஈர்த்த மற்றுமொரு பகுதியே 'இருபத்தி நான்காம் மின்னல்' (Flash) மகளிர் உடை சார்ந்தது. தெளிவான நோக்கங்களின்றி நாம் அணியும் ஹிஜாபின் நோக்கங்களைத் தர்க்க ரீதியாக உள்ளத்தில் உறுதியாகப் பதித்து விட்டது இந்நூல்! தர்க்க ரீதியாகவும் பகுத்தறிவு ரீதியாகவும் அல்குர்ஆன், ஹதீஸ்களை விளக்கும் இவர், விஞ்ஞானம் கண்ணாடித் துண்டுகள் என்றால்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**தர்க்க ரீதியாக உள்ளத்தில் உறுதியாகப் பதித்து விட்டது இந்நூல்! தர்க்க ரீதியாகவும் பகுத்தறிவு ரீதியாகவும் அல்குர்ஆன், ஹதீஸ்களை விளக்கும் இவர், விஞ்ஞானம் கண்ணாடித் துண்டுகள் என்றால் அல்குர்ஆன் வசனங்கள் வைரங்கள் என்று எல்லா இடங்களிலும் இஸ்லாத்தின் கொள்கைக்கும் அதன் சட்டங்களுக்கும் விஞ்ஞானத்தை விட தனி இடம் கொடுத்து மதிப்பளித்திருக்கிறார்.**

அல்குர்ஆன் வசனங்கள் வைரங்கள் என்று எல்லா இடங்களிலும் இஸ்லாத்தின் கொள்கைக்கும் அதன் சட்டங்களுக்கும் விஞ்ஞானத்தை விட தனி இடம் கொடுத்து மதிப்பளித்திருக்கிறார்.

என்னைப் பொறுத்தவரையில் "மறுமைச் சகோதரிகளுக்கான வழிகாட்டி" எனும் இந் நூலை ஒவ்வொரு பெண்ணும் கட்டாயம் வாசிக்க வேண்டும். ஏனெனில், இம்மையிலும் மறுமையிலும் விமோசனம் பெற முயற்சிக்கும் யுவதிகளுக்கும் தாய்மார்களுக்குமான வழிகாட்டல்கள் அதிலே குவிந்து கிடக்கின்றன.

ஆகவே முஸ்லிம் சமூகத்தின் நலனுக்காக, இறை தீனுக்காகத் தன்னுடைய வாழ்வையே அர்ப்பணித்த ஸஈத் நூர்ஸி அவர்களின் பணிகளை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக. முஸ்லிம் பெண்களின் நலனுக்காக மூல நூலிலிருந்து அதன் பொருள் குன்றாமல், அப்படியே மொழிபெயர்த்துத் தந்த சகோதரர் ஆஸிம் அலவி அவர்களுக்கும் அல்லாஹ் ஈருலக நற்பாக்கியங்களையும் அளிப்பானாக! ■

---

**பாடசாலைப் பயிற்சிகளில்...** *(32ஆம் பக்கத் தொடர்)*

*05.* குழந்தை சுயமாகச் செய்ய முடியுமான வேலைகளை அவர்களாகவே செய்யவிடல்.

*06.* குழந்தையின் முயற்சிகளைப் பாராட்டுதல்.

*07.* பாடசாலைக் கல்வியை வாழ்க்கையோடு இணைத்து விடல். இணையத்தில் தகவல்களை தேடப் பயிற்றுவித்தல்.

**குழந்தையிடத்தில் பாடமீட்டலில் உள்ள தாமதத்தை நீக்கு வதற்கு பின்வரும் வழிமுறைகள் துணை புரியும்:**

*01.* நீ தாமதமாகச் செய்கிறாய் என்று குழந்தைகளிடம் சொல்லாதிருத்தல்.

*02.* குறித்த நேரத்தில் வேலைகளைச் செய்து முடிக்க குழந்தையைப் பயிற்றுவித்தல்.

*03.* ஒவ்வொரு பாடமீட்டலுக்குமான நேரத்தை வரைய றுத்துக் கொடுத்தல். இடைக்கிடையே ஓய்வு வழங்குதல்.

*04.* தொடர்ச்சியாக குழந்தையை ஆர்வமூட்டுதல்.

*05.* நேரசூசி (Time Table) முறையைக் கையாளுதல்.

*06.* பாட மீட்டலை சிறு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றாக நிறைவு செய்ய வழிகாட்டல்.

இவ்விதமாக உங்கள் குழந்தைகள் விடயத்தில் உங்களுக்கு கண் குளிர்ச்சி ஏற்பட வேண்டும் என வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றோம்.


**Pharmacy Assistants தேவை**

அக்குறணை நகரிலுள்ள பிரபலமான Pharmacy ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த Pharmacy Assistants தேவை கவர்ச்சிகரமான சம்பளத்துடன் தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.

**BIO PLUS PHARMACY (PVT) LTD.**
261, Matale Road, Akurana. Mob: 077 3703059



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையாள மூலம்: ஷெய்க் முஹம்மத் காரக்குன்னு ▸ தமிழில்: ஜே. இஸ்ஹாக்

# முஸ்லிம் நாடுகளில் கோயில்கள் நிர்மாணிப்பதற்கு அனுமதிக்கப்படுமா?

ஆயினும் நடந்ததோ வேறு! ஒன்பது மாதங்களுக்குள் பாக்கிஸ்தானிலும் பங்களாதேஷிலும் உடைக்கப்பட்ட அத்தனை கோயில்களும் அரசாங்கத்தினால் புனரமைக்கப்பட்டன! இந்த விடயத்தை பல இந்திய நாளிதழ்கள் பிரசுரித்திருந்தன.

**கேள்வி: மதச் சார்பற்ற நாடுகளில் போன்று அல்லது அதை விட சிறந்த முறையில் இஸ்லாமிய நாடுகளில் சிறுபான்மையினர் மதச் சுதந்திரம் அனுபவிக்க முடியும் என்று நீங்கள் கூறினீர்கள் அல்லவா? அவ்வாறாயின் உலகில் எங்காவது முஸ்லிம் நாடுகளில் இந்துக்களுக்கு கோயில் நிர்மாணிப்பதற்கு அனுமதிப்பார்களா? பாகிஸ்தானிலும் பங்களாதேஷிலும் கோயில்கள் உடைத்து நொறுக்கப்படுகின்றதே!**

*மறுமொழி:* பாக்கிஸ்தான், பங்களாதேஷ் உட்பட உலகில் இந்துப் பிரஜைகள் வாழும் நாடுகளில் எல்லாம் இந்துக் கோயில்கள் நிர்மாணிப்பதற்கும் அவற்றில் வழிபாடுகள் செய்வதற்கும் பூரண அனுமதி உண்டு. இதில் அரசாங்கமோ மக்களோ எந்தத் தலையீடும் செய்ய மாட்டார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு மலையாள நாளிதழான மாத்ருபூமி பத்திரிகை பின்வரும் செய்தியை வெளியிட்டிருந்தது:

"பங்களாதேஷ் அரசாங்கம் இந்துக் கோயில்களினதும் சத்திரங்களினதும் புனரமைப்பிற்கு பல இலட்சம் ரூபா ஒதுக்கியிருந்தது. இந்தத் தீர்மானத்தை எடுத்த நீதி மற்றும் மத விவகாரங்களுக்கான அமைச்சர் நூருல் இஸ்லாம், தாம் எல்லா மதங்களினதும் நலவை நாடுவதாகக் குறிப்பிட்டார்."
*(மாத்ருபூமி 04.10.1985)*

இன்னுமொரு பெரிய முஸ்லிம் நாடான இந்தோனேஷியா குறித்து R.S.S. இந்து தீவிரவாத அமைப்பினால் வெளியிடப்படும் கேசரி வார மஞ்சரி பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

"இந்தோனேஷியாவில் எல்லா மதப் பிரிவினருக்கும் தத்தமது மதத்தைப் பின்பற்றுவதற்குப் பூரண சுதந்திரம் நல்கப்பட்டுள்ளது. இஸ்லாம், பௌத்த மதம், இந்து மதம், கிறிஸ்தவ மதம் ஆகிய நான்கு மதங்களும் இங்கே சம அந்தஸ்துடன் நடத்தப்படுகின்றன. அரசாங்கத்தினால் மதங்களைக் கவனிப்பதற்கென்றே மத விவகார அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அங்கு அனைத்து மதத்தினரும் இணக்கப்பாட்டுடனும் நட்புறவுடனும் வாழ்கிறார்கள்."
*(கேசரி 07.06.1987)*

பாகிஸ்தானில் ஜன்மாஷ்டமி, தீபாவளி போன்ற இந்துப் பண்டிகைக் காலங்களில் அரசாங்கம் சலுகை விலையில் அரிசி, சீனி போன்றவற்றை இந்து சகோதரர்களுக்கு விஷேடமாக வழங்குகின்றது. லாஹூரில் கிறிஸ்தவர்களுக்கான தனியான அடக்கஸ்தலம் அமைப்பதற்கு அரசாங்கம் ஆறு இலட்சம் ரூபாவை ஒதுக்கியது.

*1992*இல் பாபரி மஸ்ஜித் தகர்க்கப்பட்டபோது பாகிஸ்தானிலும் பங்களாதேஷிலும் இருந்த சில அறிவீனர்கள் இந்துக் கோயில்கள் சிலவற்றைத் தாக்கினார்கள் என்பது உண்மையே. ஆயினும், அங்கிருந்த நல்ல முஸ்லிம்களே இக்கோயில்கள் பலவற்றைத் தாக்கவிடாமல் பாதுகாத்தனர். இச்சந்தர்ப்பத்தில் பிரபல கேரள கவிஞர் சுகதா குமாரி இந்தியா டுடேயில் பின்வருமாறு எழுதினார்:

"பாபரி மஸ்ஜிதை தகர்த்ததன் மூலம் இந்துக்களுக்கு என்ன இலாபம் கிடைத்தது? அயல் நாடுகளில் பல கோயில்கள் தகர்க்கப்பட்டன. தகர்க்கப்பட்ட பள்ளிவாசலை மீண்டும் கட்டிக் கொடுக்காமல் இருப்பதற்கு நமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாச்சாரம் இடம் கொடுக்கவில்லை. ஆயினும், இவ் அயல் நாடுகளில் தகர்க்கப்பட்ட கோயில்களை மீண்டும் கட்டிக் கொடுப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கின்றது?"

ஆயினும் நடந்ததோ வேறு! ஒன்பது மாதங்களுக்குள் பாக்கிஸ்தானிலும் பங்களாதேஷிலும் உடைக்கப்பட்ட அத்தனை கோயில்களும் அரசாங்கத்தினால் புனரமைக் கப்பட்டன! இந்த விடயத்தை பல இந்திய நாளிதழ்கள் பிரசுரித்திருந்தன. அந்த பத்திரிகைச் செய்திகளின் விப ரங்களைச் சேகரித்து இந்திய டுடே கட்டுரையின் நிழற் பிரதியுடன் கட்டுரையாசிரியர் கவிஞர் சுகதா குமாரிக்கு அனுப்பியபோதும் அவரிடமிருந்து எவ்வித மறுமொழியும் கிடைக்கப் பெறவில்லை. இதற்குக் காரணம் அவர் எதிர்வு கூறி நாடு முழுவதும் பிரச்சாரம் செய்ததற்கு முற்றிலும் மாற்றமாக சம்பவங்கள் நடைபெற்றமையாகும்.(ஆயினும் இன்றுவரை பாபரி மஸ்ஜித் எவராலும் புனரமைக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும் - மொழி பெயர்ப்பாளர்).

ஏனைய மதத்தினரின் மத சின்னங்களை அவமதிப்பதை அவர்களின் மத வழிபாட்டுத் தலங்களுக்கு தீங்கு விளை விப்பதை இஸ்லாம் முற்றாகவே தடுத்திருக்கிறது. புத்தி யற்ற யாராவது சிலர் அவ்வாறு மதஸ்தலங்களை உடைத்து விட்டால் அவற்றைப் புதுப்பித்துக் கட்டிக் கொடுக்க வேண்டியது இஸ்லாமிய அரசாங்கத்தினதும் முஸ்லிம் சமூகத்தினதும் பொறுப்பாகும்.

**கேள்வி: மத்திய கிழக்கு நாடுகளில் கோயில் நிர்மா ணிப்பதற்கு தடைவிதித்திருப்பது ஏன்?**

மறுமொழி: மத்திய கிழக்கு நாடுகளில் இந்துப் பிர ஜைகள் எவரும் கிடையாது. அங்கே தொழில் நிமித்தம் சென்றுள்ள இந்துக்களே வசிக்கின்றார்கள். இந்துக்களுக்கு மாத்திரமன்றி வெளியில் இருந்து அங்கு சென்றுள்ள எவ ருக்கும் காணிகள் வாங்குவதற்கோ வேறு மதஸ்தலங்கள் கட்டுவதற்கோ அங்கு அனுமதி கிடையாது. வெளியில் இருந்து வந்துள்ள முஸ்லிம்களுக்கும் இதே சட்டம்தான். தமக்கு என ஒரு பள்ளிவாசலை நிர்மாணித்துக் கொள்வ தற்கு அவர்களுக்கு அனுமதி கிடையாது. இந்தியாவிலும் இதர நாடுகளிலும் இதே சட்டம்தான் அமுலில் உள்ளது. வெளிநாட்டவர் எவரும் அங்கு சென்று மத ஸ்தலங்கள் நிர்மாணிக்க அனுமதி கிடையாது.

இதேவேளை சில மத்திய கிழக்கு நாடுகள், சிந்து இந் துக்களுக்கு மாத்திரம் இந்துக் கோயில்கள் கட்டுவதற்கு அனுமதி நல்கியுள்ளன. இதற்குக் காரணம், இவர்கள் மிக நீண்ட காலமாக அங்கு வசித்து வருவதுடன் நாட்டின் அபிவிருத்திக்கு கணிசமான பங்களிப்பும் செய்துள்ள மையமாகும். இந்த வகையிலேயே அவர்களுக்கு இச்சலுகை வழங்கப்பட்டது. R.S.S. அமைப்பினால் வெளியிடப்படும் கேசரி வார மஞ்சரி பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

"சிந்திகளும் இந்துக்களும் காலனித்துவக் காலம் முதலே மஸ்கட், பஹ்ரைன், டுபாய் போன்ற நாடுகளில் வசித்து வருகின்றனர். இந்த நாடுகளின் அபிவிருத்தியில் இவர்கள் அதிக பங்களிப்பு நல்கியிருந்தனர். இதனை உணர்ந்து கொண்ட அந்நாட்டு அரசாங்கங்கள் இவர்களுக்கு விஷேட சலுகைகள் வழங்க முன்வந்தன. அதன் விளை வாக இந்துக் கோயில்கள் கட்டுவதற்கு இந்த இடங்களில்

**1992இல் பாபரி மஸ்ஜித் தகர்க்கப்பட்டபோது பாகிஸ்தானிலும் பங்களாதேஷிலும் இருந்த சில அறிவீனர்கள் இந்துக் கோயில்கள் சிலவற்றைத் தாக்கினார்கள் என்பது உண்மையே. ஆயினும், அங்கிருந்த நல்ல முஸ்லிம்களே இக்கோயில்கள் பலவற்றைத் தாக்கவிடாமல் பாதுகாத்தனர்.**

ஓர் அரிய சந்தர்ப்பம்

கண்ணில் வெள்ளை படர்தல் நோய்க்கான சத்திர சிகிச்சை (Cataract Surgery)
விஷேட வில்லையுடன் கட்டணம்
ரூபா. 15,000/-
குவைத் வைத்தியசாலை புத்தளம்
தொடர்புகளுக்கு:
0322266480, 0777272107, 0718183833
மாதம் இருமுறை கத்னா செய்யப்படும் 2950.00 மட்டுமே
ஜனவரி மாத பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்ஸிலிருந்த சனக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு மெல்ல இறங்கினாள் நஸீமா. கணவர் பேச்சைசுமக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டதால் அவளால் கைவீசி நடக்க முடிந்தது. அவள் பிறந்த மண்ணில் கால் வைத்து விட்டாள். காற்று அவளை இதமாகத் தழுவிக் கொண்டது. சந்தோச அலைகள் பொங்கியெழ நிலாக் காலத்துக் கடலாய் மனம்.

பஸ்ஸிலிருந்து இறங்கும்போதே வீடு கண்ணுக்குத் தெரிகிறது. பஸ் சத்தம் கேட்டதாலோ என்னவோ உம்மா முன் வாசலில் காத்திருந்தா. தங்கச்சியின் பிள்ளைகள் குதூகலத்தோடு வீதிக்கே வந்து விட்டார்கள். ஊரில் வந்து சில நாட்கள் தங்க வேண்டுமென்பது அவளது நீண்ட நாள் ஆசை. கெஞ்சிக் கூத்தாடி கணவனை இழுத்துக் கொண்டு வந்துவிட்டாள். தங்கச்சி ஸலாமாவுக்கு காலையிலிருந்து சமைத்த களைப்பெல்லாம் தாத்தாவின் முகம் கண்டதால் நீங்கிவிட்டது.

“புள்ள தாத்தாக்கும் மச்சானுக்கும் என்னவாலும் ஊத்துங்களேன்” என்றார் உம்மா.

“வேணாம். சாப்பாடு ரெடியெண்டா சாப்பிட்டாச் சரி” என்றாள் நஸீமா.

“எனக்கும் நல்ல பசி. மாமிட சாப்பாட்ட நெனச்சி வயித்த அடக்கிக் கொண்டு வந்தன். இனி லேட்டாக்காம சாப்பாட்டத் தாங்கோ!” ராஸிக் சொல்லவும் உம்மாவுக்குச் சிரிப்பாக இருந்தது.

அவசரமாக சாப்பாட்டு மேசையைத் தயார் பண்ணினாள் ஸலாமா. நெய்ச் சோற்றின் மணம் மூக்கைத் துளைத்தது. வகை வகையாய்க் கறிகள். கத்தரிக்காய் பொரித்து சீனி போட்டு ஆக்கி... ம்... தெற்கின் ஸ்பெஷல் கறி. பத்தியச் சாப்பாட்டால் மரத்துப்போன நாவுக்கு நல்ல விருந்துதான். சாப்பிட்டு முடிய புதியதொரு வகைப் புடிங்கைப் பரிமாறினாள் ஸலாமா.

“தங்கச்சி சமையல்ல உம்மாவ மிஞ்சிடும் போல” என்றாள் நஸீமா.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அனைவரும் சந்தோசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். வந்த களைப்பு கதையோடு தீர்ந்தது. இரவுச் சாப்பாடு நானா வீட்டில்.


“நஸீமா! பகல் நல்ல புடியொன்டு புடிச்சாச்சி ராவைக்குக் கொஞ்சம் கவனமாக சாப்பிடத்தான் சரி” என்றார் ராஸிக்.

“சும்மா இரிங்களேன். இவ்வளவு நாளும் பத்தியம்தானே. வந்த எடத்திலயும் சட்டம் பேச ஏலா” கணவனின் வாயை அடக்கி விட்டாள் நஸீமா.

நானா வீட்டில் இடியப்ப புரியாணி, கோழிக் கறி மாசிப் பொரியல், அன்னாசிச் சட்னி என சாப்பாடு மேசையை அலங்கரித்தது. சாவாரைப் பார்த்தாலும் தின்பாரைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பார்களே. இருவரும் ரசித்து ருஷித்துச் சாப்பிட்டார்கள். கோடை காலச் சூட்டுக்கு ஐஸ்கிறீம் இதமாக இருந்தது.

“ரெண்டு நேரம் கட்டுப்பாட்ட மீறிட்டோம். இனிக் கவனமாக இரிக்க வேணும்” ராஸிக் எச்சரித்தார்.

கணவனுக்குப் பயந்து தங்கையிடம் கெஞ்சி காலைச் சாப்பாட்டுக்கு



# அன்புக்கும் உண்டோ...

-ஷாறா-

இலைக் கஞ்சி செய்தாள் நஸீமா.

“மகள், ஸலீம் நானா ஊட்டில கல்யாணத்துக்கு கூப்பிட்ட. நீங்க வரல்லயே, மருமகனையும் கூட்டிக் கொண்டு போனால் நல்லம்” உம்மா ஞாபகப்படுத்தினார்.

“ஓ உம்மா, ஹாஜரா புதிய ஊட்டுக்கும் போகோணும்.”

இரு இடங்களுக்கும் அன்பளிப்புகளை எடுத்துக் கொண்டு இருவரும் கிளம்பினார்கள். எத்தனை வீட்டுக்கும் போகலாம். சாப்பிடவும் குடிக்கவும் தருவது தானே பிரச்சினை. இருவரும் டயபடிக் நோயாளிகள் என்று எவ்வளவோ சொல்லியும் கேட்கத் தயாரில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டயபடிக் என்ன உலகத்தில இல்லாத நசலா? எனக்கும் டயபடிக், பிரஷர் எல்லாம் இரிக்கு. அதுக்காக தின்னாம இரிக்க ஏலுமா? இருக்கும் வரைக்கும் திண்டிட்டு சாக வேண்டியதுதான்" நியாயம் பேசினார் ஸலீம் நானா.

இரு வீடுகளிலும் தொதல், மஸ்கட், தோசி என்று எல்லாவற்றையும் வயிற்றுக்குள் திணித்தார்கள்.

"ஒன்டும் ஊத்த வேணாம். பச்சத் தண்ணி போதும்" என்றால் அதையும் கேட்கத் தயாரில்லை. டீ, கோப்பி, ட்ரிங்ஸ் என்று ஏதாவதொன்று குடிக்க வேண்டுமென நிர்ப்பந்தித்தார்கள். இவற்றுக்கு பதில் பழச்சாறு தந்தால் எவ்வளவு ஆரோக்கியம் என நினைத்தார் ராஸிக்.

"இது சரிவராது நஸீமா. நாங்க ஊட்டுக்குப் போறதுதான் சரி. இப்படி விருந்து திண்டா ஹொஸ்பிடலுக்குதான் போக வேண்டிவரும். எங்கட சமூகத்துட சாப்பாட்டுப் பழக்கம் சரியான மோசம்" என்றார் ராஸிக்.

"எனக்கும் விளங்குது. ஆனா எவ்வளவு காலமா ஆசப்பட்டு ஊரில தங்க வந்த. வந்ததோட தங்கிட்டுப் போவோமே" கெஞ்சினாள் நஸீமா.

பகல் சாப்பாடு தம்பி வீட்டில். அதுவும் அதே கதிதான். போதாததற்கு வட்டிலப்பம் வேறு செய்திருந்தார்கள். கொஞ்சமாகப் போட்டு சாப்பிடப் பார்த்தால் அதற்கும் விடவில்லை.

"ஒரு வருஷத்துக்குப் பொறகு சாப்பாட்டுக்கு வந்திருக்கிற. அதுல வேற கட்டுப்பாடு" என்றான் தம்பி.

"ரெண்டு பேருக்கும் சீனி. தெரியும்தானே மச்சான்" ஞாபகப்படுத்தினார் ராஸிக்.

"சீனி என்ன பெரிய விஷயமா? நல்லாத் திண்டிட்டு டப்லட் போடுங்கோ எல்லாம் சரி" என்றான் தம்பி. நஸீமாவுக்கும் ரசித்துச் சாப்பிட முடியவில்லை. வலது கை வலித்தது. உடம்புக்கு கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. கணவனிடம் ஏச்சு வாங்க வேண்டும் என்ற பயம் வேறு.

அங்கு அஸர் வரை பேசிக் கொண்டிருந்து விட்டு கிளம்பும்போதே ராஸிக் சொன்னார்.

"நஸீமா! பேக்க எடுத்துக் கொண்டு வாங்கோ! ஊட்டுக்கு போவோம். இல்லாட்டி அம்பியூலன்ஸ்லதான் கொண்டு போக வேண்டி வரும்."

"ப்ளீஸ். இன்னம் ஒரு நாளாவது..." அவள் மன்றாடினாள்.

"அப்ப இனி ஒரு ஊட்டுக்கும் போறல்ல."

"டின்னருக்கு சாச்சி கூப்பிட்டிருக்கிற. போகாட்டி சரியில்ல..." அவளுக்கு கண்கள் கலங்கின.

"அப்ப நீங்க போங்கோ! நான் வரமாட்டன்" கண்டிப்பாகச் சொன்னார் ராஸிக்.

"சாச்சி கோவிப்பாவே! ப்ளீஸ்..."

"எல்லார்டயும் சந்தோசத்துக்காக எங்கட ஆரோக்கியத்த விக்க வேண்டியிருக்குது. தல நஸீபு..." ராஸிக்கிற்கு எரிச்சலாக இருந்தது.

சாச்சி வீட்டில் இரவு சாப்பிட்ட பின் கொஞ்சம் நடந்தால் சரி எனக் கணவனை ஆறுதல்படுத்தினாள் நஸீமா. இருவரும் நடக்கத் தொடங்கினார்கள்.

"தாத்தாவும் மச்சானும் வந்திருக்கிற என்டு உம்மா சொன்னா. பாக்க வரவும் கெடைகல்ல. வாங்களேன் ஊட்டுல வந்து கோப்பியொன்டு குடிச்சிட்டுப் போங்களேன்."

சாச்சியின் மகன் ஷிராஸின் பிடியிலிருந்து விடுபட முடியவில்லை.

"மாமியக் கண்ட காலம். வாங்களேன் டீயொன்டு குடிக்க" தாத்தாவின் மருமகள்.

"ஒன்ன ஏண்ட மகள்ட கலியாணத்துக்கும் வந்து கூப்பிடக் கெடைக்கல்ல. இப்ப வந்து டீயாவது குடிச்சிட்டுப் போ!" வகுப்புத் தோழி ஹனியா.

"நடையும் மண்ணங்கட்டியும் ஊட்டுக்குப் போய்த் தூங்குவோம்" ராஸிக் அவளைத் திரும்பியும் பார்க்காமல் நடந்தார். ராஸிக்கால் இரவு தூங்க முடியவில்லை. உடம்புக்கு அசௌகரியமாக இருந்தது. ஊரில் தங்க விடாமல் கணவர் இழுத்துக் கொண்டு போய்விடுவாரே என்ற ஏக்கத்தில் நஸீமாவும் தூங்கவில்லை.

காலையில பெரியும்மா வந்திருந்தா.

"பகல் சாப்பாடு ஏண்ட ஊட்டில"

"மாமி! நான் நோம்பு" என்றார் ராஸிக்

"நல்ல கத எத்தின வருஷத்துக்கு பொறகு ஊரில தங்கியிருக்கிற. இந்த நாளிலதானா நோம்பு புடிக்கோணும்?" ஒண்டும் பேசக் கூடாது. இண்டைக்குப் பகல் சாப்பாடு ஏண்ட ஊட்டில. விருந்துக்கு கூப்பிட்டா சுன்னத்தான நோம்ம உட வேணும் தெரியும்தானே!" இடுப்பில் கையை ஊன்றியபடி கறாராகச் சொன்னார் பெரியும்மா. ராஸிக் திக்குமுக்காடிப் போனார். அந்தக் குடும்பத்தில் யாரும் பெரியும்மாவை எதிர்த்துப் பேசும் பழக்கமில்லை.

"சரி அப்பிடியென்டா சோப்பரிசிச் சோறும் மீனும் மரக்கறியும் கீரையும் செஞ்சி வைங்கோ. நாங்க வாரோம்."



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"நல்லாயிருக்கு, நீங்க என்னத்த ஏன் புள்ளய எந்த நாளுமா கூட்டிக் கொண்டு வார? எத்தினயோ வருஷத்துக்குப் பொறகு வார. அதுக்குள்ள சட்டம் பேச வர வேணாம்."

பெரியும்மாவின் கோப கணைக்குப் பயந்து வாயைப் பொத்திக் கொண்டார்கள்.

புரியாணியில் கை வைக்கவும் மனமில்லை.

"நல்லாத் திண்டிட்டு பாவக்க ஜூஸ் குடிச்சா சரி" பெரியம்மா உபதேசித்தார்.

அதற்கு மேலும் தாக்குப் பிடிக்க முடியாதென்பதை உணர்ந்த நஸீமா கணவருடன் வீட்டுக்கு கிளம்ப உடன் பட்டாள். உடல் நிலை சரியில்லாததால் வாடகைக் காரிலேயே புறப்பட்டார்கள்.

** ** ** **

"ஆண்டவனே இதென்ன அநியாயம். பாவம் ரெண்டு பேரும்" புலம்பினார் சாச்சி.

"பாருங்களேன் சாச்சி. ரெண்டு பேரும் ஐ.ஸீ.யூ விலயாம். எனக்கு மேலெல்லாம் நடுங்குது" ஸலாமாவுக்கு அழுகை வந்தது.

"பெயித்து ரெண்டு நாள் ஆகவுமில்ல. இங்க இருக்கிற நேரம் எவ்வளவு சந்தோசமாக இருந்தாங்க" கண்களைத் துடைத்துக் கொண்டாள் மதினி.

"யாராலும் சூனியம் செஞ்சிருக்கும் பொறாம புடிச்ச துகள்" இது சாச்சியின் ஊகம்.

"இல்லடி கண்ணூறு. புள்ளகளைக் கலியாணம் முடிச்சிக் குடுத்த பொறகும் புதிய ஜோடி மாதிரி வந்து சந்தோ சமாக சுத்தி திரிஞ்சாங்களே. நான் அப்பவே நெனச்சன்" அதுவரை அழுது கொண்டிருந்த பெரியும்மா சாரித் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்னார்.

"ஏன் புள்ள, ஒண்ட உம்மாக்காவது கண்ணூறு கழிச்சி அனுப்பத் தெரியாதா?"

ஸலாமாவிடம் கேட்டார் பெரியும்மா.

"அவங்க அவசரமா போனதால உம்மாக்கும் நெனவு வந்திருக்காது."

"அது சின்ன வேலதானே. மூனு உப்புக் கட்டிய எடுத்து ரெண்டு பேர்டையும் தலயச் சுத்தி அடுப்பில போட்டி ருந்தாச் சரி, கண்ணூறு இருந்தா உப்புக் கட்டி பட பட என்டு வெடிச்சிருக்கும். அதோட கண்ணூறு கழிஞ்சிரும். அந்தச் சின்ன விஷயத்த மறந்ததாலதான் அவளுக்கு இந்தக் கதி" புலம்பியபடி வந்து நின்ற வேனில் ஏறினார் பெரியும்மா.

வேன் அனைவரையும் சுமந்து கொண்டு விரைந்து கொண்டிருந்தது.



உம்ரா - டிசம்பர் 2014

"ஓர் உம்ரா மறு உம்ரா வரையிலுள்ள பாவங்களுக்குப் பரிகாரமாகும்" (புகாரி:1773)

நபி வழியில் உம்ரா செய்து இபாதத்களை திருப்தியுடன் நிறைவேற்ற

TGL TRAVELS

உங்கள் பயணத்தில்

1st Group Departure
24th December, 2014
Time: 11.45
Flight #SV 789

Arrival
4th January 2015
Flight # SV 782

- உங்கள் அமல்களை உரிய முறையில் செய்யவும் வழிகாட்டவும் உங்களுடன் இணைகின்ற தகைமை மற்றும் அனுபவமிக்க உலமா
- கொழும்பு - ஜித்தா நேரடி விமான சேவை
- இரு ஹரம்களுக்கு அருகாமையில் தங்குமிடம்
- இலங்கை முறைப்படி மூன்று வேளை உணவு
- இஸ்லாமிய புனிதத் தலங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு

- டிசம்பர் 24 இல் எமது முதலாவது உம்ரா குழு புறப்படும்.
- 2015 ஆம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதத்திற்குமான உம்ரா பதிவுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இன்னும் சில பதிவுகளே எஞ்சியுள்ளதால் இறுதி நேர சிரமங்களிலிருந்து விடுபட இப்போதே பதிவுகளுக்கு முந்துங்கள்...

Next Groups
January - 22
February - 19

மட்டக்களப்பு கிளை அலுவலகம்
இல 277, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு

தொடர்புகளுக்கு Ash. Arshad: 0777630288
Al Haj Rizmy: 0777801262 Hijaz Sanoos: 0777800388

TGL TRAVELS & TOURS (PVT) LTD.
Airline Ticketing Agent & Hajj - Umrah Operators
90, Chatham Street, Colombo 01. Tel: 0115341134 Fax: 0115371410
www.tglhajjumrah.com E-mail: umrah-haj@tgl.lk
Since 1990
IATA Accredited Agent


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழப்பவன் பெற்றுக் கொள்கிறான்

வெற்றிக்கான வழிமுறைகள் - 08

ஹிந்தி மூலம்:
மௌலானா வஹீதுத்தீன் கான்
தமிழில்:
ஸியெம்மே அமீன்

நீங்கள் வட பகுதியில் இருந்துகொண்டு தென் பகுதி போக நாடினால், முதலில் நீங்கள் வட பகுதியைக் கைவிட வேண்டும். அதன் பிறகுதான் நீங்கள் தென் பகுதியில் இருக்க முடியும். ஒருவன் இறைவன் மீது விருப்ப முடையவனாக இருந்தால், அவனும் ஒரு வகையில் ஒரு பிரயாணிதான். அவன் தன்னுடைய இலக்கை அடைய விரும்பினால், அதற்கு முக்கிய மான ஒரு நிபந்தனை உண்டு. அவன் தன்னுடைய பழைய இடத்தைக் கைவிடுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். அதற்குப் பிறகே, தான் இலக்காகக் கொண்ட இறைவனை அடையும் ஆனந்தத்தை அனுபவிக்க முடியும்.

உலகின் ஒழுங்கு எத்தகையதென்றால், இங்கே பெற்றுக் கொள்வதற் காகக் கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. பெற்றுக் கொள்ளும் இரகசியம் இழப்பதில் மறைந்திருக்கிறது.

நீங்கள் ஏதேனும் இலாபம் தரக்கூடிய ஒரு தொழில் அதிபராக விரும் பினால், முதலில் உங்களுடைய மூலதனத்தை அதில் இட வேண்டி நேர் கின்றது. வயலில் பசுமையான பயிர்களைப் பார்த்துக் கண்குளிர்ச்சியடைய விரும்பினால், முதலில் தன்னுடைய விதைக் களஞ்சியத்தை மண்ணில் சேர்த்து விட வேண்டியிருக்கும். நீங்கள் திட்டமிட்ட அடிப்படையில் தூரநோக்கை அடிப்படையாகக் கொண்ட பயனை நாடிச் செயலாற்ற விரும்பினால், அவ்வப்போது எழக்கூடிய உணர்வுகளை நசுக்கிவிடத் தயாராக இருக்க வேண்டும். பணக்காரனாக நாடினால், வீண் செலவு களிலிருந்து தவிர்ந்துகொள்ள வேண்டும்.

எந்தத் துணிக்கை பிளவுறவில்லையோ அது ஒருபோதும் மூலக்கூற்றுச் சக்தியாக மாற மாட்டாது. விதை தன்னைத்தானே அழித்துக் கொள்ளா விட்டால், அது மரத்தின் உருவைப் பெற மாட்டாது. மனிதன் தனது சுயநலத்தைத் தியாகம் செய்யாமல் சமூக நலத்தை நிலைநிறுத்தும் உச்சக் குறிக்கோளை அடைய முடியாது.

“ எந்தத் துணிக்கை பிளவுறவில்லையோ அது ஒருபோதும் மூலக்கூற்றுச் சக்தியாக மாற மாட்டாது. விதை தன்னைத்தானே அழித்துக் கொள்ளா விட்டால், அது மரத்தின் உருவைப் பெற மாட்டாது. மனிதன் தனது சுயநலத்தைத் தியாகம் செய்யாமல் சமூக நலத்தை நிலைநிறுத்தும் உச்சக் குறிக்கோளை அடைய முடியாது. ”

இறைவனைப் பற்றிய விடயத்துக்கும் இது பொருந்தும். இறைவன் முன்னிலையில் தன்னைத்தானே அர்ப்பணிப்பவனே ஆஸ்திகவாதியா கின்றான். எவன் தன்னுடைய ஆளுமையை அர்ப்பணிக்கத் தயாராக இல்லையோ, அவன் ஒருபோதும் ஆஸ்திகனாக மாட்டான்.

இறைவனை அடைவதற்குத் தன்னைத்தானே அர்ப்பணிக்க, இழக்க வேண்டியேற்படுகிறது. இந்தச் சொல்லில்தான் இறைவனை அடையும் இரகசியம் இருக்கின்றது. எவன் தன்னையும் இறைவனையும் அடைய விரும்புகின்றானோ, அவன் தன்னை மட்டுமே அடைந்துகொள்வான் அத்தகைய மனிதன் ஒருபோதும் இறைவனை அடையக்கூடியவனாக ஆக மாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09ஆம் பக்கத் தொடர்) **பொய்யை அடித்தளமாக...**

சமூக வலைப் பின்னல்களுடன் தொடர்புறுகின்ற ஒரு முஸ்லிம் சகோதரன் பொய்யனாக இருக்க முடியாது. அதாவது, அவனிடத்தில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும். பொய் என்பது நயவஞ்சகத்தனம் என்ற கருத்தை நாம் ஏலவே இங்கு குறிப்பிட்டுள்ளோம். அது ஈமானை சுட்டெரித்துவிடும். ஆகவே, ஒரு மு்ஃமினிடத்தில் உலோபித்தனமும் கோழைத்தனமும் இருக்க முடியும். ஆனால், பொய் அறவே இருக்க முடியாது என்பது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது வழிகாட்டலாகும்.

"ஓர் இறை விசுவாசி கோழையாக இருக்க முடியுமா?" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வினவப்பட்டது. "ஆம்! அவன் "கோழையாக இருக்க முடியும்" என அவர்கள் பதிலளித்தார்கள். "அவன் உலோபியாக இருக்க முடியுமா?" என வினவப்பட்டது. "ஆம்! அவன் உலோபியாக இருக்க முடியும்" என்றார்கள். "ஓர் இறைவிசுவாசி பொய்யனாக இருக்க முடியுமா?" உன நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வினவப்பட்டது. "அவன் பொய்யனாக இருக்க முடியாது" என அவர்கள் பதிலளித்தார்கள். (முஅத்தா)

சமூகத்தளத்தில் சிறியோர் முதல் பெரியோர் வரை பொய் ஆதிக்கம் செலுத்துகின்றது. குடும்ப வாழ்விலும் வர்த்தக, வாணிப நடவடிக்கைகளிலும் திருமணப் பேச்சுவார்த்தையின் போதும் வழக்காடு மன்றங்களிலும் ஊடக செயற்பாடுகளின்போதும் பொய் வியாபித்து மலிந்துள்ளது. சமூகத்தில் மலிந்து விட்ட ஷரீஅத்தில் தடுக்கப்பட்ட படுமோசமான பண்பை இளம் பராயத்திலிருந்தே களைந்து விடுவதற்கான உளவியல் ரீதியான அணுகுமுறைகளைப் பயன்படுத்த வேண்டும். ஒரு பிள்ளையின் உடல் வளர்ச்சியோடு உள்ளமும் வளருகின்றது. உடலுக்குத் தொற்றுகின்ற நோயைக் களைவதற்கு பெற்றோர்கள் பிரயாசை எடுப்பது போல் உள்ளத்தில் தொற்றுகின்ற நோய் குறித்தும் தீவிர கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும். பிள்ளை வளர்ந்த பின் படுமோசமான பண்பும் வளர்ந்து முதிர்ச்சியடைந்து விட்டால் அதனை இலகுவாக இல்லாதொழிப்பது சிரம சாத்தியமே.

அபூ ஆமிர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் சிறியவராக இருந்தபோது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவரது வீட்டுக்குச் சென்றார்கள். வீட்டில் இருந்த அபூ ஆமிர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை நோக்கி அவர்களது தாய் "அபூ அமீர்! இங்கே வாருங்கள். உங்களுக்கு ஓர் இனிப்புப் பண்டம் தருகின்றேன்!" என்றார்கள். இதனைக் கண்ணுற்ற நபியவர்கள் "நீங்கள் உங்கள் பிள்ளைக்குத் தருவதாக வாக்களித்ததை அந்தப் பிள்ளைக்கு கொடுக்கவில்லையெனில் உங்களது பெயர் பொய்யர்களின் பட்டியலில் இடம் பெறும்" என எச்சரித்தார்கள்.

பொதுவாக மனித உடல் வளர்ச்சியுடன் சேர்ந்தே மனிதப் பண்புகளும் வளர்ந்து முதிர்ச்சியடைகின்றன என்பது இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது உளவியல் கருத்தாகும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

"மனிதன் வளர்ந்து முதிர்ச்சியடைந்ததுடன் சேர்ந்து இரு குணவியல்புகளும் வளர்ந்து முதிர்ச்சியடைகின்றன. சொத்து செல்வத்தின் மீதுள்ள மோகமும் நீண்ட நாட்களுக்கு வாழ வேண்டும் என்ற ஆசையும்." (ஸஹீஹுல் புகாரி)

இன்று பொய்யை அடித்தளமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றவர்கள் தங்களது சிறு பராயத்தில் பண்புசார் விருத்தி தொடர்பில் பெற்றோர்கள் மற்றும் பொறுப்புதாரர்களினால் பராமரிப்பு இன்றி கைவிடப்பட்டவர்களே!

எனவே, இன்று பொய்யை அடித்தளமாகக் கொண்டு ஊடக வன்முறையில் ஈடுபடுகின்றவர்களுக்கான இஸ்லாமிய உளவள ஆலோசனைகளை வழங்க வேண்டியது சமூக மாற்றம் குறித்து சிந்திக்கின்ற அனைவரினதும் கடமையாகும்.

---

25ஆம் பக்கத் தொடர்) **பில்கீஸ் பின்த் ஷராஹீல்...**

அவள் "என் இறைவனே எனக்கு நானே அநீதி இழைத்துக் கொண்டேன். ஸுலைமானுடன் சேர்ந்து அகிலங்களின் இறைவனான அல்லாஹ்வுக்கு நான் அடிபணிந்து முஸ்லிமாகி விட்டேன்" என்று கூறினாள். (27: 44)

தமக்கு அநீதி இழைத்துக் கொண்டதாக பீல்கீஸ் வருந்துகிறார். ஏனெனில், அன்றுவரை "அவளும் அவளுடைய சமூகத்தாரும் அல்லாஹ்வை விடுத்து சூரியனுக்கு சிரம்பணிவோராகவே இருந்தனர்." (27: 24)

போர் புரிவதற்கான தெரிவைப் பிரமுகர்கள் தமக்கு முன்வைத்தபோதிலும் தமது புத்திசாலித்தனமான தீர்மானத்தின் மூலம் இஸ்லாத்தில் நுழைந்து அவரது சமூகமும் இஸ்லாத்தில் நுழைந்து அல்லாஹ்வுக்கு முற்றாக அடிபணிய காரணமாக இருந்தார் அரசி பில்கீஸ் (அலைஹஸ்ஸலாம்).

**மணமகன் தேவை**

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த இஸ்லாத்தைத் தழுவிய தற்போது குவைத்தில் தொழில் புரியும் மார்க்கப்பற்றும் நற்குணமுமுள்ள மணமகளுக்கு (வயது 34) பொருத்தமான துணை தேவை.

தொடர்புகளுக்கு: 0096597612864, 075 8088303
E-mail: disnyland198@gmail.com
Skype ID: heart3766

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(48ஆம் பக்கத் தொடர்) **ஸீராவிலிருந்து...**

"அலி! முதலில் இஸ்லாத்தின்பால் அவர்களை அழைப்பீராக! உன் மூலம் ஒருவருக்கு நேர்வழி கிடைப்பது சூரியன் உதிப்பதை விட சிறந்தது" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உபதேசித்தார்கள். அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஹைபர் கோட்டைக்கு அருகில் சென்றபோது ஒரு யூதன் "நீ யார்?" என வினவினார். "நான் அலி இப்னு அபீதாலிப்" என பதிலளித்தார். அந்த யூதன் "மூஸாவை தூதராக அனுப்பியவன் மீது சத்தியமாக! அலி எனும் பெயருடைய ஒருவர்தான் ஹைபர் கோட்டையை வெற்றி கொள்வார் என மூஸாவின் சமூகத்தில் கூறப்பட்டு வந்தது. அவர் வந்துவிட்டார் நீங்கள் தோல்வியடைவீர்கள்" எனச் சப்தமிட்டான்.

முஸ்லிம்கள் எட்டுக் கோட்டைகளையும் வெற்றிக் கொண்டார்கள். இரண்டாம் கோட்டை வெற்றி கொள்ளப்பட்டபோது ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. அங்கே ஆடுகளை மேய்க்கின்ற ஒரு கறுப்பின அடிமை ஒருவர் இருந்தார். அவர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் "கறுப்பு நிற அடிமையான சொத்து செல்வ மற்ற, துர்வாடை வீசும் நான் இஸ்லாத்தை ஏற்று இவர்களுடன் போரிட்டு கொலை செய்யப்பட்டால் எனக்கு சுவனம் கிடைக்குமா?" என வினவினார். அதற்கு நபியவர்கள் "ஆம், உனக்கும் சுவனம் கிட்டும்" எனக் கூறினார்கள். உடனே நபியவர்களிடம் அனுமதி பெற்று தன்னிடம் பொறுப்பாக ஒப்படைக்கப்பட்டுள்ள தனது சமூகத்தாரின் ஆடுகளைக் கொண்டுபோய் திருப்பி ஒப்படைத்துவிட்டு வந்தார்கள். பின்னர் யுத்தத்தில் குதித்து இறுதிவரை போரிட்டு ஷஹீதுடைய அந்தஸ்த்தைப் பெற்றுக் கொண்டார்கள். அப்போது நபியவர்கள் கூறினார்கள்:

"அல்லாஹ் உனது முகத்தை அழகுபடுத்தட்டும்; உனது வாடையை நறுமணமாக்கட்டும்; உனது செல்வத்தைப் பெருக்கட்டும்!" மேலும் கூறினார்கள்: "நான் ஹூருல் ஈன்களில் இருவரை காண்கிறேன். அவர்களிருவரும் இவர் மீது கொண்ட வேட்கையின் காரணமாக முரண்பட்டுக் கொள்கின்றார்கள். அவர்களிருவரும் அவரது ஜுப்பாவுக்குள் நுழைந்து கொள்கிறார்கள்."

கனீமத் பொருட்கள் அங்கே பகிரப்பட்ட வேளையில் ஒரு ஸஹாபி எழுந்து "அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாம் இதனைப் பெறுவதற்காக அல்லாஹ்வின் தூதரைப் பின்பற்றவில்லை. எமது வருகையின் நோக்கம் நாம் ஷஹீதாக்கப்பட வேண்டும்" எனக் கூறி தனது கழுத்தை விரல்களால் சுட்டிக்காட்டினார்கள். அப்போது ஒரு யூதனின் அம்பு அவரது கழுத்தை பதம் பார்த்தது. அவர் அவ்விடத்திலேயே ஷஹீதானார். அப்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "அவர் அல்லாஹ்வை உண்மைப்படுத்தினார். அல்லாஹ்வும் அவரை உண்மைப் படுத்தி விட்டான்" எனக் கூறினார்கள்.

* தூதுத்துவத்தின் சொந்தங்களே! நீங்கள் அல்லாஹ்வை உண்மைப்படுத்துங்கள். அல்லாஹ் உங்களை உண்மைப் படுத்துவான். நீங்கள் அவனை உண்மைப்படுத்துவதற்காக அவன் உங்களை சோதிப்பான். நீங்கள் வெற்றி பெற்று விட்டால் அவன் உங்களுக்கு உதவுவான்.

சில நாட்களின் பின்னர் ஹைபர் வாசிகள் முஸ்லிம்களிம் சரணடைந்தார்கள். கனானா கோத்திரத்தார் அல்லாஹ்வின் தூதருடன் உடன்படிக்கை செய்து கொண்டனர். அதன் முக்கிய நிபந்தனைகள் வருமாறு:

01. ஆயுதங்களைக் களைதல்

02. ஹைபரிலிருந்து வெளியேறுதல்

03. பயிர் நிலங்களை உரியவர்களிடம் ஒப்படைத்து விடுதல்

(ஒவ்வொரு வருடமும் விளைச்சலில் அரைப் பகுதியை இஸ்லாமிய அரசுக்கு ஒப்படைக்க வேண்டும்)

முஸ்லிம்கள் இந்த யுத்தத்தில் வெற்றி பெற்றார்கள். வெறும் பதினாறு முஸ்லிம்கள் மாத்திரமே ஷஹீதானார்கள். இந்த வெற்றியின் மூலம் ஹைபரை பாதுகாப்புப் பிரதேசமாக மாற்றினார்கள். பொருளாதார ரீதியில் விளைச்சலில் வருடாந்தம் அரைவாசியைப் பெற்றுக் கொண்டார்கள். குறித்த பிரதேச மக்களுக்கும் வேலை வாய்ப்புக்களை வழங்கி புவியை வளப்படுத்தினார்கள்.

ஒரு முறை நபித் தோழர் ஒருவர் விளைச்சலில் முஸ்லிம்களின் பங்கை எடுக்கச் சென்றபோது அதனைக் குறைத்துக் கொடுப்பதற்காக யூதர்கள் இலஞ்சம் வழங்கத் தயாரானார்கள். உடனே அந்த நபித் தோழர் "நீங்கள் அல்லாஹ்வின் தூதரின் பங்கில் எனக்கு இலஞ்சம் தருகின்றீர்களா?" என எச்சரித்தார்கள்.

பாடங்கள், படிப்பினைகள்:

01. முஸ்லிம்கள் சமாதானப் பிரியர்கள்; யுத்த வெறியர்களல்ல.

02. முஸ்லிம் நாடுகளில் புலனாய்வு நடவடிக்கைகளின் அவசியம்.

03. தூதுத்துவப் பணியில் அல்லாஹ்வுடன் உண்மையாக நடந்து கொள்ளுதல்.

04. பின்வாங்குதல், தயக்கம் கூடாது.

அல்ஹஸனாத் இதழுக்கு சந்தாக்கள் அனுப்ப நாடுவோர் ALHASANATH என்ற பெயருக்கு Money Order எடுத்து தபாலகம் DEMATAGODA எனக் குறிப்பிட்டு அனுப்பவும். வங்கியில் வைப்பிலிட நாடுவோர் Srilanka Jamath - E-Islami AC NO: 1320009182, Commercial Bank, Maradana அல்லது Srilanka Jamath - E-Islami AC NO: 372132, B.O.C, Maradana எனும் வங்கிக் கணக்கில் குறித்த தொகைப் பணத்தை வைப்பிலிட்டு பற்றுச்சீட்டை அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mount Royal International

## Girls only School
## &
## Pre - School (for Girls & Boys)

**Mount Royal International is an English medium School located in Dehiwala, which offers value based education. We provide a secure and stimulating environment with a variety of facilities to help children nurture their independence, self-esteem, discipline & senses.**

### Pre - School

**Age requirements:-**

Reception:2 to 4 years
Pre-grade:4 to 5 years

### Girls School

**Admissions offered for**

Grade 1 to Grade 10
(All grades)

## Free Admission !!!
**Offer valid for the 2015 intake**

- We have over a decade of experience in the field of education
- We provide high quality education.
- We provide individual attention.
- Focus on the cognitive, social, emotional & physical needs of the child.
- Fees payable monthly.

**Shariyah compliant**

-Qu'ran, Hadees, Duas and Arabic language taught

Trained teachers
Convenient location

**Tel: +94 112 712 149, +94777 394 208**
**#67, Kawdana road, Dehiwala**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# O/L பரீட்சையினை அடுத்து?

ஒவ்வொரு மாணவியினதும்
ஆளுமை மற்றும் திறன்களை
இனங்கண்டு அவற்றை விருத்திசெய்து
அவர்களது வாழ்விற்கு புது அர்த்தம் சேர்ப்பதுடன்
இம்மை மறுமை வாழ்வின் வெற்றிக்காய் தயார்படுத்தும்

**ஓர் சிறந்த பயிற்சிநெறி**

## Life Program

பெண்களுக்கான 04 மாதகால வதிவிட பயிற்சிநெறி

பயிற்சிநெறிக் கட்டணம்
22000/=

எமது அடுத்த பயிற்சிநெறி
2015 ஜனவரி 4 ஆரம்பம்

**இஸ்லாமியக்கல்வி**
**Computer Studies**
**வாழ்க்கைக்கலை**
**English**
**சமையற்கலை**
**Art and Craft**
**ஆரோக்கிய வாழ்வு**
**Counseling**


தொடர்புகளுக்கு
0777 967667
071 9900355

skill academy

No: 38/2, Kandy Road, Welamboda

facebook.com/skill.lk
twitter.com/skill_lk
www.skill.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in GPO/QD/12/NEWS/2014 Printed by AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.




ISO 9001: 2008 Certified Company

TURNKEY IT CAMPUS — Join the No.1

# சர்வதேச அங்கீகாரமுடைய Network Engineer ஆவதற்கு நீங்களும் விரும்புகிறீர்களா?

IT துறையில் அதிஉயர் சம்பளத்தை பெறக்கூடிய NETWORK துறையில் இன்றே இணையுங்கள்.

## Bsc (Hons) Computer Systems & Networking

University of Greenwich

1½ Years

ACHNP®

Advanced Certified Hardware & Network Professional

Six Recognized Certifications

- CISCO CCNA — Cisco Certified Network Associate
- Microsoft Certified Technology Specialist — Microsoft Certified Solution Associate
- CLNA — Linux Network Admin with Security
- CWNA — Windows Network Administration
- CHEN — Hardware Engineering with Networking

MCSE Server 2012 — Exam 70 - 413, 70 - 414

MCSA Server 2012 — Exam 70 - 410, 70 - 411, 70 - 412

MCSA Windows 8 — Exam 70 - 687, 70 - 688

CISCO

CCIE — Routing & Swithing written Exam 350 - 001

CCNP — IP Routing, IP Switch IP Tshoot

CCNA — R&S Voice, Security

CompTIA A+ N+

C|EH Certified Ethical Hacker

Microsoft Partner

PEARSON VUE-Authorised Test Centre

## Multimedia Engineering

Graphic Designing

Web Designing

Web Development

MySQL php APACHE

## TURNKEY ஏன் தெரிவு செய்ய வேண்டும்?

- இலங்கையில் Hardware and Networking துறையில் அதிகமான வல்லுனர்களை உருவாக்கிய முதன்மை நிறுவனம்.
- Authorized Test Center for CISCO & Microsoft Examinations.
- வெளிநாட்டு தூதரகங்களிலும் தொழில் வாய்ப்பு வழங்குனர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச சான்றிதழ்.
- Cisco, Microsoft and Networking பாடநெறிகளுக்கு உயர்தரமிக்க பரிசோதனைக் கூடம்.
- மறைமுகக் கட்டணங்கள் இல்லை.

TURNKEY IT TRAINING

*Dedicated for Professional Coaching*

2 581581

**COLOMBO**
562/15B, Lower Bagathale Road,
(Road adjoining Premadasa Jewellers-Sea side)
Colombo 03.
Tel: 2 581581, 2 595336, 077 2286988

**KANDY**
504/1, Peradeniya Road, Kandy.
Tel: 081 2205678, 077 5077456

An Institution registered with Tertiary and Vocational Education Commission of Sri Lanka. Reg No. PO1/200

HOTLINE 0772 286 988

Now register for any course online @ www.turnkey.lk

info@turnkey.lk www.facebook.com/turnkeycolombo

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org